janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi | janasakthitholaikatchi



புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

நிறுவனர்: ப. ஜீவானந்தம்

மலர் 85 | 2023 பிப்ரவரி 12 - பிப்ரவரி 18 | விலை: ரூ.15 | 16 பக்கங்கள் | இதழ் 45




இயக்கங்கள் தொடரட்டும் — ப 02



குடியரசுத் தலைவர் உரையில் இடம்பெறாத இந்தியக் கவலைகள் — ப 03



பிப். 12–ல் அகில இந்திய சமாதான ஒருமைப்பாட்டுக் கழக மாநில மாநாடு — ப 05



## அனைத்திந்திய மாணவர் பெருமன்ற 16வது தமிழ்நாடு மாநில மாநாடு!

# பல்லாயிரக்கணக்கில் பங்கேற்ற மாணவர்களின் எழுச்சிமிகு பேரணி

## வடசென்னை குலுங்கியது!

கட்டணமில்லாக் கல்வி! மதவெறிக்கு இடமில்லாக் கல்வி வளாகம்! என இரு முழக்கங்களை முன்வைத்து அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் தமிழ்நாடு மாநில 16வது மாநாடு வடசென்னை மாவட்டம், தண்டையார்பேட்டையில் பிப். 5, 6, 7 தேதிகளில் நடைபெற்றது. இதையொட்டி, 41 மாவட்டங்களில் மாநாடுகள், பேரவைகள் மற்றும் அமைப்புக் கூட்டங்கள் நடைபெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. பிரதிநிதிகள் மாநாட்டில் 55 மாணவிகள் உட்பட 290 பேர் கலந்து கொண்டனர்.




### எழுச்சிமிகு மாணவர் பேரணி

பிப்.5 ஆயிரக்கணக்கான மாணவர்கள் பங்கேற்ற பேரணி தண்டையார்பேட்டை ஜீவா மணிக்கூண்டு அருகே துவங்கியது. இப்பேரணியை மாணவர் பெருமன்றத்தின் முன்னாள் மாநிலச் செயலாளர் க.சந்தானம் தொடங்கி வைத்து பேசியபோது, மாநில மாநாட்டுப் பேரணி என்பது தமிழகம் மட்டுமல்ல இந்தியா முழுவதும் உள்ள மாணவர்களின் கல்வி உரிமையை பாதுகாக்கவும், பொதுக் கல்வி கட்டமைப்பை பாதுகாக்கவும், வலுப்படுத்தவும் வீறு கொண்டு எழும் என்ற மகிழ்ச்சியோடு பேரணியைத் தொடங்கி வைக்கிறேன்.

வீர முழக்கத்துடன் தொடங்கிய இப்பேரணியில் வடசென்னையைச் சேர்ந்த பள்ளி மாணவர்கள் சீருடை அணிந்து பங்கேற்று இருந்தனர். அவர்கள் எழுப்பிய முழக்கம் காண்போருக்கு கண்கவர் காட்சியாக அமைந்தது.

மாணவர்களின் உரிமை முழக்கப் பொதுக்கூட்டம்

பொதுக்கூட்டத்திற்கு மாணவர் பெருமன்றத்தின் மாநிலத் தலைவர் மௌ.குணசேகர் தலைமை வகித்தார். மாநில பொருளாளர் சு.பாலசுப்பிரமணியன் வரவேற்புரை ஆற்றினார். மாநில துணைச் செயலாளர்கள் ஜி.ஆர்.தினேஷ்குமார், ச.பூர்ணிமா நந்தினி, மாநில துணைத் தலைவர்கள் ஆ.பிரகாஷ், பா.தினேஷ், ஆர்.முகில் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பொதுக்கூட்டத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா.முத்தரசன் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். மேலும், தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் பொதுச் செயலாளர் மு.வீரபாண்டியன், இளைஞர் பெருமன்றத்தின் அகில இந்திய பொதுச் செயலாளர் இரா. திருமலை, மாணவர் பெருமன்றத்தின் அகில இந்திய பொதுச் செயலாளர் விக்கி மகேசரி, இளைஞர் பெருமன்றத்தின் மாநில தலைவர் த.கு.வெங்கடேசன், அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் மாநிலச் செயலாளர் தினேஷ் சீரங்கராஜ், சென்னை மாமன்ற உறுப்பினர் எம்.ரேணுகா ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.

புதுக்கோட்டையைச் சேர்ந்த மாணவப் போராளி செல்லமுத்துவின் தியாகஜோதி, முன்னாள் மாவட்டச் செயலாளர் விஜய் தலைமையில் எடுத்துவரப்பட்டு பொதுச் செயலாளர் விக்கி மகேசரியிடம் ஒப்படைக்கப்பட்டது. இறுதியாக மாநில துணைச் செயலாளர் இரா.இராமசாமி நன்றியுரை ஆற்றினார். அலங்கை சக்தி ஒளி மற்றும் மதுரை செங்கதிர் கலைக் குழுவினரின் பறை இசை நடன நிகழ்ச்சியும், நாடகமும் அரங்கேற்றப்பட்டன.

### பிரதிநிதிகள் மாநாடு

பிப்ரவரி 6ஆம் தேதி நடைபெற்ற பிரதி

தொடர்ச்சி 4ம் பக்கம்

## மாநிலக் குழு, நிர்வாகிகள் தேர்வு

மாநிலத் தலைவர்:
**தினேஷ் சீரங்கராஜ்**

துணைத் தலைவர்கள்:
**ஆ.பிரகாஷ்**
**வெ.நிருபன்**
**ரா.விக்ரம்**
**பா.சினேகா**

மாநிலச் செயலாளர்:
**பா.தினேஷ்,**

துணைச் செயலாளர்கள்:
**ஜே.பி.வீரபாண்டியன்**
**இரா.ராமசாமி**
**கு.முத்துலட்சுமி**
**கே.பிரபு**

மாநிலப் பொருளாளர்:
**க.இப்ராகிம்**

உள்ளிட்ட 73 பேர் கொண்ட மாநிலக் குழுவுக்கு தேர்வு செய்யப்பட்டனர்.



தினேஷ் சீரங்கராஜ்



பா.தினேஷ்



க.இப்ராகிம்



கட்சிக் கடிதம்

# இயக்கங்கள் தொடரட்டும்



பேரன்புமிக்க தோழர்களே !

**மக்கள் பிரச்சனைகளுக்காக, அவைகளின் தீர்வுகளுக்காக நாம் மேற்கொண்டு வரும் இயக்கங்கள் மேலும் மேலும் தீவிரமாகட்டும்.**

நமது கட்சியின் மாநில நிர்வாகக் குழு கூட்டம் பிப்ரவரி 3, 4 ஆகிய இரு தினங்கள் தஞ்சை வடக்கு மாவட்டம் கும்பகோணத்தில், தோழர் மு.அ.பாரதி தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் மாநில நிர்வாகக் குழு உறுப்பினர்கள் அனைவரும் பங்கு பெற்றது குறிப்பிடத்தக்கதாகும்.

கூட்டத்திற்கான ஏற்பாடு, தங்குமிடம், உணவு மற்றும் கூட்டம் நடைபெறும் அரங்கம், விளம்பரம் என அனைத்தையும் மாவட்டக்குழு சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தது பாராட்டுக்குரியது.

கூட்டத்தில் மிக முக்கியமாக நாட்டின் அரசியல் நிலை, ஒன்றிய அரசின் நிதி நிலை அறிக்கை, தமிழ்நாட்டில் நிலவும் அரசியல் போக்குகள் குறித்து விரிவான விவாதம் நடைபெற்றது. விவாதம் மிக பயனுள்ளதாகவும், அடுத்தடுத்து நாம் மேற்கொள்ள வேண்டிய அரசியல், அமைப்பு நிலை கடமைகள் குறித்து வழிகாட்டுவதாக இருந்தது.

ஏழைகளின் பால் இரக்கம் காட்டாத ஒன்றிய அரசு 2023–24 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை உற்று நோக்கின் உண்மை புலப்படும்.

வேளாண்மை பணி ஒன்றையே நம்பி உள்ள கிராமப்புற பாட்டாளி மக்களுக்கு தற்போது வேளாண் பணிகள் என்பது எட்டாக்கனியாகிவிட்டது. பிழைப்புத் தேடி புலம்பெயரும் அவல நிலையைப் போக்கவும், அவர்களின் ஒருவேளை கஞ்சிக்கு வழிவகை செய்து வந்த மகாத்மா காந்தி வேலை உறுதி அளிப்பு திட்டத்துக்கு மோடி மகான் ஆட்சிக்கு வந்திட்ட நாள் தொட்டு, ஆண்டுக்காண்டு நிதி குறைக்கப்பட்டு வருகின்றது.

தற்போதைய நிதி அறிக்கை சென்ற ஆண்டைக் காட்டிலும் வெகுவாக குறைக்கப்பட்டு விட்டது. சென்ற நிதியாண்டில் ரூ.89 ஆயிரம் கோடி ஒதுக்கப்பட்ட நிலையில் நடப்பாண்டிற்கு வெறும் ரூ.60 ஆயிரம் கோடி மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சென்ற ஆண்டைக் காட்டிலும் 33% குறைக்கப்பட்டுள்ளது.

சிறுபான்மையினருக்கான கல்வி உதவித்தொகை 38% குறைக்கப்பட்டுள்ளது. சென்ற நிதியாண்டில் ரூ.2516 கோடி. நடப்பாண்டில் வெறும் ரூ.1689 கோடி மட்டுமே! ஏன் இந்த புறக்கணிப்பு!

இத்தகைய மக்கள் விரோத நிதிநிலை அறிக்கையினை கண்டிப்பது மட்டுமின்றி, பிரதமர் நரேந்திர மோடியின் மிக மிக உற்ற நண்பரான மோசடிக்கார அதானி குழுமம் கொள்ளையடித்த பல்லாயிரம் கோடி ரூபாய் குறித்து நாடாளுமன்ற கூட்டுக் குழுவில் விசாரணை தேவை என்று வலியுறுத்தி, நாடாளுமன்ற இரு அவைகளிலும் எதிர்க்கட்சிகள் நாள்தோறும் போராடி வருகின்றன.

அவர்களது போராட்டத்திற்கு மதிப்பளித்து விசாரணை நடத்திட வலியுறுத்தி வரும் 13.02.2023ல் நாடு முழுவதும் இயக்கங்கள் நடத்திட தேசிய குழு விடுத்துள்ள அறைகூவலை ஏற்று தமிழ்நாடு முழுவதும் போராட்டம் நடத்திடவும், பல்லாயிரம் பேர் பங்கேற்கவும் வேண்டுமென மாநில நிர்வாகக் குழு முடிவு செய்துள்ளது.

ஒன்றிய அரசு ஆர்.எஸ்.எஸ். அராஜக அமைப்பின் கைப்பாவையாக செயல்பட்டு, மூர்க்கத்தனமான மக்கள் விரோத முடிவுகளை நாள்தோறும் மேற்கொண்டு வருவதை, நாம் நாள்தோறும் எதிர்த்து முறியடித்திட அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டியது நம் முன் உள்ள மிகப்பெரிய கடமையாகும்.

தமிழகத்தில் நிலவும் அரசியல், சமூக பொருளாதார நிலை குறித்து நமது தோழர்கள் எடுத்துக் கூறியது வரவேற்கத்தக்கதாகும்.

**ஆதிக்க சக்திகளின் ஆணவப் போக்குகள் குறைந்தபாடில்லை. தலித் மக்களின் மீதான தாக்குதல், கொலை வெறிச் செயல்கள், தீண்டாமை, சாதி மறுப்பு திருமணங்களுக்கு எதிரான வன்முறைகள், கொலைகள், தற்கொலைகள், குடிதண்ணீரில் மலம் கலக்கப்படுவது, ஆலயத்தில் நுழையாதே என்ற கூக்குரல், கிராமப்புற குளங்களில் இறங்கக்கூடாது, முடிவெட்டி கொள்வதற்கு தடை, குடிநீருக்கு தடை என தொடர்வதை வெறுமனே கடந்து சென்றுவிட முடியாது. ஒரு போதும் அனுமதிக்கவும் கூடாது.**

குடியிருப்புமனை பட்டா கிடைக்காமல் கோயில் மனையில் குடியிருப்போருக்கு கட்ட முடியாத அளவிற்கு வாடகையை முந்தைய அதிமுக அரசு உயர்த்தியதை மறுபரிசீலனை செய்து தீர்வு காண அரசு முன்வர வேண்டும். மாறாக தொகையைக் கட்டத் தவறினால் வீடுகளுக்கு சீல் வைக்கின்ற கொடுமையும் குத்தகை விவசாயிகளை நிலத்தை விட்டு வெளியேற்றும் அபாயமும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

முதியோர் ஒய்வூதியம் பெற்று வந்தவர்களுடைய எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளது. இராமநாதபுரம் மாவட்டத்தில்மட்டும் 15 ஆயிரம்பேர் குறைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டது அதிர்ச்சியளிப்பதாக இருந்தது.

இவை போன்ற பிரச்சினைகளை மாவட்ட நிர்வாகத்திற்கும், மாநில அரசின் கவனத்திற்கும் கொண்டு செல்வதுடன் தேவையான இயக்கங்களையும் நடத்திட உரிய நடவடிக்கைகளை நமது மாவட்ட, இடைநிலை, கிளை அமைப்புகள் மேற்கொள்ள வேண்டும்.



ஒன்றிய அரசு தேசிய கல்விக் கொள்கை 2020 என்ற பெயரால் படு பிற்போக்குத்தனமான கல்விக் கொள்கையை திணித்திட முயல்கின்றது. தமிழ்நாடு அரசு அதனை ஏற்கவில்லை. மாறாக தமிழ்நாட்டிற்கென தனி கல்விக் கொள்கையை உருவாக்கவும், செயல்படுத்தவும், கல்வியை பொதுப்பட்டியலில் இருந்து மாற்றி, மாநிலப் பட்டியலில் கொண்டு வரவும், நடவடிக்கை எடுத்திட நாம் தொடர்ந்து வலியுறுத்திட வேண்டும்.

ஒன்றிய அரசு தொழிலாளர் விரோத கொள்கைகளை கொண்டுள்ளது என்பது ஆச்சரியப்படுவதற்குரிய ஒன்றல்ல. அதனால் தமிழ்நாட்டில் அதனை அமல்படுத்திட அரசுக்கே தெரியாமல் அமல்படுத்தும் முயற்சியில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர். உள்ளாட்சிப் பணிகளில் இனி நிரந்தர நியமனமே கூடாது என அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இத்தகைய தொழிலாளர் விரோதப் போக்குகளை எக்காரணத்தைக் கொண்டும் அனுமதிக்க முடியாது.

பெருகிவரும் வேலையின்மை நாடு முழுவதும் உள்ளது என்பது மட்டுமல்ல, தமிழ்நாட்டில் 67 லட்சம் இளைஞர்கள் வேலை வாய்ப்பைத் தேடித் தரும் என்று கூறப்படுகின்ற எம்ப்ளாய்மெண்ட்டில் பதிவு செய்து காத்திருக்கின்றனர்.

“எங்கே எனது வேலை” என்ற பெருமுழக்கத்துடன் அனைத்திந்திய இளைஞர் பெருமன்ற பெரும்படை தமிழகம் தழுவிய நடை பயண இயக்கத்தை மேற்கொள்ள உள்ளது. கட்சி அமைப்புகள் ஆதரவளித்து இயக்கம் வெற்றி பெற உதவிட வேண்டும்.

நிரந்தரமில்லா தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்கள் எண்ணிக்கை அதிகரிப்பதும், மிகக்குறைந்த ஊதியம் வழங்கப்படுவதும் மிகக் கடுமையான பிரச்சனைகளாக உருவெடுத்து வருகிறது. ஆஷா பணியாளர்கள் – தூய்மைப் பணியாளர்கள், மருத்துவத்துறை பணியாளர்கள் மிக கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளனர். இவற்றை அரசு கவனத்தில் கொண்டு உரிய முயற்சிகளையும், நடவடிக்கைகளையும் மேற்கொள்ள, ஆக்கப்பூர்வமான இயக்கங்களை மேற்கொள்வது தவிர்க்க இயலாத ஒன்றாகும்.

உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேவைக்கு ஏற்ப நிதி இல்லாத காரணத்தால், மக்களின் அடிப்படை பிரச்சனைகளான குடிநீர், சாலை, சுகாதாரம், மின்விளக்கு போன்ற பிரச்சனைகளுக்கு தீர்வு காண முடியாமல் மக்கள் அவதியுற்று வருவதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

கடந்த கால ஆட்சியில் மக்களின் பிரச்சினைகளுக்காக நடந்திட்ட இயக்கங்களில் பங்கேற்ற நம் தோழர்கள் மீது ஏராளமான வழக்குகள் இன்றளவும் நிலுவையில் உள்ளன. நமது தோழர்கள் நீதிமன்றத்திற்கு அலைந்திட வேண்டிய நிலை உள்ளதை அரசின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளோம்.

**தோழர்களே! மேலே சொன்ன பல்வேறு பிரச்சினைகளுக்கு ஒன்றிய அரசின் கொள்கை நிலையே ஊற்றுக்கண்ணாகும். ஆனால் அதை முழுவதுமாக மறைத்துவிட்டு அந்தப் பிரச்சினைகளை பாஜக தனக்கு வாய்ப்பாக பயன்படுத்தி தமிழ்நாட்டில் தடம் பதிக்க முயற்சிப்பதை அலட்சியப்படுத்தக் கூடாது. பா.ஜ.க. கொடிய விஷப்பாம்பு என்பதையும் மறந்திடலாகாது. மக்கள் நலனுக்கு எதிரான செயல்கள் எங்கு எந்த ரூபத்தில் தலையெடுத்தாலும் அதனை தடுத்திடுவது மட்டுமல்ல, தீர்வு காண்பதும் நமது பெரும் கடமை பொறுப்பாகும்.**

தொழிலாளர்கள் – விவசாயிகள் – விவசாயத் தொழிலாளர்கள் – மாணவர்கள் – இளைஞர்கள் – மாதர்கள் – இலக்கியவாதிகள் என அனைத்துப் பகுதி மக்களும் அன்றாடம் அல்லல்பட்டு வருகின்றனர்.

அவர்களுடன் நாம் ஒன்றிணைந்து அவர்களின் நம்பிக்கைக்குரியவர்களாக செயல்படுவதன் மூலமே மக்கள் பிரச்சனைகளுக்கு தீர்வை எட்ட முடியும்.

வகுப்புவாத பேராபத்தினை தடுத்து நிறுத்திடவும் முடியும் என்கிற எதார்த்த நிலையை கருத்தில் கொண்டு, அரசியலாய், அமைப்பாய் செயல்படுவோம். மீண்டும் சந்திப்போம். வணக்கம்.

தோழமைமிக்க,

(இரா.முத்தரசன்)
மாநிலச் செயலாளர்

# குடியரசுத் தலைவர் உரையில் இடம்பெறாத இந்தியக் கவலைகள்

## நாடாளுமன்றத்தில் கே.சுப்பராயன் எம்.பி.

**குடியரசுத் தலைவருக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில் திருத்தம் செய்யக்கோரி பின்வரும் 20 திருத்தங்களை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நாடாளுமன்ற மக்களவைக் குழுத் தலைவர் கே.சுப்பராயன் முன் வைத்திருக்கிறார்.**



1. நாடாளுமன்றத்திலும், மாநில சட்டப்பேரவைகளிலும் பெண்களுக்கு இட ஒதுக்கீடு வழங்க வகை செய்யும் சட்டத்தை நிறைவேற்றுவதில் ஏற்பட்டுள்ள தாமதம் குறித்து குடியரசுத் தலைவரின் உரை சீரிய அக்கறை செலுத்தவில்லை.

2. தேசியக் கல்வி கொள்கையினால் கல்வி வணிகமயமாக்கப்படுவது அதிகரித்துள்ளது பற்றியும், ஏழை மக்களின் குழந்தைகளுக்கு தரமான கல்வி வழங்கப்படுவதை சாத்தியமற்றதாக்குவது குறித்தும் இந்த உரை எந்த அக்கறையையும் செலுத்தவில்லை.

3. பொது சுகாதார வசதிகள் மோசமடைவது குறித்தும், அதனால் ஏழை நோயாளிகள் தமது மருத்துவ சிகிச்சைக்காக, மிக அதிக கட்டணம் வசூலிக்கிற தனியார் மருத்துவமனைகளை நாட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது பற்றியும் இந்த உரை எந்த கவலையும் செலுத்தவில்லை.

4.நாட்டில் பெண்கள் மற்றும் குழந்தைகள் மீது வன்முறைத் தாக்குதல்கள் அதிகமாகி வருவது பற்றி குடியரசுத் தலைவர் உரையில் ஒன்றும் சொல்லப்படவில்லை.

5. “திட்ட ஊழியர்கள்” என்ற பெயரில் இந்திய அரசின் பல்வேறு திட்டங்களில் பணியாற்றுகிற தொழிலாளர்களை குறிப்பாக பெரும்பான்மையும் பெண்களாக உள்ள கோடிக்கும் அதிகமான தொழிலாளர்களை, இந்திய தொழிலாளர் மாநாட்டின் 45 வது அமர்வின் பரிந்துரைப்படி “தொழிலாளர்” என்ற தகுதியை வழங்கவும், பி.ஃஎப்., இ.எஸ்.ஐ. பற்றியும் இதர சமூக நலத்திட்டங்களை அவர்களுக்கு வழங்கவும் எழுந்துள்ள தேவை குறித்து இந்த உரை எதுவுமே பேசவில்லை.

6. முன்னாள் ராணுவத்திற்கு ‘ஒரே ரேங்க் – ஒரே பென்ஷன்’ என்பதை செயல்படுத்துவதில் ஏற்பட்டுள்ள அளவற்ற தாமதம் பற்றி இந்த உரை ஏதும் பேசவில்லை.

7. அமலாக்க இயக்குனரகம், வருமானவரித்துறை, மத்திய புலனாய்வுத்துறை ஆகியவை கூண்டுக் கிளிகளாக்கப்பட்டு, அரசின் எதிரிகளுக்கு எதிராக மட்டுமே தவறாக பயன்படுத்தப்படுவதைப் பற்றி இந்த உரையில் ஏதுமில்லை.

8. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் பணிபுரியும் தொழிலாளர்களின் ஊதியத்தை உயர்த்துதல், எண்ணிக்கையை ஆண்டுக்கு 200 நாட்களாக உயர்த்துதல், இந்தத் திட்டத்தை நகர்புறத்துக்கும் விரிவுபடுத்துதல் உள்ளிட்ட தேவைகள் குறித்து இந்த உரையில் ஏதும் குறிப்பிடப்படவில்லை.

9. மகாத்மா காந்தி தேசிய ஊரக உறுதித் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு பட்ஜெட்டில் குறைக்கப்பட்டுள்ளதையும், வேலையளித்த நாட்கள் ஐம்பதுக்கும் கீழாக குறைந்துள்ளதையும் இந்த உரை கவனத்தில் கொள்ளவில்லை.

10. புலம் பெயர்ந்த தொழிலாளர்களின் அவல நிலை பற்றியோ, அவர்களுக்கு மாற்றிக்கொள்ளத் தக்க குடும்ப அட்டை வழங்கி சமூகப் பாதுகாப்பை உறுதி செய்வது குறித்தோ இந்த உரை கணக்கில் எடுக்கவில்லை.

11. புதிய ஓய்வூதியத் திட்டத்தை திரும்பப்பெற்று, மீண்டும் பழைய ஓய்வூதியத் திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என அரசுப் பணியாளர்களும், வங்கி ஊழியர்களும் வலியுறுத்தி, மறுப்பைக் கண்டித்து நடவடிக்கைகளில் இயங்கியது பற்றியும் இந்த உரை கவனிக்கத் தவறுகிறது.

12. தொடர்ச்சியும், நிரந்தரத் தன்மையும் கொண்ட பணிகளில், பெருமளவில் ஒப்பந்த ஊழியர்களை நிரப்பி, நிரந்தரத் தொழிலாளர்களே இல்லை என்னும் சூழ்நிலை உருவாக்கப்படுவது பற்றியும், காண்ட்ராக்ட்/காஷுவல்/அவுட்சோர்ஸிங் போன்ற பெயர்களில் வேலைக்கு அமர்த்தப்படும் தொழிலாளர்களுக்கு, நிரந்தரத் தொழிலாளர்களுக்கு இணையான ஊதியம் வழங்குவதை உறுதிப்படுத்துவது குறித்தும் இந்த உரை அக்கறை செலுத்தவில்லை.

13. பொதுத்துறை நிறுவனங்கள், பாதுகாப்புத்துறை தொழிற்சாலைகள், அரசுத் துறைகளில் இயங்கும் நிறுவனங்கள் ஆகியவை தனியார் மயப்படுத்தப்படுவதையும், தேசிய பணமாக்கல் திட்டம் எனும் பெயரில் ரயில்வே, தேசிய நெடுஞ்சாலைகள், இந்திய விமான நிலைய ஆணையம் ஆகியவற்றின் நிலங்கள் விற்கப்படுவதை கைவிடுவது பற்றியும் இந்த உரை போதிய அக்கறை செலுத்தவில்லை.

14. ரயில்வே உற்பத்தி அலகுகள், ரயில்வேயின் வழக்கமான இயக்கத்தில் 60 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பகுதி அவுட்சோர்ஸ் செய்யப்படுவதையும் பற்றி இந்த உரை அக்கறையே காட்டவில்லை.

15. கொரோனா காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட ‘பிரதான் மந்திரி கரீப் கல்யாண் அன்ன யோஜனா’ திட்டத்தை நிறுத்திவிட்டு, தேசிய உணவுப் பாதுகாப்பு திட்டத்தோடு இணைத்து, 81 கோடி பேருக்கு நபர் ஒருவருக்கு 10 கிலோ வீதம் வழங்கிய அரிசியை 5 கிலோவாகக் குறைத்திருப்பதைப் பற்றி இந்த உரையில் எந்த கவனமும் செலுத்தவில்லை.

16. பழைய தொழிலாளர் சட்டங்களை, நான்கு சட்டத் தொகுப்புகளாகச் சுருக்கி, நாட்டின் 90 சதவீத உழைக்கும் மக்களை தொழிலாளர் சட்ட வரையறைகளுக்கு வெளியே தள்ளி விட்டுள்ளதையும், அதைப் போக்க புதிய சட்டத் தொகுப்புகளை கைவிட வேண்டிய அவசியம் குறித்தும் இந்த உரை கணக்கில் கொள்ளவில்லை.

17. நீதிபதிகளை தேர்வு செய்யும் முறைமை குறித்தும், அதிகாரப் பகிர்வு குறித்தும், அரசு நிர்வாகத்திற்கும் – நீதித்துறைக்கும் இடையே எழுந்துள்ள வெளிப்படையான முரண்பாடு பற்றி, உச்ச நீதிமன்றம் மற்றும் பல்வேறு உயர் நீதிமன்றங்களுக்கும் நீதிபதிகளை நியமிக்க முடியாமல் காலதாமதமாகி வருவது குறித்து இந்த உரையில் கவனம் செலுத்தவில்லை.

18. நாட்டிலுள்ள 6 கோடியே 38 லட்சத்துக்கு மேற்பட்ட சிறு, குறு, நடுத்தரத் தொழில்கள், தமது தொழில் செவ்வனே இயங்குவதற்கு கிடைக்கும் வகையிலான நிதித் தேவைகளை நிறைவேற்றித் தருவது பற்றி இந்த உரை பேசவே இல்லை.

19. விளை பொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதார விலை நிர்ணயிப்பதாக விவசாயிகளுக்கு அரசு கொடுத்த வாக்குறுதியை இதுவரை நிறைவேற்றாதது பற்றி இந்த உரையில் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

20. பொருளாதார மந்த நிலை, அதனால் ஏற்படும் வேலையின்மை அதிகரிப்பு, குறிப்பாக படித்த இளைஞர்களுக்கு வேலையின்மை பற்றி எந்த கவனமும் அறிக்கையில் காணப்படவில்லை.

## ஐப்சோ மாநில மாநாட்டில் பங்கேற்கும் தலைவர்கள்

அகில இந்திய சமாதான ஒருமைப்பாட்டுக் கழக மாநில மாநாடு சென்னையில் 12.02.2023 அன்று நடைபெறுகிறது.

சென்னை,சூளைமேடு, திருவேங்கடபுரம், எண்: 38, அமீர்ஜான் தெருவில் உள்ள, தாரக் இல்லம்,சென்ட்ரல் பாங் ஆஃப் இந்தியா கூட்டுறவுச் சங்க, விருந்தினர் விடுதி அரங்கில் (நுங்கம்பாக்கம் ரயிலடி அருகில்) இம்மாநாடு நடைபெறும்.

இம்மாநாட்டிற்கு, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் மூத்தத் தலைவர் உ.பலராமன் முன்னாள் எம்.எல்.ஏ, பொருளாதார நிபுணர் பேராசிரியர் வி.பி.ஆத்ரேயா, ஐப்சோவின் முதுபெரும் தலைவர் தோழர் க.முத்தியாலு ஆகியோர் தலைமை தாங்குகின்றனர்.

ஐப்சோ தமிழ்நாடு மாநில துணைச் செயலாளர், பா.செந்தில்குமார் வரவேற்புரை நிகழ்த்துகிறார்.

உலக சமாதானக் கவுன்சிலின் தலைவரும், கிமிறிஷிளி வின் அகில இந்திய பொதுச் செயலாளருமான பல்லப்சென்குப்தா மாநாட்டை துவக்கி வைத்து உரையாற்றுகிறார். ஐப்சோ அகில இந்தியப் பொதுச் செயலாளர் ஆர். அருண்குமார் சிறப்புரையாற்றுகிறார்.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் துணைத்தலைவர் ஆ. கோபண்ணா, திராவிடர் கழகத்தின் துணைத்தலைவர் கவிஞர் கலி.பூங்குன்றன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன் ,தி.மு.க மருத்துவ அணிச் செயலாளர் டாக்டர் நா.எழிலன் எம்.எல்.ஏ, வி.சி.க துணை பொதுச்செயலாளர் ஆளூர் ஷாநவாஸ் எம்.எல்.ஏ, ஆம்.ஆத்மி கட்சியின் மாநில பொதுச் செயலாளர் இ.ஜோசப் ராஜா, ம.தி.மு.க தேர்தல் பிரிவுச் செயலாளர் அந்திரிதாஸ்,மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பழ.ஆசைத்தம்பி,மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக் குழு உறுப்பினர் ஜி.செல்வா, த.மு.மு.க மாநில பொதுச் செயலாளர்

பேராசிரியர்.ஹாஜா கனி, ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் எஸ்.பாஸ்கரன் உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

ஐப்சோ, தமிழ்நாடு மாநில பொதுச் செயலாளர் ஐ.ஆறுமுகநயினார் வேலை அறிக்கையை முன்வைக்கிறார்.

ஐப்சோ, தமிழ்நாடு மாநில பொதுச் செயலாளர் டாக்டர் ஜி.ஆர். இரவீந்திரநாத் கொள்கை அறிக்கையை முன்வைக்கிறார். டாக்டர் ஏ.ஆர்.சாந்தி, கே.சி.கோபிக்குமார், ஜி.முரளி, ஜி.செந்தில் குமார் ஆகியோர் தீர்மானங்களை முன்மொழிகின்றனர்.

ஐப்சோவின் அகில இந்திய துணைச் செயலாளர் தோழர் ஹர்சந்த் சிங் மாநாட்டில் நிறைவுப் பேருரையாற்றுகிறார்.

ஐப்சோ மாநிலப் பொருளாளர் ஆர்.ராஜேந்திரன் நன்றி நவில்கிறார். மாநிலம் முழுவதிலுமிருந்து பிரதிநிதிகள் கலந்து கொள்கின்றனர்.

### ஜனசக்திக்கு கட்டுரைகள், செய்திகள் அனுப்புவோர் கவனத்திற்கு...

கட்டுரைகள் மிகச் சுருக்கமாக 800 வார்த்தைகளுக்கு மிகாமல் ஏ 4 சைஸ் பேப்பரில் ஒன்றரை பக்கத்திற்குள் இருக்க வேண்டும்.

பெரும்பாலும் தற்போதைய அரசியல், பொருளாதார, சமூக நிகழ்வுகளாக இருக்க வேண்டும்.

மறைந்த தலைவர்கள் பற்றிய விபரங்கள் மற்றும் வரலாற்றுக் கட்டுரைகள் ஜனசக்தி பத்திரிகையில் அரை பக்கத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

செய்திகள் அனுப்புவோர் பெயருக்கு முன்னால் இருக்கும் முன்னெழுத்தை (இனிசியலை) தமிழிலேயே எழுத வேண்டும்.

கட்டுரைகள் மற்றும் செய்திகள் ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமைக்குள் ஜனசக்திக்கு கிடைக்குமாறு அனுப்ப வேண்டும்.

janasakthieditor@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு மட்டுமே கட்டுரைகள், செய்திகள் அனுப்ப வேண்டும். வாட்ஸ் அப்பில் அனுப்பக் கூடாது.

– ஆசிரியர் குழு

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 85 இதழ் 45

# நீதிபதிகள் அணி வைத்திருக்கும் ஒரே கட்சி பாஜக!

சென்னை உயர் நீதிமன்ற நீதிபதியாக விக்டோரியா கௌரி பிப்ரவரி ஏழாம் தேதி பதவி பிரமாணம் எடுத்துக் கொண்டார்.

அவர் பிஜேபியின் தேசிய மகளிர் அணி செயலாளராக இருந்தவர். ஓர் அரசியல் கோட்பாட்டில் நம்பிக்கை கொண்டிருப்பதற்காக ஒருவர் நீதிபதியாக வரக்கூடாது என்று சொல்லிவிட முடியாது.

ஆனால் 'நாம் எல்லோரும் இந்தியர். எல்லோரும் சமமானவர்கள்' என்ற அரசியல் சாசன நெறிக்கு எதிராக தொடர்ந்து பேசியும் செயல்பட்டும் வந்தவர் விக்டோரியா கௌரி. இஸ்லாமியர்கள் மீது அவர் மேற்கொண்ட வெறுப்பு பிரச்சாரம் காணொளி காட்சிகளாக பதிவு செய்யப்பட்டு கிடைக்கிறது. கிறிஸ்துவ பாடல்களுக்கு பரதநாட்டியம் ஆடுவதை அனுமதிக்கக் கூடாது என ஆட்சேபித்தவரவர். கிறித்தவர்கள் பயங்கரவாதிகள், இந்தியாவுக்கு ஆபத்தானவர்கள் என பேசியவர். சிறுபான்மையினர், கம்யூனிஸ்டுகள், காங்கிரஸ்காரர்கள், சமதர்மம் பேசுபவர்கள், சமூக நீதியை ஆதரிப்பவர்கள் எல்லோர் மீதும் வன்மத்தைக் கொட்டியவர்.

அவரது கடந்த கால செயல்பாடுகளை ஆதாரத்தோடு சமர்ப்பித்து, அவரை நீதிபதியாக பதவியேற்க அனுமதிக்க கூடாது என உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

அவற்றை உச்ச நீதிமன்றம் தொட்டுக் கூடப் பார்க்கவில்லை. 'அவர் கூடுதல் நீதிபதியாகத்தான் நியமிக்கப்பட்டு இருக்கிறார். பணி திருப்தியாக அமையவில்லை எனில் ஓராண்டு கழித்து பரிசீலித்து நிரந்தரம் செய்யாமல் இருக்க முடியும். அப்போது பார்த்துக் கொள்ளலாம்" என்று கூறி உச்சநீதிமன்றம் தடை விதிக்க மறுத்து விட்டது.

காலையில் உயர்நீதிமன்ற கூடுதல் நீதிபதியாக அவர் பதவியேற்பதற்கு பங்கம் ஏதும் வந்துவிடாமல், அதே நாளில் காலையில் உச்ச நீதிமன்றம் கூடி அவசரமாய் வழக்கை எடுத்து தீர்ப்பு சொன்னார்கள்.

ஏற்கனவே அயோத்தி கலவரம், ரபேல் விமான ஊழல் ஆகியவற்றில் அரசுக்கு சாதகமாக தீர்ப்பளித்த உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி ரஞ்சன் கோகாய், பதவி முடிந்த மறுநாளே மாநிலங்களவை உறுப்பினராக்கப்பட்டு விட்டார்.

சோராபுதீன் கொலை வழக்கில் அமித் ஷா நேரில் ஆஜராக வேண்டும் என்று உத்தரவிட்ட, 48 வயதேயான நீதிபதி லோதா, 2015ம் ஆண்டு முகாம் சென்ற இடத்தில் இரவு நேரத்தில் 'நெஞ்சு வலி'யால் செத்து, விடியற்காலைக்குள் உடற்கூராய்வும் முடிந்து சடலமாக வீடு வந்து சேர்ந்தார்.

அமித் ஷாவுக்கு எந்த தொடர்பும் இல்லை என தீர்ப்புரைத்த உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சதாசிவம் கேரளாவின் ஆளுநரானார். அரசியல் வழக்குகளில் பிஜேபிக்கும் மோடிக்கும் சாதகமாக தீர்ப்பு எழுதிய நீதிபதி அருண் மிஸ்ராவுக்கு தேசிய மனித உரிமை ஆணையத்தின் தலைவர் பதவி தரப்பட்டது.

'உலகத்திலேயே அதிக அதிகாரம் கொண்ட நீதிமன்றம்' என்று 1990ஆம் ஆண்டுகளில் இந்திய உச்ச நீதிமன்றம் பெயர் பெற்றிருந்தது. 2014 இல் மோடி ஆட்சிக்கு வந்த பின்னர் நிலைமை தலைகீழானது. 2016ஆம் ஆண்டு பிரதமர் மோடி முன்னிலையிலேயே ஒரு கூட்டத்தில், அப்போதைய உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி தாக்கூர், நீதிபதி பொறுப்புக்கு பொருத்தமானவர்களை காலதாமதம் செய்யாமல் நியமனம் செய்யுங்கள் என பேசிக் கொண்டிருந்தபோதே கண்ணீர் விட்டுக் கதறினார்.

மோடி அரசின் கொள்கைகளில் மாறுபட்டு ஆட்சேபித்தால் நீதிமன்றத்துக்கு போ என்று சொல்லுவது அவர்களின் வழக்கம். நிராகரிக்கப்படுவதற்கு உரியதாக நீதிமன்றத்தை ஆயத்தப்படுத்தி வைத்திருப்பதால்தான் இந்த அலங்கார பேச்சு! நிலைமை இவ்வாறு நீடித்தால் நீதிமன்றங்களின் மீது மக்களுக்கு எப்படி நம்பிக்கை இருக்கும்?


கோத்ரா, முசாபர் நகர் கலவரங்களின் போது கும்பல் கும்பலாக மக்களைக் கொலை செய்ததையும், சொத்துக்களை சூறையாடியதையும், எரித்து நாசம் செய்ததையும் பிஜேபி அரசாங்கத்தின் காவல்துறை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது.

பங்குச் சந்தை மோசடிக்கு ஆளாகி விடாமல் கட்டுப்படுத்த வேண்டிய 'செபி' முறைகேட்டை வேடிக்கை பார்க்கிறது. முறைகேடான பணப்பரிவர்த்தனைகளை ரிசர்வ் வங்கி வேடிக்கை பார்க்கிறது. தில்லுமுல்லுகள் செய்து அளவற்ற சொத்துக் குவிப்பில் ஈடுபடுபவர்களைத் தடுக்க வேண்டிய அமலாக்க துறையும் மத்திய புலனாய்வுத் துறையின் வருமான வரித்துறையும் பல்லாயிரக்கணக்கான கோடிகளை கொள்ளையடிப்பவர்களை அசைவின்றிப் பார்த்துக் கொண்டிருக்கின்றன.

அரசியல் கட்சிகள் தமக்கென்று மருத்துவர் அணி, வழக்கறிஞர் அணி எல்லாம் வைத்துக் கொள்வது உண்டு. ஆனால் தனக்கென்று நீதிபதிகள் அணியையே வைத்திருக்கும் ஒரே கட்சி பாஜகதான்.

தர்ம நியாயங்கள், தார்மீக மரபுகள், சட்டவிதிகள் எதையும் பார்க்காமல் தனது இலக்கை நோக்கி பயணம் செய்வதற்கு தனக்கு வேண்டிய எதனையும் செய்து முடிப்பது பாசிசத்தின் வழிமுறை.

விக்டோரியா கௌரியின் நியமனம் மீண்டும் ஒருமுறை அதை நிரூபித்திருக்கிறது.




1ம் பக்கத் தொடர்ச்சி

நிதிகள் மாநாட்டு தொடக்க நிகழ்வில் முன்னாள் மாநிலச் செயலாளர் மே.து.ராசுகுமார் கொடியை ஏற்றி வைத்தார். தொடர்ந்து செல்லமுத்துவின் உருவப்படத்திற்கு அஞ்சலி செலுத்தப்பட்டு பிரதிநிதிகள் மாநாடு தொடங்கப்பட்டது. இம்மாநாட்டிற்கு, மாணவர் பெருமன்ற நிர்வாகிகள் மௌ.குணசேகர், பா.தினேஷ், ஆ.பிரகாஷ், ச.பூர்ணிமா நந்தினி, நா.வசந்தபாரதி ஆகியோர் தலைமைக்குழுவாக செயல்பட்டனர். மாநாட்டில் மாநில துணைச் செயலாளர் ச.ப.பூர்ணிமா நந்தினி அஞ்சலி தீர்மானத்தை வாசித்தார். வரவேற்பு குழு தலைவர் எம்.எஸ்.மூர்த்தி வரவேற்புரையாற்றினார்.

## விக்கி மகேசரி துவக்க உரை:

அகில இந்திய பொதுச் செயலாளர் விக்கி மகேசரி மாநாட்டை துவக்கி வைத்து உரையாற்றும்போது, தமிழ்நாடு மாநில மாநாட்டை தொடங்கி வைப்பதற்கு மகிழ்ச்சி அடைகிறேன். தேசியக் கல்விக் கொள்கைக்கு எதிரான தேசிய மாநாட்டை கடந்த மே மாதம் சென்னையில் மூன்று மாநிலங்களிலிருந்து நான்கு அமைச்சர்களை அழைத்து வெற்றிகரமாக நடத்தினீர்கள். தேசிய கல்விக் கொள்கையை பா.ஜ.க. கொண்டு வந்ததால் மட்டும் நாங்கள் எதிர்க்கவில்லை. அவர்களின் கொள்கை என்பது பொதுக்கல்வி கட்டமைப்பையே முழுமையாக அழிக்கக் கூடிய ஒன்றாக உள்ளது. பாடத்திட்டங்களில் மாற்றங்கள் செய்வதை சாதாரணமாக நாம் எடுத்துக் கொள்ளக் கூடாது. பகத்சிங், காந்தியை தேச துரோகிகளாகவும், சாவர்க்கர், கோட்சே ஆகியோரை தேச பக்தர்களாகவும் பாடத்திட்டங்களில் மாற்ற முயற்சிக்கின்றனர். 2022–23 நிதிநிலை அறிக்கையில் கல்விக்கான நிதி ஒதுக்கீடு வெறும் 2.30 சதவிகிதம் தான் ஒதுக்கியுள்ளனர். 10 சதவிகிதம் ஒதுக்கக் கோரி தொடர்ந்து நாம் போராடி வருகிறோம் என்றார்.

மாநிலப் பட்டியலில் கல்வி கருத்தரங்கம்

"மாநிலப் பட்டியலில் கல்வி" என்ற தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கில், தமிழ்நாட்டின் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, திமுக மாணவர் அணி மாநில செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ, சவிதா பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் எல்.ஜவஹர் நேசன், ஊடகவியலாளர் தி.செந்தில்வேல் ஆகியோர் கருத்துரையாற்றினர்.

## வாழ்த்தரங்கம்

மாநாட்டினை வாழ்த்தி, அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் க.பாரதி, இந்திய மாணவர் சங்கத்தின் மாநில துணைத்தலைவர் சம்சீர் அகமது, மாணவர் பெருமன்ற முன்னாள் புதுச்சேரி மாநிலச் செயலாளர் சே.எழிலன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

இதன் தொடர்ச்சியாக நடைபெற்ற நிகழ்வில், அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் தினேஷ் சீரங்கராஜ் அரசியல், அமைப்பு நிலை, வேலை அறிக்கையினை சமர்ப்பித்தார்.

## கருத்தரங்கம்

பிப்ரவரி 7ஆம் தேதி நடைபெற்ற பிரதிநிதிகள் மாநாட்டில், "வர்க்க அணிதிரட்டலில் மாணவர்கள்" என்னும் தலைப்பில் ஏ.ஐ.டி.யு.சி. தேசிய செயலாளர் டி.எம்.மூர்த்தி, "மக்களுக்கான கல்விக் கொள்கை" என்னும் தலைப்பில் பொதுப்பள்ளிக்கான மாநில மேடையின் பொதுச்செயலாளர் பு.பா.பிரின்ஸ் கஜேந்திரபாபு ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரை வழங்கினர். மேலும், வங்கி ஊழியர் சங்க மாநில செயலாளர் ஜி.முரளி கலந்துகொண்டு கருத்துரை வழங்கினார்.

## குழு விவாதம்

மாநாட்டில், புதிய முயற்சியாக துறை வாரியாக குழு விவாதங்கள் நடைபெற்றது. கலை மற்றும் அறிவியல், பொறியியல், சட்டம், மருத்துவம், போட்டித் தேர்வுகள் என்ற வகையில் குழுக்களாக பிரிக்கப்பட்டு, அதில், அவரவர் துறைகளில் மாணவ பிரதிநிதிகள் பங்கேற்று, தங்களது பிரச்சினைகளை எடுத்துரைத்தனர். மேலும், பள்ளி மாணவர் குழுவிலும், பிரதிநிதிகள் தங்களது பிரச்சினைகளையும், கோரிக்கைகளையும் எடுத்துரைத்தனர்.

## விடைபெறுதல் நிகழ்வு

நிறைவாக, மாணவர் பெருமன்ற பணிகளில் இருந்து விடைபெற்ற நிர்வாகிகளுக்கு வாழ்த்து தெரிவித்து, வழியனுப்பும் நிகழ்ச்சி நடைபெற்றது. ஒவ்வொரு நிர்வாகியும், மேடையில் தங்களது நினைவலைகளைப் பகிர்ந்துகொண்டபின், அவரது கரங்களில் கொடியைக் கொடுத்தும், மாலை அணிவித்தும், அவரது மாவட்டத்தைச் சேர்ந்த தோழர்கள், முழக்கமிட்டு அழைத்துச் செல்லும் வகையில் இந்நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்வு அனைவரையும், மன நெகிழச் செய்ததோடு, கண்கலங்கவும் வைத்தது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன் நிறைவுரையாற்றினார். வரவேற்புக் குழுவின் செயலாளர் த.கு.வெங்கடேசன் மற்றும் வரவேற்புக்குழுவினர் கவுரவிக்கப்பட்டனர். வரவேற்பு குழு பொருளாளர் கீ.சு.குமார் நன்றி உரையாற்றினார்.



# பிப். 12-ல் அகில இந்திய சமாதான ஒருமைப்பாட்டுக் கழக மாநில மாநாடு



ஜி.ஆர்.இரவீந்திரநாத்

**அகில இந்திய சமாதான ஒருமைப்பாட்டுக் கழகத்தின் மாநில மாநாடு வரும் 12.02.2023 அன்று சென்னையில் நடைபெறுகிறது. அகில இந்திய சமாதான ஒருமைப்பாட்டுக் கழகம் (ஐப்சோ) All India Peace and Solidarity Organisation (AIPSO) ஒரு பன்முகத்தன்மை வாய்ந்த ஜனநாயக அமைப்பாகும்.**

இந்தியா பன்முகத்தன்மை கொண்ட நாடு, வேற்றுமையில் ஒற்றுமை கொண்ட நாடு என்ற எதார்த்தத்தை புரிந்துகொண்டு, ஏற்றுக் கொண்டு, நாட்டின் ஒற்றுமை ஒருமைப்பாட்டையும் மதச்சார்பின்மையையும், அரசியல் சட்டத்தையும், ஜனநாயகத்தையும் பாதுகாப்பதற்காக செயல்படும் அமைப்பாகும்.

உலகில் சமாதானம் நிலை பெற வேண்டும் என்பதற்காக உறுதியோடு செயல்படும் அமைப்பாகும். உலக நாடுகளிடையே, உலக மக்களிடையே ஒற்றுமையும், ஒருமைப்பாடும், நட்பும், நல்லுறவும், பரஸ்பர ஒத்துழைப்பும், உதவி செய்து கொள்ளும் மனப்பாங்கும் வலுப்பட செயல்படும் அமைப்பாகும்.

மானுட முன்னேற்றத்திற்கு உலக சமாதானம் அவசியம் எனக் கருதி அளப்பரிய முறையில் செயல்படும் அமைப்பாகும்.

மானுட முன்னேற்றத்திற்கு போர்களற்ற, ஆக்கிரமிப்புகளற்ற, சுரண்டலற்ற, மதவெறியற்ற, சாதி, மத, இன, மொழி, நிற, பாலின பாகுபாடுகளற்ற, புறக்கணிப்புகளற்ற, வகுப்புவாதமற்ற, பிரிவினைவாதப் போக்குகளற்ற சூழல் வேண்டும் எனக் கருதும் அமைப்பாகும்.

மனிதர்கள் அனைவரும் சமம் என்ற நிலை உருவாக்கப்பட வேண்டும்.மனிதர்கள் அனைவரும் மனிதநேயத்தோடும்,மனித மாண்போடும் நடத்தப்பட வேண்டும் என்பதற்காக போராடும் அமைப்பாகும்.

இயற்கை வளங்கள் காக்கப்பட வேண்டும். அவை உரிய முறையில் பாதுகாக்கப்பட்டு எதிர்கால சந்ததியினருக்கு வழங்கப்பட வேண்டும் எனக் கருதி சுற்றுச் சூழலை,இயற்கை வளங்களை அக்கறையோடு காக்க மக்களுக்கு விழிப்புணர்வை ஊட்டும் அமைப்பாகும்.

ஐப்சோ, எந்த ஒரு அரசியல் கட்சியையும் சார்ந்த அமைப்பல்ல.இது மக்களின் அமைப்பாகும். ஜனநாயக மாண்புகளையும்,சமூக நீதியையும் விரும்பும் அனைத்து மக்களையும் ஒருங்கிணைக்கும் மகத்தான கடமையை இவ்வமைப்பு செய்கிறது.

**ஐப்சோவின் வரலாற்றுப் பின்னணி:**

பிரிட்டிஷ் காலனி ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெறுவதற்கான, ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தை முன்னின்று நடத்திய போராளிகளால் , தேசபக்தர்களால் இவ்வமைப்பு தோற்றுவிக்கப்பட்டது. சுதந்திரப் போராட்டத்தின் வீரத் தழும்புகளை ஏந்திய தியாகிகளின் முயற்சியால், உழைப்பால் உருவாக்கப்பட்டு, வளர்க்கப்பட்டது "ஐப்சோ". இதன் முன்னோடிகள் உலக சமாதானத்திற்காக, ஏகாதிபத்தியங்களின் பிடியிலிருந்து காலனி நாடுகள் விடுதலை பெறுவதற்காக அளப்பரிய தியாகங்களை செய்துள்ளனர்.

நமது விடுதலைப் போராட்ட வீர வரலாற்று அனுபவம், விடுதலைக்கான போரை தனித்து யாரும் நடத்திட இயலாது என்றபடிப்பினையை அளித்தது. விடுதலைக்காகப் போராடும் இதர மக்களுக்கான ஆதரவு, நமது விடுதலைக்கான போராட்டத்தின் ஓர் பகுதி என உணர்த்தியது.

இந்த அனுபவம், ஐப்சோவின் நோக்கங்களை, லட்சியங்களை வகுத்துக் கொள்ள உதவியது.

இந்நிலையில், 1951 மே, திங்களில் மும்பாயில் அகில இந்திய சமாதானக் கழகம் (All India peace Council) என்ற அமைப்பு தொடங்கப்பட்டது. அது தொடங்கப்பட்ட காலத்தில் உலகில் ஏராளமான நாடுகளில், மக்கள் காலனிய ஆதிக்கத்தை எதிர்த்து வீரம் செறிந்த போராட்டங்களை நடத்திக் கொண்டிருந்தனர்.

ஃபாசிசம், நாசிசம் சோவியத் யூனியனால் வீழ்த்தப்பட்டிருந்தது. அது, பல நாடுகளில் சோசலிசத்தை கட்டி எழுப்புவதற்கான நிலைமைகளை உருவாக்கியது. சோசலிச நாடுகளின் முகாம் உதயமானது.

ராணுவ ரீதியான அவசியம் இல்லாத நிலையில், அரசியல் ரீதியான நோக்கங்களுக்காக, உலக மேலாதிக்க நோக்கத்திற்காக, ஜப்பான் நாட்டின் ஹிரோஷிமா, நாகசாகி நகரங்கள் மீது, அணுகுண்டுகளை வீசி லட்சக்கணக்கான மக்களை கொன்று குவித்த, கொடூரத்தை நிகழ்த்தியிருந்தது அமெரிக்கா.

உலக மேலாதிக்க அரசியல் நோக்கத்திற் காக அணுகுண்டுகளை அமெரிக்கா பயன் படுத்தியது மனித குலத்திற்கு எதிரான செயலாகும். இக் கொடூரத்தை உலகமே கண்டித்தது. அமெரிக்காவின், இந்த பயங்கரவாதச் செயல், உலக மக்களிடையே, அணு ஆயுதங்களுக்கு எதிரான போராட்டங்களை, போருக்கு எதிரான இயக்கங்களை உலகம் முழுவதும் தோற்றுவித்திருந்தது.

சமாதான இயக்கங்கள் தோன்றி, வலுப்பெற தொடங்கின.


பனிப்போர் கெடுபிடி நிலையும், செல்வாதாரங்கள் ஆயுதப் போட்டிக்காக அளப்பரிய அளவில் செலவிடப்பட்டதும், ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புகளும், அணு ஆயுதப் போர் ஆபத்தும் ,வலுவான சமாதான இயக்கத்தை கட்டி எழுப்ப வேண்டிய அவசியத்தை உருவாக்கியது.

இந்தச் சூழலில் உலக சமாதான கழகம் (World Peace Council) 1950 ல் உருவாக்கப்பட்டது. உலக சமாதானக் கழகத்தின் முதல் தலைவராக, நோபல் பரிசு பெற்ற பிரஞ்ச் பெண் விஞ்ஞானி, ஜீன் ஜோலியட் கியூரி தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் புகழ்பெற்ற நோபல் தம்பதிகளான மேரி கியூரி மற்றும் பியரி கியூரியின் மகளும், பிரெஞ்சு அறிவியலாளரும் ஆவார்.

உலக சமாதானக் கழகத்தின் வேண்டுகோளின் அடிப்படையில், உலகின் பல்வேறு நாடுகளில் சமாதானக் கழகங்கள் உருவாக்கப்பட்டன.

அந்த வேண்டுகோளின் அடிப்படையில், இந்தியாவிலும் ,அகில இந்திய சமாதானக் கழகம் (All India Peace Council) 1951 ல் மும்பாயில் தொடங்கப்பட்டது. உலக சமாதானக் கழகத்துடன் இணைந்த அமைப்பாக அது செயல்படத் தொடங்கியது.

அதே போன்று பாண்டுங் மாநாட்டு சமயத்தில், ஆசிய, ஆப்பிரிக்க ஒருமைப் பாட்டுக் கழகம் உருவாக்கப்பட்டது. இந்த இரண்டு அமைப்புகளிலும் இந்தியாவின் மிகப்பெரும்




ஆளுமைகள் செயல்பட்டனர்.

டாக்டர் சைஃபுதின் கிச்லு,காந்தியின் சீடர் பண்டித சுந்தர்லால், சீனாவிற்குச் சென்ற மருத்துவக் குழுவின் தலைவர் டாக்டர் எம்.எம்.அதல், அஜாய் கோஷ், ஏ.கே.கோபாலன், கே.டி.மாளவியா,டி.பி.குன்ஹா, அருணா அஷஃப் அலி, பிரிதிவி ராஜ் கபூர், பால்ராஜ் ஷஹானி, எழுத்தாளர்கள் டி.டி.கோசாம்பி மற்றும் அறிவு ஜீவிகள் கிரிஷன் சந்தர், ராஜேந்திர சிங் பேடி,வல்லத்தோல், எஸ்.குர்பாக்ஸ் சிங், மேஜர் ஜெனரல் லோக்கே, வி.வி.கிருஷ்ண மேனன், கே. முல்க் ராஜ் ஆனந்த், இந்துலால் யக்னிக், சத்யன் போஸ், ஜே.சி.குமரப்பா, ரொமேஷ் சந்திரா, பெரின் ரொமேஷ் சந்திரா, முன்னாள் பிரதமர் நேரு போன்றோர் மகத்தான பங்கை ஆற்றியுள்ளனர்.

அகில இந்திய சமாதானக் கழகம், ஆசிய ஆப்ரிக்க ஒருமைப்பாட்டுக் கழகம் ஆகிய இரண்டு அமைப்புகளின் தேசியக் குழுக்கள், 1972 மே மாதம், கல்கத்தாவில் கூடி, அகில இந்திய சமாதான ஒருமைப்பாட்டுக் கழகத்தை (All India Peace and Solidarity Organisation - AIPSO) உருவாக்கின.

ஐப்சோவின் செயல்பாட்டிற்கு இந்திரா காந்தி துணை நின்றார். ரொமேஷ் சந்திரா, பெரின் ரொமேஷ் சந்திரா போன்றோர் மகத்தான பங்களிப்பை செலுத்தினர்.

**தமிழ்நாட்டில் ஐப்சோ வளர்ச்சிக்கு உதவியர்கள்:**

தமிழ்நாட்டில், இயக்குநர் கே.சுப்ரமணியன், பரமேஸ்வரன், குன்றக்குடி அடிகளார், டாக்டர் ராம்கிருஷ்ணன், டாக்டர் நடராஜன், டாக்டர் புதுவை ரெங்கனாதன், வழக்கறிஞர் தஞ்சை ராமமூர்த்தி, தஞ்சை ஏ.வி.ராமசாமி, தோழர் ஜெகன் போன்றோர் தமிழகம் மற்றும் புதுவையில் ஐப்சோவின் வளர்ச்சிக்கு மகத்தான பங்களிப்பை செலுத்தினர்.

உலக சமாதானத்தை நிலைநாட்டல், போரற்ற, அணு ஆயுதமற்ற உலகை படைத்தல் ,ஜனநாயகம், சமூக நீதி, சமத்துவம், மனித மாண்பை காத்தல், சுற்றுச் சூழலை பாதுகாத்தல், அனைவருக்கும் நலவாழ்வை உறுதி செய்தல் உள்ளிட்ட உன்னத நோக்கங்களுக்காக இவ்வமைப்பு தொடர்ந்து செயலாற்றி வருகிறது.

இந்த அமைப்பில், இடது சாரி ,ஜனநாயக மற்றும் மதச்சார்பற்ற அமைப்புகள் இணைந்து செயல்படுகின்றன. இந்நிலையில், இந்தியாவில் இந்துத்துவ மதவெறி அரசியலை சங்பரிவார் அமைப்புகளும், ஒன்றிய அரசும் மூர்க்கத்தனமாக நடைமுறை படுத்துகின்றன.

மக்களை மத ரீதியாக பிளவுபடுத்தும் முயற்சிகள் தீவிர மடைந்துள்ளன. சிறுபான்மை மதங்களைச் சேர்ந்த மக்களுக்கு எதிராகவும், ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எதிராகவும் வெறுப்புணர்வு நெருப்பில், எண்ணெய் ஊற்றி சங் பரிவார அமைப்புகளால் வளர்க்கப்படுகிறது.

இந்துத்துவ பாசிச காரிருள், இன்று இந்தியாவை கவ்வியுள்ளது. பாசிச அபாயத்தை தடுத்திட, மதநல்லிணக்கத்தை பேணிட, மக்கள் ஒற்றுமையை வலுப்படுத்திட, அரசியல் சட்டத்தை பாதுகாத்திட, ஜனநாயகத்தை பாதுகாத்திட, மதச்சார்பற்ற, ஜனநாயக மற்றும் இடது சாரி சக்திகளின் பரந்து பட்ட மேடையை உருவாக்க வேண்டியது மிகவும் அவசர அவசியமாகியுள்ளது.

ஒன்றிய பா.ஜ.க அரசின் இந்துத்துவ மத வெறி அரசியலை முறியடிக்க வேண்டியதும், மதநல்லிணக்கத்தை காக்க வேண்டியதும்,மக்கள் ஒற்றுமையை கட்டி எழுப்ப வேண்டியதும் இன்றைய அவசியத் தேவையாகியுள்ளது.

அத்தகைய நோக்கத்தை நிறைவேற்ற "ஐப்சோ" போராடி வருகிறது.

இந்நிலையில், அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்திய நாடுகளும், அதன் தலைமையிலான நேட்டோ ராணுவ கூட்டணியும், ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையே போரை மூட்டிவிட்டுள்ளன.

உலக சமாதானத்திற்கு அச்சுறுத்தலை உருவாக்கியுள்ளன. அணு ஆயுதப்போர் ஏற்படும் பேராபத்தை உருவாக்கியுள்ளன.

ஆசிய –பசிஃபிக் பகுதியில் குவாட் (QUAD), என்ற நாற்கர ராணுவக் கூட்டையும், ஆகஸ்(AUKUS) என்ற ராணுவக் கூட்டையும் அமெரிக்கா உருவாக்கியுள்ளது. இவை, "நேட்டோவை" ஒத்த ராணுவக் கூட்டணிகளாகும். சீனாவின் வளர்ச்சியை தடுப்பது என்ற நோக்கத்துடன் இவை உருவாக்கப்பட்டுள்ளன.

தற்பொழுது, சீனா – தைவான் இடையே, ராணுவ மோதலை அமெரிக்கா உருவாக்க முயல்கிறது.

ஏகாதிபத்திய எதிர்ப்பு விடுதலைப் போராட்டம் மூலம் உருவான, இந்தியாவின் அணிசேரா கொள்கைக்கு எதிராக இந்தியாவையும் "குவாட்" ராணுவக் கூட்டணியில் பாஜகவின் ஒன்றிய அரசு இடம் பெறச் செய்துள்ளது.

இந்த "குவாட்" ராணுவக் கூட்டணி மூலம், இந்தியாவையும் சீனாவிற்கு எதிராக தூண்டிவிடும் வகையில் சூழ்ச்சி வலைகளை, அமெரிக்கா பின்னுகிறது.

ரஷ்யாவிற்கு எதிராக, உக்ரைனை பயன் படுத்துவது போல், சீனாவிற்கு எதிராக, இந்தியாவையும், தைவானையும் பயன்படுத்த அமெரிக்கா முயல்கிறது.

தைவான், சீனாவின் ஒருங்கிணைந்த பகுதி என ஏற்றுக் கொண்டிருந்த அமெரிக்கா, தற்பொழுது அதற்கு எதிரான நிலைபாட்டை எடுத்து, மோதலை உருவாக்குகிறது. ராணுவ ரீதியான பதற்றம் அதிகரித்துவருகிறது. அமெரிக்காவின் இத்தகையப் போர் வெறி, ஆசிய – பசிஃபிக் பகுதியின் சமாதானத்திற்கும், அமைதிக்கும் அச்சுறுத்தலாகியுள்ளது.

இந்நிலையில், ஆசிய பசிஃபிக் பகுதியில் சமாதானத்தைப் பேணவும், உலக சமாதானத்தை பாதுக்காக்கவும், அமெரிக்காவின் சதிகளை முறியடிக்கவும், உலக சமாதானச் சக்திகளை இப்பகுதியில் வலுப்படுத்த வேண்டும்.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பொருளாதாரம் என்பது "போர் பொருளாதாரமாகியுள்ளது". எனவே, போரை தூண்டிவிடுகிறது,நடத்துகிறது. உற்பத்திச் சாதனங்களின் தனிஉடைமையை கொண்ட சமூகப் பொருளாதார அமைப்பும், சுரண்டலும் போர்களுக்கும், ஆயுத மோதல்களுக்கும் அடிப்படை காரணமாக உள்ளன.

எனவே, உலக சமாதானத்திற்கான போராட்டம் என்பது சாராம்சத்தில் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான வர்க்கப் போராட்டமாகும். சுரண்டலை ஒழிப்பதற்கான போராட்டமாகும்.

சுரண்டலை அடிப்படையாகக் கொண்ட, சமூகப் பொருளாதார அமைப்பையும், நாடுகளுக்கிடையேயான உறவுகளையும் மாற்றுவதற்கான போராட்டமாகும்.

நாடுகளின், சுயநிர்ணய உரிமையை உறுதி செய்வதற்கான போராட்டமாகும்.

அப்போராட்டத்தில் இந்திய மக்களையும் அணி திரட்ட வேண்டிய மாபெரும் பணி, கடமை, நோக்கம் "ஐப்சோ" விற்கு உள்ளது.

இந் நோக்குடன், இவ்வமைப்பு செயல்படுகிறது.

இந்த அமைப்பில் இடதுசாரி, ஜனநாயக, மதச்சார்பற்ற அமைப்புகள் ஒன்றிணைந்து செயல்படுகின்றன.

தொடர்புக்கு: 9940664343

# மாணவர் பெருமன்ற மாநாட்டு கருத்தரங்கில் நிகழ்த்தப்பட்ட கருத்துரைகள்

அனைத்திந்திய மாணவர் பெருமன்ற மாநில மாநாடு வடசென்னை மாவட்டம், தண்டையார்பேட்டையில் பிப். 5, 6, 7 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. இதில் தலைவர்கள் ஆற்றிய உரை வருமாறு:

### மே.து.ராசுகுமார்



முன்னாள் மாணவர் பெருமன்ற மாநிலச் செயலாளர் மே.து.ராசுகுமார் கொடியேற்றிவைத்து உரையாற்றியபோது, நான் அண்ணாமலை பல்கலையில் படித்துக் கொண்டிருந்த பொழுது எனது சக மாணவராக இருந்தவர் இன்று 50க்கும் மேற்பட்ட சமூக நாட்டுப்புறவியல் ஆராய்ச்சி நூல்களை எழுதிய ஆ.சிவசுப்பிரமணியம் ஆவார்.

அவர் தான் என்னை மாணவர் பெருமன்றத்தில் அறிமுகப்படுத்தி இணைத்தவர். நான் அமைப்பில் மாநில செயலாளராக பணியாற்றி விடைபெற்று 54 ஆண்டுகள் ஆகிவிட்டன. 50 ஆண்டுகள் கடந்து மீண்டும் மாநில மாநாட்டில் மாநாட்டு கொடியேற்றி, பிரதிநிதி தோழர்கள் மத்தியில் உரையாற்றுவது பெரும் மகிழ்ச்சி அளிக்கிறது.

கல்வியில் பாடத்திட்டத்தை உருவாக்குவதில் இருந்து, துணைவேந்தர்களை நியமிப்பது வரை ஒன்றிய அரசே முழு அதிகாரத்தையும் கொண்டிருக்கிறது. இதனை எதிர்த்து அமைப்பு போராட வேண்டும். தமிழ்நாட்டில் இன்று கல்வி பரவலாக்கப்பட்டு இருக்கிறது. அதன் விளைவாக அனைத்து தரப்பட்ட சமூகத்தைச் சார்ந்த மாணவர்களும் அனைத்து பாடப்பிரிவுகளிலும் முதன்மை இடத்தை பெற்று முன்னேறி உள்ளனர்.

மாணவர் பேரவைத் தேர்தல் இப்போது அரசு, அரசு உதவி பெறும், தனியார் என எந்தக் கல்லூரிகளிலும் நடத்தப்படுவதில்லை. மாணவர் பேரவைத் தேர்தல்களே மாணவர்களை அரசியல்படுத்தும். அதேபோல் நீங்கள் படிப்பிலும் முதன்மையான இடத்தில் இருக்க வேண்டும் என்று பேசினார்.

மாநிலப் பட்டியலில் கல்வி என்ற கருத்தரங்கத்தில் எல்.ஜவகர் நேசம், தி.செந்தில்வேல் ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

### எல்.ஜவகர் நேசம்

சவிதா பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் ஜவகர் நேசன் பேசும்போது, ஜனநாயகம், சமதர்மம், சமத்துவம், விஞ்ஞான அறிவியல்களை சொல்லித் தர வேண்டிய கல்வி, ஆட்சியாளர்களின் அறியாமையால் திசை திருப்பப்பட்டு விட்டது. இப்படி காட்டுமிராண்டித்தனமான கல்வி முறையே புழக்கத்தில் உள்ளது.

மேலும் தேசிய கல்விக் கொள்கை என்ற பெயரில் முற்றிலுமாக கல்வி சிதைக்கப்பட்டு வருகிறது. இப்படி பல்வேறு அபாயங்களில் சிக்கியுள்ள கல்வியைக் காக்க வேண்டும் என்றால் கல்வி என்றால் என்ன? அதன் பணிகள் என்ன? கற்பித்தல் என்றால் என்ன? என்பதை நாம் முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். பிறகு அதை அடைவதற்காக போராட வேண்டும்.

முதிர்ச்சி பெற்ற சமூகம் என்று நம்மை நாமே சொல்லிக் கொண்டாலும், காட்டுமிராண்டித்தனங்கள் இன்னும் அப்படியே இருக்கிறது. அதற்கு கல்வி வயப்படாத நிலையே காரணம். கல்வி ஒருவனுக்கு முழுமையாய் புகுத்தப்பட்டது என்றால் அவன் முழு மனிதனாய் உருவெடுப்பான்.

ஆனால் கல்வி இத்தனை ஆண்டுகளாக முழுமையாக மக்களை சென்றடையவில்லை. அந்த காலத்தில் நேரடியாக கழிவுகளை மனிதனை உண்ண சொன்னது போல, தற்போது நேரடியாக உண்ண சொல்ல முடியாது என்பதால் சற்று நிலை மாறி, தற்பொழுது குடிநீர் தொட்டியில் மலத்தை கலக்கும் நிலை ஏற்பட்டு இருக்கிறது.

மூடநம்பிக்கை, பிற்போக்குவாதம், முரட்டுத்தனங்கள் என்ற ஒட்டுமொத்த சீர்கேட்டிலிருந்தும் தெளிவு பெற வேண்டுமென்றால் கல்வி அதன் நோக்கத்தை முழுமையாக வெளிப்படுத்த வேண்டும். ஆனால் கல்வி தனது பணியை சரியாக செய்து விட்டது என்றால் தங்களால் ஆட்சி செய்துவிட முடியாது என்று முதலாளித்துவ அரசியல்வாதிகள் சிந்தித்து மக்கள் கல்வியை முழுமையாக பெறவிடாமல் தொடர்ந்து தடுத்து வருகின்றனர் என்றார்.

### டி.எம்.மூர்த்தி

வர்க்க அணிதிரட்டலில் மாணவர்கள் எனும் தலைப்பில் ஏஐடியுசி தேசிய செயலாளர் டி.எம்.மூர்த்தி பேசும்போது, தோழர்களே நான் 50 ஆண்டுகளுக்கு முன்பு அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தில் உறுப்பினராக சேருகின்ற பொழுது என் வாழ்க்கையையே முற்றாக மாற்றிப் போடப் போகிறது என நான் உணரவில்லை.

இந்த நாட்டின் உழைக்கும் வர்க்கம் பல ஆண்டுகளாக போராடிப் பெற்ற தொழிலாளர் சட்டங்களை நான்கு தொகுப்புகளாக மாற்றுவதற்கு ஒன்றிய அரசு முயற்சித்து வருகிறது. இதனால் தொழிலாளர்கள் மிகுந்த பாதிப்புக்கு உள்ளாகும் நிலை உள்ளது. கற்ற கல்வி, ஒரு பணிக்கு



உறுதியளிக்க வேண்டும். தொழிலாளர் உரிமைப் பறிக்கப்படுவதால், நாளை வேலைக்கு வர இருக்கிற உங்களுக்குத்தான் அதிக பாதிப்பு இருக்கிறது. உங்கள் தந்தைக்கு கிடைத்த வேலை, ஊதிய உத்தரவாதம், உங்களுக்கு மறுக்கப்பட அனுமதிக்கக் கூடாது. ஆகையால் ஏ.ஐ.டி.யு.சி.ஏ.ஐ.எஸ்.எப்.ம் போராட்டக் களத்தில் இணைந்து நின்று வீறு கொண்டு எழுவோம். உங்களுடைய பயணத்திற்கு தொழிற்சங்கம் முழு ஒத்துழைப்பை தரும் என்று பேசினார்.

### பிரின்ஸ் கஜேந்திர பாபு

மக்களுக்கான கல்விக் கொள்கை என்ற தலைப்பில் கல்வியாளர் பிரின்ஸ் கஜேந்திர பாபு பேசும்போது, ஒரு நிகழ்ச்சியில் உரையாற்றிய குடியரசுத் துணைத் தலைவர் கூறுகிறார், நாடாளுமன்றத்திற்கு தான் அனைத்து அதிகாரமும் உள்ளது. ஏனென்றால் நாடாளுமன்றம் தான் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டது. எனவே நீதிமன்றத்தை காட்டிலும் நாடாளுமன்றத்திற்கே அதிக அதிகாரம் இருக்கிறது. நீதிபதிகள் நாடாளுமன்ற விவகாரங்களில்,



அரசின் முடிவுகளில் தலையிடக்கூடாது. அதே குடியரசு துணைத் தலைவரை பார்த்துக் கேட்க வேண்டிய ஒன்று உள்ளது.


சட்டமன்றமும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டது தான், சட்டமன்றத்தின் உறுப்பினர்களும் மக்கள் பிரதிநிதிகள் தான், ஆனால் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட நீட் எதிர்ப்பு மசோதாவை மதிக்காத குடியரசுத் தலைவருக்கும், பிரதமருக்கும் முதலில் சொல்லிக் கொடுங்கள். தொடர்ந்து காலம் தாழ்த்துவது ஏன் என்று கேளுங்கள். நீட் மசோதாவிற்கு ஒப்புதல் வழங்குங்கள்.

கல்வி என்பது அதிகாரம். அரசு அதை கொடுத்தால் மக்களை அதிகாரப்படுத்துகிறது என்று பொருள். அரசு கல்வியை மறுத்தால் அதுமக்களை பலவீனப்படுத்துகிறது என்று தான் பொருள். எனக்கான அதிகாரத்தை, கல்வியை தடுக்க நினைக்க கூடிய அரசாகவே ஒன்றியத்தின் அரசு இருக்கிறது என்றார்.

### தி.செந்தில்வேல்

ஊடகவியலாளர் செந்தில்வேல் பேசும்போது, டெல்லி பல்கலைக்கழகத்திலும், குஜராத் பல்கலைக்கழகத்திலும் பட்டம் படித்தேன் என்று கூறிய பிரதமர், இன்று வரை அதற்கான ஆதாரத்தை தரவில்லை. இது குறித்து தகவல் ஆணையத்தில் கேட்டு, தகவல் ஆணையம் டெல்லி பல்கலைக்கழகத்திடம் தகவல் கேட்டு, இன்றுடன் 5 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. ஆனால் இதுவரை பதில் அளிக்கவில்லை. மாறாக நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டிருக்கிறது. காரணம் என்ன? பிரதமர் படித்தாரா? படிக்கவில்லையா? என்பதே பஞ்சாயத்து. இப்படி கல்வியைப் பற்றியே தெரியாத பிரதமர் ஒருபுறம் இருக்க, பல்லாண்டுகளாக கல்வியை மறுத்த வண்ணம், மீண்டும் இவர்களின் ஆட்சியில் ஆதிக்கம் செலுத்த தொடங்கி விட்டது. நாட்டில் உள்ள மற்ற மாநிலங்களை விட தமிழ்நாடு கல்வியில் வளர்ந்து உள்ளது. மேலும் வளர்ந்து கொண்டு இருக்க, கல்வி அறிவே பெறாத மோடி அறிவியலுக்கு புறம்பான கல்வி முறையை நமக்கு சொல்லித் தர முயற்சிக்கிறார்.

இப்படி தமிழ் நாட்டின் கல்வி முறையை சிதைக்க பார்க்கிறார். இது எப்படி இருக்கிறது என்றால் பல அரியர்



வைத்த மாணவன், மிக அதிக மதிப்பெண்ணை பெற்று தேர்ச்சி பெற்ற மாணவனை பார்த்து "நீ என்னை மாதிரி நல்லா படிக்கணும்" என்று சொன்னால் எப்படி கோவம் வருமோ அது மாதிரி வருது என்றார்.

### ஜி.முரளி

வங்கி ஊழியர் சங்கத்தின் சார்பில் ஜி.முரளி பேசியபோது, மாணவர்களுக்கு கல்வி, வேலைவாய்ப்பு மிக முக்கியமானது. மோடி தலைமையிலான அரசு பொறுப்பேற்றதிலிருந்து வேலையில்லா திண்டாட்டம் தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. வங்கிகளில், பொதுத்துறை நிறுவனங்களில் காலிப் பணியிடங்கள் நிரப்பப்படாமலேயே உள்ளன.

பணியில் இருக்கிற பொழுது இறந்து போகக் கூடியவர்களுடைய வாரிசுகளுக்கு கருணை அடிப்படையில் கொடுக்கக்கூடிய வேலை வாய்ப்பை பொது வேலை வாய்ப்பை உருவாக்கியதாக பொய்யான கணக்கை காட்டி ஏமாற்றுகிறது மோடி அரசு. வேலையின்மைக்கு எதிரான போராட்டத்தை வலுவாக முன்னெடுக்க வேண்டுமென்று பேசினார்.





ஹரீஷ் பாலா

**மாநிலங்களில் ஆளுநர் பதவிகள் தேவையா என்ற கேள்விகள் மீண்டும் எழுகின்றன. இன்று பாஜக அல்லாத கட்சிகள் ஆட்சி செய்யும் மாநிலங்களில் நியமிக்கப்பட்ட ஆளுநர்களின் செயல் பாடுகளால் இது குறித்த விவாதங்கள் சூடு பிடிக்கின்றன.**

# நியமிக்கப்படும் ஆளுநரைவிட தேர்ந்தெடுக்கப்படும் அரசு உயர்ந்தது



இத்தகைய ஆளுநர்களும், துணைநிலை ஆளுநர்களும் பாஜக கட்சி ஏஜெண்டுகள் போலச் செயல்படுகின்றனர். தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளின் தினசரிச் செயல்பாடுகளில் தலையீடு செய்கின்றனர். ஆர்எஸ்எஸ் கருத்தோட்டத்தின் பிரச்சாரகர் களாகவும் இவர்கள் செயல்படுகின்றனர்.

சமீபத்திய பல்வேறு நிகழ்வுகள் இக்குற்றச்சாட்டை மெய்ப்பிக்கின்றன. கேரளா, தமிழ்நாடு, தெலுங்கானா மற்றும் பிற பாஜக அல்லாத ஆட்சி நடைபெறும் மாநிலங்களில், அந்த அரசுகளைத் தேர்ந்தெடுத்த மக்களின் விருப்பத்திற்கும், தீர்ப்பிற்கும் எதிராக ஆளுநர்கள் நடந்து கொள்ளும் நிகழ்வுகள் அரங்கேற்றப்படுகின்றன.

### ஆளுநர் பதவி உருவான வரலாறு

இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் காலனிய ஆட்சி சகாப்தத்தில் பிரிட்டிஷ் பேரரசின் கட்டளைக்கு இணங்கி நாட்டை நிர்வகிக்க கவர்னர் பதவிகள் ஏற்படுத்தப்பட்டன. 1857ன் முதல் இந்தியச் சுதந்திரப் போராட்டத்தின் காரணமாக அதற்கு அடுத்த ஆண்டு 1858ல் கிழக்கிந்திய கம்பெனியின் பகுதிகளும் ஆஸ்திகளும் பிரிட்டிஷ் அரசின் நேரடிக் கட்டுப்பாட்டில் வந்தன. இதன் பின், பஞ் சாப், வங்காளம், பாம்பே, மெட்ராஸ், ஐக்கிய மாகாணங்கள் மற்றும் பிற பகுதிகளை நிர்வகித்த இந்தியாவின் மத்திய அரசுக்கு கவர்னர் ஜெனரல் தலைமை வகிக்கத் தொடங்கினார். அவர்கள் ஒவ்வொரு மாகாணப் பகுதிகளுக்கும் ஆளுநர்களை நியமித்தனர், அந்த ஆளுநர்கள் கவர்னர் ஜெனரலுக்கு நேரடியாக அறிக்கைகளைச் சமர்ப்பித்தனர்.

மாகாணங்களில் முன்பு இரண்டு அதிகாரிகளுக்குக் கீழே செயல்பட்ட இந்த இரட்டை ஆட்சி முறைக்கு (diarchy) இந்திய அரசுச் சட்டம் 1935 முடிவுக்குக் கொண்டு வந்தது, சுயஆட்சி அதிகாரத்தை அதிகரித்தது. ஆறு மாகாணங்களில் இரண்டு அடுக்குச் சட்டமன்றங்கள் வந்தன.

தனித்த வாக்காளர்கள் அடிப்படையில் 1937 மற்றும் 1946ல் தேர்தல்கள் நடத்தப்பட்டன. இது பிரதம மந்திரி தலைமையில் மாகாண அரசுகள் அமைப்பதற்கு வழி கோலின. மாகாணங்கள் சுய அதிகாரம் உடையனவாகச் சொல்லப்பட்டாலும், முடிவுகளில் ஒவ்வொரு மாகாணத்திலும் ஆளுநர்களே செல்வாக்கு செலுத்தினர். சுய அதிகாரம் வெறும் வார்த்தையில் இருந்தது. உண்மையில் அமல்படுத்தப்படவில்லை. ஆளுநர்கள் மாகாண அரசுகளைக் கட்டுப்படுத்தினர்.

### அதே வரலாறு பாஜக ஆட்சியில்

பாஜக தலைமையிலான தற்போதைய ஒன்றிய அரசு, ஒவ்வொரு மாநிலத்திலும் அதே பழைய காட்சிகளைத் திரும்பக் கொண்டு வர முயற்சிக்கிறது. 2019ல் மராட்டிய மாநிலத்தில் அரசியல் குழப்பத்தால் தேர்தல்களுக்குப்பிறகு பாஜக கூட்டணியில் முதல்வர் பதவி எந்தக் கட்சிக்கு என்பதில் ஏற்பட்ட சச்சரவால் சிவசேனா பாஜகவுடன் சேர்ந்து அரசு அமைக்கத் தயாராக இல்லை. அரசமைக்கும் பெரும்பான்மையுடன் எந்தக் கட்சியும் இல்லாத காரணத்தால் கட்சிகளிடையே சாத்தியமான கூட்டணி அமைக்க பேச்சுவார்த்தைகளில் கட்சிகள் ஈடுபட்டன.

ஆனால் மாநிலத்தின் அன்றைய ஆளுநர் பகத் சிங் கோஷ்யாரி முதல்வராகத் தேவேந்திர பட்டனாவிஸ் மற்றும் துணை முதல்வராக அஜீத் பாவர் இருவருக்கும் பதவிப் பிரமாணத்தை ராஜ் பவனில் நடத்தி வைத்தார். இதன் மூலம் மாநிலத்தின் கட்சிகளிடையே அரசியல் சுழல் அலைகளின் சலசலப்பைத் தொடங்கி வைத்தார். அது மட்டுமா? ஆளுநர் குதிரை பேரங்களுக்குத் திறப்புவிழா செய்து விட்டார். அதிர்ஷ்டவசமாக, எதிர்கட்சிகள் அரசமைக்க ஒன்றுபட்டனர், தேவேந்திர பட்டாவின் அரசு அல்ப ஆயுசு காலமே வாழ்ந்தது.

### கர்நாடக அனுபவம்

2018 கர்நாடகா தேர்தல்களுக்குப் பின் எக்கட்சிக்கும் பெரும்பான்மை இல்லை. காங்கிரஸ், ஐக்கிய ஜனதா தளம் தேர்தலுக்குப் பின் கூட்டணி அமைத்து அரசமைக்க அப்போதைய மாநில ஆளுநர் விஜூபாய் வாலாவை அணுகின. அதனைப் பரிசீலிப்பதற்கு மாறாக ஆளுநர், எடியூரப்பாவுக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். அவரும் ஆப்பரேஷன் கமலா (தாமரை அதிரடி) திட்டத்தின் கீழ் காங்கிரஸ், ஜெடி(எஸ்) கட்சிகளின் சட்டமன்ற உறுப்பினர்களைக் கவர்ந்து செல்ல முயன்றது தோல்வியில் முடிய, நம்பிக்கை வாக்கெடுப்பில் தோல்விக்கு அஞ் சிய அவரும் நான்கே நாட்களில் ராஜினாமா செய்தார்.

### கேரள அனுபவங்கள்

சமீபத்தில் கேரளாவில் தேர்ந்தெடுக்கப்பட்ட இடது ஜனநாய முன்னணி அரசுடன் அம்மாநில ஆளுர் ஆரிஃப் முகமதுகான் மற்றும் தமிழ்நாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட திமுக அரசுடன் ஆளுநர் ஆர். என்.இரவி ஏற்படுத்திய மோதல்கள் மேலதிகமாகத் தத்துவார்த்த கருத்தோட்டங்களின் மோதல்களே.

கேரளாவில் மாநில அரசின் பரிந்துரைகளைநிராகரித்து ஆளுநர் ஆரிஃப் முகமது கான் பாஜக ஆதரவாளர்களை மாநில அரசு நடத்தும் பல்கலைக் கழகங்களின் துணை வேந்தர்களாகப் நியமித்தார். துணை வேந்தர்கள் நியமனம் மாநில அரசின் பரிந்துரைகளின் அடிப்படை யிலே நடப்பது வழக்கம். முன்பு பின்பற்றிய வழக்கத்திற்கு மாறாக நடப்பது என்பது அரசைத் தேர்ந்தெடுத்த மக்களின் விருப்பத்திற்கு எதிரானது.

இதற்குப் பதிலடியாக இடது ஜனநாயக முன்னணி அரசு மாநிலப் பல்கலைக் கழகங்களின் வேந்தர் பொறுப்பிலிருந்து ஆளுநரை நீக்கி சட்ட மன்றத்தில் அவசரச் சட்டம் கொண்டு வந்தது. அவசரச் சட்டத்திற்கு ஆளுநர் இதுவரை தனது ஒப்புதலை அளிக்கவில்லை. தேசிய கல்விக் கொள்கையை நிராகரித்த மாநிலத்தில், ஆர்.எஸ்.எஸ். நிகழ்ச்சி செயல்திட்டங்களையும் கருத்துகளையும் பிரச்சாரம் செய்யவே ஆளுநர் பல்கலைக் கழக வேந்தர்களாக ஆர்.எஸ்.எஸ். கருத்தாளர்களை நியமிக்க முயற்சி செய்கிறார்.

### தமிழ்நாட்டில் திருவிளையாடல்கள்

தமிழ்நாட்டின் ஆளுநர் ஆர்.என்.இரவி சர்ச்சைக்குரிய விஷயங்களில் பரபரப்பை ஏற்படுத்துவதைத் தனது வழக்கமான கடமையாகக் கொண்டிருக்கிறார். ஆன் லைன் சூதாட்டத்தைச் சட்டவிரோதமாக்கி சட்டமன்றம் மசோதா நிறைவேற்றி அனுப்பினால் அந்த மசோதாவிற்கு ஆளுநர் ஒப்புதலும் அளிக்கவில்லை அரசுக்குத் திருப்பி அனுப்பவும் இல்லை; அதன் மூலம் மசோதாவை ஒன்றுமில்லாது பயனற்றதாக்கினார்.

இத்தனைக்கும் ஆன்லைன் சூதாட்ட வலைதளங்களில் சிக்கி, பல இளைஞர்கள் தமிழ்நாட்டில் தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்கள். தமிழக அரசு முறையாக குழு அமைத்து ஆராய்ந்து மசோதாவை நிறைவேற்றி அனுப்பினால், ஆளுநரின் மௌனம் மீண்டும் சூதாட்டத்தைச் சட்டபூர்வமாக்கியது. தமிழக இளைஞர்களின் வாழ்வுடன் விளையாடும் ஆளுநரின் இச்செயலைப் பல்வேறு அரசியல் கட்சிகள், சமூகச் செயற்பாட்டாளர்கள் கண்டித்தனர்.

மாநிலத்தின் அதிகாரபூர்வ பெயர் ‘தமிழ்நாடு’ என்பதைவிட ‘தமிழகம்’ என்ற வார்த்தை அதிகப் பொருத்தமானது என்று திருவாய் மலர்ந்தருளினார். மாநிலம் முழுமையும் ஆளுநரின் இந்தக் கூற்றுக்குக் கடும் எதிர்வினையாற்றியது. அடுத்து உடனே அவர் புதிய சர்ச்சையில் இறங்கினார்: ஆண்டின் முதல் சட்டமன்ற கூட்டத்தொடரில் உரை நிகழ்த்தியவர், தனது உரையில் சில பகுதிகளைப் படிக்காது தாண்டிச் சென்று, சிலவற்றை நீக்கி விட்டுவிட்டும், புதிதாகச் சில பத்திகளை அவரே சேர்த்தும் உரை ஆற்றினார்.

உரையின் வரைவை அந்தந்த மாநில அரசுகளே தயாரித்து ஆளுநருக்கு முன்னதாக அனுப்பி வைக்கும். ஆளுநரும் அதைப் படித்துப் பார்த்து அதையே சட்டமன்றத்திலும் படிப்பதே மரபும் வழக்கமும் ஆகும். வரைவில் பிரச்சனை இருக்குமெனில், ஆளுநர் அலுவலகம் அதை அரசுக்குத் தெரிவித்து முன்னதாகவே விளக்கங்களையும் பெற வேண்டும். இந்த உரையைப் பொருத்த அளவு, ஆளுநர் ஆர். என்.இரவியும் அவரது அலுவலகமும் வரைவு உரை ஏற்கப்பட்டதாக ஒப்புதல் அளித்து மாநில அரசுக்குத் தகவலும் அளித்துள்ளது.

ஆனால் தான் ஒப்புதல் அளித்த உரையையே, மாநில அரசுக்குத் தகவல் ஏதும் தராமல், ஆளுநர் சட்டமன்றத்தில் மாற்றிப் படித்தார். அவர் ஆற்றிய உரையில் மதச்சார்பின்மை, திராவிட மாடல், சமூகநீதி, மாநிலத்தில் அமைதி முதலிய சொற்பதங்கள் தவிர்க்கப்பட்டன.

அது மட்டுமின்றி உரையில் பெரும் தலைவர்கள் பெரியார், காமராஜர், அம்பேத்கர், அண்ணாதுரை, கருணாநிதி போன்ற பெயர்களையும் தவிர்த்தார். இந்த வார்த்தைகள் மற்றும் பெயர்கள்பால் ஒவ்வாமை உடைய ஆர்.எஸ்.எஸ். சித்தாந்தத் திட்ட நிரல்படி அமைந்த ஆளுநரின் இச்செயல், நிச்சயமாக ஒரு உள்நோக்கத்துடன் செயல்பட்டதையே காட்டுகிறது.

### புதுச்சேரி அனுபவம்

புதுச்சேரியில்கூட என்.ஆர்.காங்கிரஸ் தலைமையிலான என்.டி.ஏ. அரசின் முதலமைச்சர்என்.ரங்கசாமி அரசின் அன்றாட நிர்வாக விஷயங்களில் துணைநிலை ஆளுநர் தமிழிசை சௌந்திரராஜன் தலையீட்டை எதிர்த்துப் பேசினார். ’அரசை நடத்துவதே கடினமாகிறது’ என அவர் கூறியது பதிவாகி உள்ளதென்றால் எந்த அளவு அவர் நொந்துபோய் உள்ளார் என்பது தெரிகிறது.

பாஜக அல்லாத அரசுகளுக்குத் தொல்லைகள், சங்கடங்கள் ஏற்படுத்த ஆளுநர் பதவியைப் பாஜக தவறாகப் பயன்படுத்துகிறது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஆளுநர்கள் ஆணவ அதிகாரமிக்கவர்களாக மாறி வருகின்றனர், தேர்ந்தெடுக்கப்படும் மாநில அரசுகளைவிட தாங்கள் கூடுதல் அதிகாரம் படைத்தவர்களாக நினைத்துக் கொள்கிறார்கள். அவர்களின் இந்த எண்ணம், ஜனநாயகத்தின் அடிப்படை கட்டமைப்புக்கு எதிரானது.

### சிபிஐ போராட்டம்

2022, டிசம்பர் 29ல் ‘கூட்டாட்சி பாதுகாப்பு தினம்’ அனுசரிக்க இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அறைகூவல் விடுத்தது, பல்வேறு மாநிலங்களில் ஆளுநர்களை எதிர்த்துக் கண்டனப் போராட்டங்கள் நடத்தப்பட்டன. தமிழ்நாட்டில் ஆளுநர் மாளிகையை முற்றுகையிடப் பேரணியாய்ச் சென்ற பல்லாயிரக் கணக்கான சிபிஐ தோழர்கள் கைது செய்யப்பட்டனர். சிபிஐ தமிழ்நாடு மாநிலக் குழுத் தலைவர்களுடன் சிபிஐ பொதுச் செயலாளர் டி.ராஜாவும் கைது செய்யப்பட்டார். அதே நாளில் டெல்லியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் சிபிஐ தேசியச் செயலாளர் அமர்ஜித் கவுர் பங்கேற்றார். நாடு முழுதும் எழுச்சியுடன் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் விஜயவாடா கட்சிப் பேராயம், நாட்டின் ஆளுநர் பதவிகளை ஒழிப்பதற்கான அரசியல் அமைப்புச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வருமாறு தீர்மானம் நிறைவேற்றியது.

ஆளுநர்கள் ஏதேச்சிகாரம் பிடித்தவர்களாகவும், ஆளுநர் மாளிகைகள் மாநிலங்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளுக்கு எதிராகச் சூழ்ச்சி செய்யும் சதிகாரக் கூடாரங்களாகவும் ஆகி வருவதால், மாநிலங்களின் ஆளுநர் பதவிகளை ரத்து செய்ய வேண்டும் என்ற கோரிக்கைகள் தீவிரமடைகின்றன. ஜனநாயகத்திற்குப் புறம்பான, காலனிய ஆட்சியின் மிச்ச சொச்சமான ஆளுநர் பதவிகளை ஒழிக்க மக்கள் இயக்கத்தைக் கட்டுவோம்!

**நன்றி : நியூஏஜ்**
**தமிழில் : நீலகண்டன்**



# ஒன்றிய அரசு கல்வியில் கொண்டுவரும் ஒவ்வொரு சட்டமும் நமக்கு எதிரானது

## அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி பேச்சு

**அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் 16வது மாநில மாநாட்டில் பங்கேற்பதில் பெருமையடைகிறேன். வருங்கால தமிழகத்தை, வருங்கால இந்தியாவை கட்டமைக்கும் வல்லமை பொருந்திய பணியில் ஈடுபட்டுள்ள மாணவர்களாகிய உங்களை வாழ்த்துகிறேன்.**

இந்த அரங்கத்திற்குள் நான் நுழைகிறபோது எனது கல்லூரி நாட்கள் நினைவுக்கு வந்தன. நான் இன்று பள்ளிக் கல்வித்துறை அமைச்சராக இருக்கிறேன். பலமாவட்டங்களுக்கு, பலமாநிலங்களுக்கு, ஏன் பல வெளிநாடுகளுக்கு செல்லும்போது பல கருத்தரங்கங்களில் பங்கேற்கிறேன். அவையெல்லாம் திட்டமிட்ட வகையில் நடைபெறும். எல்லாம் தயாராக இருக்கும். ஆனால் இங்குதான் எல்லாம் இயல்பாக நடந்தன. இதுஎனதுகல்லூரிகாலத்தைதான் எனக்கு நினைவுபடுத்துகிறது.

நாம் எல்லாம் ஒன்றாக அமர்ந்து நமக்கான கூட்டத்தை நாமேதான் ஒழுங்குபடுத்தினோம். என்னதான் நான் அமைச்சராக இருந்தாலும் உங்களோடு ஒன்றாக அமர்ந்து பேசி, செயல்படும்போதுதான் உங்கள் எண்ணங்கள் எப்படி இருக்கிறது என்பதை அறிந்து கொள்ளும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது.

மாணவர்களுக்கு முன்னால் நானும் ஒரு மாணவனாகவே பேசுகிறேன். தமிழ்நாட்டில் கல்விமுறை மிகச்சிறப்பாக இருக்கிறது. இதுதான் ஒன்றிய அரசுக்கு உறுத்துகிறது. தமிழ்நாட்டில் மருத்துவர்கள் அதிகமாக இருக்கிறார்களா? செவி லியர்கள் அதிகமாக இருக்கிறார்களா? அப்படியென்றால் நீட் தேர்வை கொண்டு வருகிறோம் என ஒன்றிய அரசு கொண்டு வருகிறது.

தமிழ்நாட்டில் நிறைய அணைக்கட்டுகள் கட்டியுள்ளீர்களா? இதோ அணைப் பாதுகாப்புசட்டத்தை கொண்டுவருகிறோம். நாங்கள் சொல்லும்போதுதான் நீங்கள் நீரை திறக்க வேண்டும், மூட வேண்டும் என ஒன்றிய அரசு சொல்கிறது.

பொருளாதாரத்தில் வளர்ந்திருக்கிறீர் களா? உங்களிடம் நாங்கள் ஜி.எஸ்.டி வசூலித்தாலும் அதில் குறைந்த தொகையையே கொடுப்போம் என்று ஒன்றிய அரசு பறிக்கிறது. அசுர பலத்தில் இருக்கும் ஒன்றிய அரசு புதிய புதிய சட்டங்களை போடுகிறது. இதை எதிர்த்துதான் இந்தக் கருத்தரங்கம் நடைபெறுகிறது.


உங்களைப் பார்த்து நாங்கள் ஊக்கம் கொள்கிறோம். எங்களைப் பார்த்து நீங்கள் ஊக்கம் கொண்டு ஒன்றிய அரசின் தவறான கொள்கைகளை எதிர்த்து போராடி முறியடிக்க வேண்டும்.

இந்தியா என்பது பன்முகத்தன்மை வாய்ந்த நாடு. ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ஒவ்வொரு வாழ்க்கை முறை உள்ளது. ஏன், பேசும் மொழியிலிருந்து பழக்க வழக்கங்கள் வரை மாறுபட்டு இருக்கிறது. இதனால்தான் அரசியல் சட்டத்தை வடிவமைத்தவர்கள் கல்வியை மாநிலப் பட்டியலில் வைத்தார்கள். அந்தந்த மாநிலத்திற்கு என்னென்ன தேவையோ அதை யே அவர்கள் பாடமாக வைத்துக் கொள்ளலாம் என்று கூறினார்கள்.

தமிழ்நாட்டில் பஞ்சாயத்து அளவில் நிர்வாகத்தில்கூட என்னென்ன பாடத்திட்டங்கள் தேவையோ அதைப் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆனால், ஒன்றிய அரசு அதையெல்லாம் சீர்குலைத்து, கல்வியை பொதுப் பட்டிலுக்கு கொண்டு சென்றது.

**அவசரநிலை காலத்தில் போடப்பட்ட திட்டங்கள் அனைத்தையும் பின்னர் திரும்பப் பெற்றார்கள். ஆனால் பொதுப்பட்டியலுக்கு போன கல்வியை திரும்பப் பெறவில்லை. எனவே அதை திரும்ப மாநிலப் பட்டியலுக்கு கொண்டுவரத்தான் நாம் ஒவ்வொருவரும் போராடி வருகிறோம்.**

ஒன்றிய அரசு கல்வியில் கொண்டுவரும் ஒவ்வொரு திட்டமும் நமக்கு எதிரானதாகும். இது மீண்டும் பழைய குலக்கல்வி திட்டத்தை கொண்டு வரும் முயற்சியாகும். எனவேதான் நாம் தமிழ்நாட்டில் மாநில கல்விக் கொள்கையை உருவாக்க குழு அமைத்திருக்கிறோம். நமது உரிமைகளைப் பாதுகாப்பதில் கல்வி உரிமைகளை நிலைநாட்டுவதில் நாம் உறுதியாக இருப்போம். இந்த மாநாடு வெற்றிபெற உங்களுக்கு வாழ்த்துக்களை கூறி முடிக்கிறேன். இவ்வாறு பேசினார்.




## காந்தி படுகொலை, தேசியச்

# மாணவர்கள் அரசி



## மாணவர் பெருமன்ற மாநில மாநாட்டில் இரா.முத்தரசன் முழக்கம்

**அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் மாநில மாநாடு மிகச் சிறப்பாக நடைபெறுகிறது. அதனை வடசென்னை மாவட்டம் சீரோடும், சிறப்போடும் நடத்தி வருகிறது. நான் மாணவர்கள் பங்கேற்ற பேரணியை எப்படியாவது பார்க்க வேண்டும் என விரும்பினேன். நான் பல மாணவர் பெருமன்ற பேரணிகளை பார்த்திருந்தாலும், இந்த மாநாட்டு பேரணியை பார்க்க வேண்டும் என விரும்பினேன்.**

ஏறத்தாழ 43 மாவட்டங்களில் மாவட்ட மாநாடுகள் நடந்து முடிந்திருக்கின்றன. இந்த மாநில மாநாட்டிற்கான முன் தயாரிப்புகளும் மகிழத்தக்க வகையில் இருந்தன. ஒரு புதிய எழுச்சி ஏற்பட்டிருக்கிறது. தமிழ்நாடு முழுவதுமிருந்து நமது மாணவர்கள் திரண்டு வருகிறார்கள். இப்பொழுது ஒரு புதிய மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. உயர்நிலைப் பள்ளி மாணவர்கள், மேல்நிலைப்பள்ளி மாணவர்கள், கல்லூரி மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், சட்டக் கல்லூரி மாணவர்கள், மருத்துவக் கல்லூரி மாணவர்கள் உயர்கல்வி மாணவர்கள் உட்பட நமது மாணவர் அமைப்பை விரும்புகிறார்கள் என்பதனால், இந்தப் பேரணி மகத்தான வெற்றி பெற்றிருக்கிறது. இந்தப் பேரணியை நான் பார்க்க வேகமாக வந்த போதும் பார்க்க முடியவில்லை.

நான் வருகிற போதே பல தோழர்களிடம் பேரணி குறித்து விசாரித்துக் கொண்டே வந்தேன். இந்த பேரணியில்
மாணவ, மாணவிகளே பல்லா யிரக்கணக்கில் பங்கு பெற்றார்கள் என்பதே, இந்தப் பேரணியின் மகத்தான வெற்றியாகும். இந்த மகத்தான வெற்றி என்பதே மாற்றத்தை நோக்கி நகர்கிறது என்று அர்த்தமாகும்.

இங்கே பல புகைப்படங்கள் வைக்கப்பட்டுள்ளன. அவை யாவும் நமது தியாகத் தலைவர்களின் புகைப்படங்கள். ஒரு புகைப்படம் சாதாரண ஒரு பெண்மணி யினுடைய புகைப்படம் அல்ல. அவர் ஒரு ஜமீன்தாரின் மகள். லண்டனில் உள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் படித்தவர். பின்னர் அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தில் பணியாற்றி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நாடாளுமன்றத்திற்கு தேர்வு செய்யப்பட்டு பணியாற்றியவர். அவர்தான் பார்வதி கிருஷ்ணன். அவருடைய படம்தான் இங்கே இடம் பெற்றுள்ளது.

தேசப்பிதா என போற்றப்பட்ட காந்தியடிகளின் படம் இங்கே உள்ளது. பண்டித ஜவர்கலால் நேருவின் படம் இங்கே உள்ளது.

அனைத்திந்திய மாணவர் பெருமன்றம் 1936 ஆகஸ்ட் 1, 2 அன்று தொடங்கப்பட்ட போது அதனை தொடங்கி வைத்த மாபெரும் தலைவர் தான் ஜவர்கலால் நேரு. நேரு அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட மாபெரும் அமைப்புதான் அனைத்திந்திய மாணவர் பெருமன்றம்.

தோழர் பாலதண்டாயுதம் கோவையில் வசதியான குடும்பத்தைச்சேர்ந்தவர். அவரை அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் அவரது பெற்றோர் படிக்க வைத்தனர். அவர் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் படிக்கின்ற பொழுது மாணவர்களைத் திரட்டி விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டதின் காரணமாக பல்கலைக்கழகத் திலிருந்து வெளியேற்றப்பட்டார்.

தோழர் ப.மாணிக்கம் பிறந்தநூற்றாண்டு நிறைவை நாம் கொண்டாட உள்ளோம். அதற்கு தமிழ்நாட்டின் முதலமைச்சர் உட்பட பல்வேறு தோழமைக் கட்சி தலைவர்களும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மதிப்புமிக்க தலைவர்களும் பங்கேற்க உள்ளனர். இதில் ஒரு சிறப்பு மலரும் வெளியிட உள்ளோம். தோழர் ப. மாணிக்கம் பாலதண்டாயுதத்தோடு இணைந்து பணியாற்றியவர். இருவரும் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் படித்தவர்கள்தான்.

தமிழ்நாட்டில் அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம், அனைத்திந்திய மாணவர் பெருமன்றம் இரண்டும் வலுவான இயக்கமாக இருக்கிறது என்று சொன்னால், அதற்கு அடித்தளமிட்டவர் ப.மாணிக்கம் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. இதுபோன்றே மே.து.ராசுகுமார், ஈரோடு திருமலைராஜன் போன்ற ஏராளமானவர்கள்







## கல்விக் கொள்கை என அனைத்திலும் அரசியல் உள்ளது

# யலில் பகிரங்கமாக ஈடுபட வேண்டும்

உள்ளனர்.

1967–68 களில் தமிழகம் முழுவதும் மாணவர்களைத் திரட்டி தமிழ்நாடு மாணவர் பெருமன்றம் என்ற அமைப்பை உருவாக்கினார்.

1970 ஆம் ஆண்டு திருச்சியில் மிகுந்த எழுச்சியோடு மாணவர் பெருமன்ற சிறப்பு மாநாடு நடைபெற்றது. ஆயிரக்கணக்கான மாணவர்கள் பங்கு பெற்ற அந்த மாநாட்டில் தோழர் பாலதண்டாயுதம் சிங்கம்போல கர்ஜனை செய்தார். அன்றைய அரசு கொண்டு வந்த மன்னர் மானிய ஒழிப்பு, வங்கிகள் தேச உடமை ஆக்கப்பட்டதை ஆதரித்து வீரமுழக்கமிட்டார் பாலன்.

அடுத்தநாள் மாணவர்கள் பேரணி நடைபெற்றது. அதில் பாலதண்டாயுதம், எம்.கல்யாணசுந்தரம், தா.பாண்டியன், கே.டி.ராஜூ உள்ளிட்ட தலைவர்கள் பங்கேற்றனர். அன்றைக்கு மாணவர்கள் மத்தியில் ஏற்பட்ட எழுச்சியை இன்றைக்கு நான் பார்க்கிறேன். அத்தகைய ஆவேசத்தை நம்மால் பார்க்க முடிகிறது.

பேராசிரியர்கள் சங்க மாநாட்டில் நமது சார்பில் மு.வீரபாண்டியன் மிகச் சிறப்பான உரையை ஆற்றினார் என்று பல பேராசிரியர்கள் என்னிடம் பாராட்டினார்கள் என்றால், அந்த பெருமை மாணவர் பெருமன்றத்தைச் சார்ந்தது.

அதேபோன்றுதான் தோழர்கள் க.சந்தானம், இரா.திருமலை, சி.மகேந்திரன் போன்ற தலைவர்கள் பயின்றது, கற்றது, அனைத்தும் அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தில்தான் என்பது நமது அமைப்பின் சிறப்பாகும்.

இன்றைக்கு சீ.தினேஷ், மௌ.குணசேகர் போன்ற பல தோழர்கள் படித்து பட்டம் பெற்று நமது அமைப்பில் சேர்ந்து பணியாற்றிக் கொண்டுள்ளனர். மாணவர் பெருமன்றத்தில் இணைந்து ஒருவர் பணியாற்றினால் யாருக்கோ கட் அவுட் வைக்க ஏறி விழுந்து சாக மாட்டான்.

வடசென்னை பகுதியே உழைக்கும் மக்கள் நிரம்பிய பகுதி. அவர்களது வாழ்நிலை நமக்கு கவலை அளிக்கிறது. அதை நாம் மாற்றி அமைக்க வேண்டும்.

மாணவர்கள் அரசியலில் பங்கேற்கக் கூடாது; பங்கெடுத்தால் கல்வி பாதிக்கப்படும் என்று கூறுகிறார்கள். நல்ல மாணவனாக வர முடியாது என உபதேசம் செய்கிறார்கள். அந்த உபதேசத்தின் நோக்கம் என்ன? நல்ல நோக்கத்தில் சொல்லப்படுகின்ற உபதேசம் அல்ல; மாறாக இவர்கள் அரசியலில் ஈடுபட்டால் தங்களுக்கு ஆபத்து ஏற்படும் என்று எண்ணுகிறவர்கள் செய்யும் உபதேசம் இது.

காந்தியின் பாடத்தை எடுத்து விட்டு பள்ளிகளில் கோட்சேவை பற்றி பாடம் வைத்தால் அரசியல் இல்லையா? யாரிடம் சரடு விடுகிறார்கள்?

இந்த மேடையில் இருந்து மாணவர்களிடத்தில் சொல்கிறேன்; மாணவர்களே பகிரங்கமாக அரசியலில் ஈடுபடுங்கள். அதுதான் நாட்டை மாற்றும். திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூத்த தலைவர்களில் ஒருவரான முரசொலி மாறன் சொல்கிறார் “நான் ஜெர்மனிக்கு சென்றிருந்தேன். அங்கே மாணவர்களுக்கு அரசியலை வகுப்பில் பாடமாக நடத்துகிறார்கள். ஆளும் கட்சி, அதன் கொள்கை என்ன? எதிர் கட்சி, அதன் கொள்கை என்ன? என பாடம் நடத்திக் கொண்டு இருந்தார்கள். எனக்கு ஆச்சரியமாக இருந்தது. எனது அருகில் இருந்த உதவியாளர் இடத்தில் கேட்டேன். அதற்கு அவர் சொன்னார், நாங்கள் மாணவர்களுக்கு அரசியல் சொல்லித் தருகிறோம். அப்பொழுதுதான் எதிர்காலத்தில் மாணவர்கள் நல்ல அரசியல் முடிவை எடுப்பதற்கு பயன்படும். எனவே நாங்கள் மாணவர்களுக்கு அரசியல் சொல்லித் தருகிறோம் என்று சொன்னார்” என முரசொலியில் எழுதியுள்ளார்.

**நமது நாட்டில் மாணவர்களுக்கு அரசியல் கூடாது எனப் பேசுகிறார்கள். தேசியக் கல்விக் கொள்கை 2020 என்பது என்ன? அது அரசியல் இல்லாமல் வேறு என்ன? ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக கல்வி மறுக்கப்பட்டு இப்போதுதான் நாம் கல்வி பெறுகிறோம். நான்கு வர்ணங்கள் பேசப்பட்டதே அது என்ன? அந்த நான்கு வர்ணங்களில் கடைக்கோடியில் சொல்லப்பட்ட வர்ணத்தை சேர்ந்தவர்களும், வர்ணத்திற்குள் சேர்க்கப்படாத பஞ் சமர்களும்தான் இங்கு அணிவகுத்து வந்தார்கள்.**

நாம் என்ன கேட்கிறோம்? கல்வி எங்கள் அடிப்படை உரிமை, தொடக்க கல்வி முதல் ஆராய்ச்சி கல்வி வரை இலவசமாக வழங்க வேண்டும் என கேட்கிறோம்.

ஆனால் நீங்கள் படிக்கக்கூடாது, கேட்கக்கூடாது, படித்தால் பாவம் என சொல்கிறீர்கள். கேட்டால் காதில் ஈயம் காய்ச்சி ஊத்துவோம் என்கிறார்கள். நாட்டு மக்களை எத்தனை ஆண்டு காலம் ஏமாற்றுவீர்கள். அதை எதிர்த்துப் போராடி முறியடிக்க இப்பொழுது நாம் படிக்கத் தொடங்கி இருக்கிறோம். பல பொறுப்புகளைப் பெறவும் தொடங்கி இருக்கின்றோம்.

ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., மருத்துவர்களாக, பொறியாளர்களாக, நீதிபதிகளாக, விஞ்ஞானிகளாக இருந்து கொண்டு வருகிறோம். அதை தாங்கிக் கொள்ள முடியாத சனாதனிகள் மீண்டும் புதிய கல்விக் கொள்கை என்ற பெயராலே மீண்டும் நம்மை நான்கு வர்ணத்தில் கடைக் கோடிக்கும், அதற்கு வெளியிலும் இழுத்துச் செல்ல முயற்சிக்கிறார்கள்.

அந்த ரகசியத்தை உணர்ந்த காரணத்தினால் தான், அனைத்திந்திய மாணவர் பெருமன்றம் சொல்கிறது உனது தேசிய கல்விக் கொள்கையை தூக்கி எறிவோம்! என்று. நாங்கள் அதை ஏற்க முடியாது, ஏற்கவும் மாட்டோம் என்று சொல்கிறது.

மறுக்கப்பட்ட கல்வியை நாங்கள் போராடி மீட்டுக் கொண்டு வந்துள்ளோம். நாங்கள் மீட்டு வந்த கல்வியை நீங்கள் மீண்டும் மறுக்கிறீர்கள். ஆகவே தான் நாங்கள் போராடுகிறோம். கல்வி வியாபாரமாகி இருக்கிறது. லட்சம் லட்சமாக விலை வைத்து விற்கப்படுகிறது. அதை மாற்றத்தான் நாம் போராடுகிறோம்.

“ஒரே நாடு, ஒரே தேர்தல்” எல்லாம் ஒரே என்று சொல்பவர்களைப் பார்த்து நாம் கேட்கிறோம், ஒரே நாடு ஒரே ஜாதி என்பதை ஏற்றுக்கொள்வார்களா? ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். ஒரே மதம் என்று சொல்பவர், ஒரே மதத்தில் அனைவரும் சரிசமமாக நடத்தப்படுவார்களா? நாம சங்கராச்சாரியாராக முடியுமா? முடியாது என்றால் மதத்தின் சூழ்ச்சி அல்லவா? அவர்கள் நம்மை பிளவுபடுத்தத் தான் மதத்தை பயன்படுத்துகிறார்கள். இவற்றை நிராகரிப்பது தான் அனைத்திந்திய மாணவர் பெருமன்றம்.

அனைவருக்கும் கல்வி, வேலை, நாட்டின் நல்வாழ்விற்காக என்ற நோக்கத்தோடு அன்று முதல் இன்று வரை போராடிக் கொண்டிருக்கும் அமைப்புதான் அனைத்திந்திய மாணவர் பெருமன்றம். சேகுவேரா, பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் ஆகியோரின் லட்சிய உணர்வு வெற்றி வெற்றி பெறும்வரை போராடுவோம். நீங்கள் நாட்டையும், சமூகத்தையும் மாற்றி அமைப்பீர்கள். இவ்வாறு இரா.முத்தரசன் பேசினார்.

## மத்திய பட்ஜெட்டில் நிதி ஒதுக்கீடு குறைப்பு:

# 100 நாள் வேலைத்திட்ட தொழிலாளர்கள் 2000 பேர் ஆர்ப்பாட்டம்




மகாத்மா காந்தி தேசிய கிராமப்புற வேலை உறுதித் திட்டம் ஆண்டுக்கு 100 நாட்களுக்கு வேலை வழங்குவதற்கு வழி செய்தது. ஆனால், மத்தியில் பாஜக ஆட்சி அமைந்த பிறகு சராசரியாக 40 நாள் கூட வேலை வழங்குவதில்லை. இந்த நிலையில், அண்மையில் சமர்ப்பிக்கப்பட்ட மத்திய நிதிநிலை அறிக்கையில் ஏற்கெனவே ஒதுக்கப்பட்ட தொகையையும் குறைத்து ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். இது மேலும் இத்திட்டத்தை சீர்குலைக்கவே வழி செய்யும்.

ஆகவே இதனை கண்டித்து தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கத்தின் சார்பில் சத்தியமங்கலம், பவானிசாகர், தாளவாடி ஆகிய வட்டாரங்களில் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

இந்த ஆர்ப்பாட்டத்தின் வாயிலாக இரண்டு மாத காலமாக வரவேண்டிய கூலி பாக்கியை உடனடியாக வழங்க வேண்டும். தொடர்ச்சியாக வேலை வழங்க வேண்டும் போன்ற கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

சத்தியமங்கலத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட குழு உறுப்பினர் ஸ்டாலின் சிவகுமார் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் சத்தியமங்கலம் வடக்கு ஒன்றிய செயலாளர் எம் சுரேந்தர், தெற்கு ஒன்றிய செயலாளர் எஸ்.சி.நடராஜ், ஏஐடியூசி தொழிற்சங்க தலைவர் தா.சந்திரன், பவானிசாகரில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பவானிசாகர் வடக்கு ஒன்றிய செயலாளர் பி.ஏ.வேலுமணி தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஈரோடு வடக்கு மாவட்ட துணை செயலாளர் சக்திவேல், விவசாய தொழிலாளர் சங்கத்தின் மாநில குழு உறுப்பினர் மகேந்திரன், ஜேசுராஜ், உத்தண்டியூர் ஊராட்சி மன்ற தலைவர் பூங்கொடி

தாளவாடியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட குழு உறுப்பினர் எம்.மோகன் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் விவசாய தொழிலாளர் சங்கத்தின் தாளவாடி ஒன்றிய பொறுப்பாளர் காளசாமி, ஒன்றிய குழு உறுப்பினர் அருள்சாமி, விவசாய தொழிலாளர் சங்கத்தின் மாவட்ட செயலாளர் சி.கே. முருகன் உள்ளிட்ட சுமார் 2000 தொழிலாளர்கள் பங்கேற்றனர்.

# ஒன்றிய அரசின் மக்கள் விரோத நிதிநிலை அறிக்கை

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

ஒன்றிய அரசாங்கத்தின் நிதிநிலை அறிக்கை 2023 – 2024ஐ மக்கள் விரோத நிதி நிலை அறிக்கை என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கடுமையாக விமர்சித்துள்ளது. இது குறித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயற்குழு வெளியிட்டுள்ள செய்தி அறிக்கை பின்வருமாறு:

அதிகரித்து வரும் வேலையில்லா திண்டாட்டம், பணவீக்கம், ஏற்றத்தாழ்வு மற்றும் ஊரகப் பகுதிகளில் உருவாகி வரும் நெருக்கடிகள் ஆகியவற்றை ஒன்றிய அரசாங்கத்தின் நிதிநிலை அறிக்கை 2023 ஞ் 2024 கவனத்தில் எடுத்துக்கொள்ளத் தவறிவிட்டதாக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயற்குழு மிக வன்மையாகக் கண்டிக்கிறது.

பொருளாதாரத்தின் எதார்த்த நிலையை முற்றாகப் புறக்கணித்திருப்பதுடன் பொருளாதார நிலை சீராக இருப்பது போன்ற ஒரு பிம்பத்தை வலுப்படுத்திட நிதிநிலை அறிக்கை முயலுகிறது.

கல்வி, சுகாதாரம், உணவு பாதுகாப்பு, மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு திட்டம் மற்றும் இதர சமூகநலத் திட்டங்கள்/துறைகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் போதுமானவை அல்ல; இந்த நடவடிக்கை, உழைக்கும் மக்களை விளிம்புநிலையின் உச்சத்திற்குத் தள்ளுவதுடன், அவர்களைப் பட்டினிக் கொடுமைக்கும் உள்ளாக்கும்.

விவசாய உள்ளீட்டுப் பொருட்களின் விலை உயர்வு காரணமாக விவசாயிகள் அவதிக்குள்ளாகி இருக்கும் இந்தச் சூழலில், விவசாயத்திற்கான நிதி ஒதுக்கீடு 8,500 கோடி ரூபாய் குறைக்கப்பட்டுள்ளது. அவர்களின் துயர் துடைக்க இந்த நிதி நிலை அறிக்கையில் எந்த முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை. சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில்களுக்கான மானியம் குறித்து தெளிவான கருத்து இடம்பெறவில்லை.

உணவு மானியம் 2.8 இலட்சம் கோடி ரூபாயில் இருந்து 1.97 இலட்சம் கோடி ரூபாயாகக் குறைக்கப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு இந்த ஆண்டு உயர்த்தப்படவில்லை; பணவீக்கத்தைக் கருத்தில் கொண்டு கணக்கிட்டால், இந்த ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு கடந்த ஆண்டைக் காட்டிலும் குறைவாகவே இருக்கிறது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு கடந்த 2022 – 2023 ஆண்டில் 85,000 கோடி ரூபாயாக இருந்தது. ஆனால், இந்த நிதிநிலை அறிக்கையில் அந்தத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு 60,000 கோடி ரூபாயாகக் குறைக்கப்பட்டுள்ளது. அனைத்து சமூகநல திட்டங்கள்/துறைகளுக்கான நிதி ஒதுக்கீடு குறைக்கப்பட்டுள்ளது.

இன்றைய தேவைகளை நிறைவு செய்திட இயலாத, எதார்த்த நிலைக்கு எதிரான, வளர்ச்சிக்கு எதிரான, இது மக்கள் விரோத நிதிநிலை அறிக்கை ஆகும்.

இவ்வாறு கட்சியின் தேசிய செயற்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# கோட்டூர் வட்டாரத்தில் பருவம் தவறிய கனமழையில் நெற்கதிர்கள் பாதிப்பு



## ஏக்கருக்கு ரூ.35 ஆயிரம் வழங்கிட கோட்டூர் ஒன்றிய தலைவர் கோரிக்கை

கோட்டூர் ஊராட்சி ஒன்றிய அலுவலக கூட்ட அரங்கில் ஒன்றியக் குழுவின் சாதாரண கூட்டம் ஒன்றிய குழு தலைவர் என்.மணிமேகலை முருகேசன் தலைமையில், ஆணையர் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் பா. வெற்றியழகன் (வ.ஊ), வட்டார வளர்ச்சி அலுவலர் ஆர்.மாலதி(கி.ஊ) முன்னிலையில் பிப். 2 அன்று நடைபெற்றது. நிகழ்வில் ஒன்றிய குழு துணை தலைவர் ஆர்.விமலா ரவிச்சந்திரன் மற்றும் அனைத்து ஒன்றிய குழு உறுப்பினர்கள் பிற துறை சார்ந்த அலுவலர்கள் பங்கேற்றனர்.

வார்டு–1 ஒன்றிய குழு உறுப்பினர் ஜெ. சுசீலா, வார்டு–4 ஒன்றிய குழு துணைத் தலைவர் ஆர்.விமலா, வார்டு –6 ஒன்றிய குழு உறுப்பினர் பா.ஆனந்தராஜ், வார்டு–9 ஒன்றிய குழு உறுப்பினர் சே.பூங்கோதை, வார்டு–12 ஒன்றிய குழு உறுப்பினர் ர.ரேகா, வார்டு – 16 ஒன்றிய குழு உறுப்பினர் வீ. மாரியப்பன், வார்டு – 18 ஒன்றிய குழு உறுப்பினர் பா. செங்குட்டுவன், வார்டு–5 ஒன்றிய குழு உறுப்பினர் பா.அரவிந்த், வார்டு – 19 ஒன்றிய குழு உறுப்பினர் ஜி.மல்லிகா ஆகியோர் வார்டு பிரச்சினைகள் குறித்துப் பேசினர்.

கோட்டூர் ஒன்றிய பெருந்தலைவர் என்.மணிமேகலை முருகேசன் பேசுகையில், கனமழையால் பாதிப்படைந்த அனைத்து விவசாயிகளுக்கும் ஏக்கருக்கு ரூ.35 ஆயிரம் நிவாரணம் உடனடியாக விடுதலின்றி அனைவருக்கும் வழங்க வேண்டும். 15 வது நிதி மானியத்தில் நிர்வாக அனுமதி பெறப்பட்டு பணிகள் நடைபெறுவதாகவும் கோட்டூர் ஒன்றியத்தில் எங்களது கோரிக்கையை ஏற்று ஐந்து ஊராட்சிகளில் புதிய வகுப்பறை கட்டிடங்கள் அனுமதி அளித்த மாவட்ட நிர்வாகத்திற்கு நன்றி தெரிவித்தார்.

### விருதுநகரில்

# தையல் தொழிலாளர்கள் அமைப்பு கூட்டம்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் விருதுநகர் மாவட்ட அலுவலகத்தில், விருதுநகர் ஏஐடியுசி தையல் முறைசாரா தொழிலாளர்கள் நல அமைப்புக் கூட்டம் நடைபெற்றது. விஜயலட்சுமி தலைமை வகித்தார். சிபிஐ தேசிய குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, ஒன்றிய செயலாளர் சக்கணன், நகர செயலாளர் முத்துக்குமார், மாதர் சங்க மாவட்ட தலைவி மாரீஸ்வரி, காதர்முகையதின் ஆகியோர் பேசினார்கள்.

வீடில்லாதவர்களுக்கு வீட்டுமனை பட்டா, அனைவருக்கும் விலையில்லா தையல்இயந்திரம் வழங்க வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

நன்றி ! நன்றி !

தியாகி. S.G.முருகையன் Ex.MP.,
நல்லாசியுடன்

மணமக்கள்
Er. K.முகேஷ் B.Tech., MBA.,
Dr. S.நந்திடா MBBS.,
நாள் : 05.02.2023 ஞாயிறு
இடம் : T.S. வசந்தம் மஹால் A/c
பட்டுக்கோட்டை
தஞ்சாவூர் மாவட்ட அரசு பணியாளர் சங்கத்தின்
முன்னாள் மாவட்ட தலைவர் தலைமையாசிரியர்
இள. குமணன் M.A., M.Ed., ஆசிரியை S.G.M. சாந்தி M.A., B.Sc., B.Ed.,
இவர்களது இல்லத்திருமண விழாவிற்கு வருகை தந்து
மணமக்களை வாழ்த்திய அனைத்து நல் உள்ளங்களுக்கும்
நெஞ்சம் நிறைந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

வணக்கங்கள்
எங்களது நிர்வாக இல்ல திருமண விழாவிற்கு
வருகை புரிந்து சிறப்பித்த அன்பு உள்ளம் கொண்ட
சான்றோர் பெருமக்களுக்கும் அரசியல் பிரமுகர்களுக்கும்
எங்களது இருகரம் கலந்த வணக்கங்கள் !

இவண்
முருகையா ஏஜென்சி
இந்தியன் ஆயில்
பெட்ரோல் பங்க் பணியாளர்கள்,
ஊழியர்கள், மதுக்கூர் ரோடு,
வளவன்புரம் பட்டுக்கோட்டை
தஞ்சாவூர் மாவட்டம்
ஜனசக்தி என் . ஜீவா 98940 66944



# சங்கே முழங்கு!

## அறிவியலின் உச்சமும் சங்கியின் உளறலும்

புரட்சியாளர் சே குவேராவின் மகள் அலெய்டா, அவரின் மகள் எஸ்டெஎனி ஆகியோர் தமிழ்நாட்டிற்கு வந்ததும், மக்கள், அரசியல் தலைவர்கள் சிறப்பான வரவேற்பை அளித்ததும், நெகிழ்வான நிகழ்வுகளாக அமைந்தன.

1.2.23 ஆனந்த விகடன் இதழுக்கு அளித்த பேட்டியில் மருத்துவர் அலெய்டா குறிப்பிட்ட கருத்துக்கள் இளையத்தலைமுறைக்கு வழிகாட்டும் நெறிகளாக அமைந்தன. குறிஞ்சி மலர் பல ஆண்டுகளுக்கு ஒரு முறை பூப்பது போலப் புரட்சி பூவையரின் கருத்து ஊடகங்களில் அறிவு மணமாக வீசியது.

“நான் ஒரு சாதாரண நபராக என்னை உணர்கிறேன். ஒரு புரட்சியாளரின் மகளாக இருப்பதால் மட்டுமே எனக்குப் பெருமை இருக்கிறது என எண்ணவில்லை.

சொல்லப்போனால் பிறப்பு என்பது ஒரு மரபணு விபத்துதான்(Genetic accident). அதற்காக நான் எப்படிப் பெருமை கொள்ள முடியும்? நான் எனது வாழ்நாளில் எப்படி வாழ்கிறேன், நல்ல மனிதராக இருக்கின்றேனா என்பதில்தான் எனது பெருமை உள்ளது.”

மருத்துவப் படிப்பு முடிந்தவுடன் யாரும் எளிதில் அணுக முடியாத குக்கிராமங்களுக்குச் சென்று பணி செய்தேன்” எனவும் குறிப்பிட்டுள்ளார். கியூபா நாட்டின் பொதுவுடைமை உணர்வு, அறிவியல் மறுமலர்ச்சியோடு கைகோர்த்து மக்களின் வாழ்வியலை உயர்த்தும் பணியில், மாண்பில் உயர்வு பெறுகிறது.

“பிறப்பே மரபணு விபத்து” எனும் சொல்லாடல் அம்மையாரின் தன்னடக்கத்தை மட்டும் பறைசாற்றவில்லை. அறிவியல் பகுத்தறிவு கண்ணோட்டத்தோடு மானுடம் நடைபோட வேண்டும் என்ற கருத்தியலையும் முன்னிலைப்படுத்துகிறது.

மருத்துவர் பெண் பேராளியின் உயர்ந்த சிந்தனையைத் தூண்டும் கருத்துக்கள் ஊடகங்களில் வலம் வரும் போது, இந்திய நாட்டின் வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய் சங்கர் மராட்டிய மாநிலத்தில் ஒரு புத்தக வெளியீட்டு விழாவில் உரை நிகழ்த்தியுள்ளார்.

### உரையா அல்லது உளறலா?

உலகின் மிகப்பெரிய இராஜதந்திரிகள் கிருஷ்ணனும், அனுமாரும் தான் எனக் குறிப்பிட்டுவிட்டு, அனுமாரின் செயலை நோக்கினால் அவரின் உயர்ந்த இராஜ தந்திரம் தெரிய வரும். இலங்கைக்குத் தூது சென்று சீதையைத் தொடர்பு கொண்டு, இலங்கையைத் தீயிட்டுக் கொளுத்திவிட்டார். ஏன் பாகிஸ்தானில் உள்ள இந்தியாவிற்கு எதிராகச் செயல்படும் தீவிரவாதிகளை ஒரு அனுமான் படையை அனுப்பி அவர்களைக் கைது செய்து இந்தியாவிற்குக் கொண்டு வரலாமே?

அனுமார்கள் காட்டிலும், ஏன் புதுதில்லியிலும் நீக்கமற சுற்றிச் சுற்றி வருகிறார்களே? அவர்களை அனுப்பி இந்தியாவின் சிக்கலான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணலாமே?

ஒன்றிய அரசின் சட்ட அமைச்சராக அண்ணல் அம்பேத்கர் சென்னை வந்தபோது பகவத் கீதையைப் பற்றி ஒரு நிருபர் வினா எழுப்பியபோது என்ன சொன்னார் தெரியுமா? “முட்டாள்களின் உளறல்கள் தான் கீதை” எனச் சொன்னார்.

அண்ணல் அம்பேத்கர் அறிவின் உச்சம்!

ஜெய்சங்கர் சங்கிகளின் உளறல்களின் எச்சம்!

இந்திய அரசமைப்புச் சட்டத்தில் அடிப்படை கடமைகளில் அறிவியல் உணர்வு, ஆய்வு மனப்பான்மை போற்ற வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளதே?

ஒன்றிய அரசின் மிகப்பொறுப்புள்ள பதவியிலிருந்து கொண்டு இது போன்று அறிவியலுக்குப் புறம்பாகப் பேசலாமா? அறிவியல் இன்று பரந்து விரிந்து தகவல் தொழில்நுட்பத் துறை வழியாகப் பல சாதனைகளைப் படைத்து வரும் காலத்தில், ஒவ்வொரு மனிதரும் கைப்பேசி வழியாக உலகின் அன்றாட நிகழ்வுகளைப் பார்க்கும் காலத்தில் இது போன்று நீங்கள் பேசுவது கண்டு சங்கிகள் ஆடலாம்! பாடலாம்!

குரங்கை இராஜ தந்திரி எனக் குறிப்பிட்டு அறிவியலை அவமதிக்கலாமா!

ஜெய் சங்கர் சங்கிகளின் ஜெய் அனுமானாக மாறலாமா?

**பேராசிரியர்.மு.நாகநாதன்**

விருதுநகர் புதிய பேருந்து நிலையத்தை செயல்படுத்த கோரி

## சர்வ கட்சியினர் ஆர்ப்பாட்டம்




விருதுநகரில் புதிய பேருந்து நிலையத்தை செயல்படுத்த கோரி பல்வேறு இயக்கங்கள் நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் சர்வ கட்சியை அழைத்து 26குடியரசு தினத்திலிருந்து செயல்படும் என உறுதி அளித்தார். ஆனால் வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை . எனவே இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில குழு உறுப்பினர் பாலமுருகன் தலைமையில் ஆட்சியர் அலுவலகம் முன்பு சரவகட்சி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. காங்கிரஸ்,விசிக,திக, மநீம, தமிழ் புலிகள், ஆதித் தமிழர் உள்ளிட்ட கட்சிகளின் சார்பில் ஏராளமானோர் கலந்து கொண்டார்கள். சிபிஐ சார்பில் ஒன்றிய செயலாளர் சக்கணன், நகர செயலாளர் முத்துக்குமார், மீனவர் சங்க மாவட்ட செயலாளர் செல்வம், மாதர் சங்க தலைவர் மாரீஸ்வரி உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டார்கள்

தேசிய கல்விக் கொள்கையை

## ஒன்றிய அரசு திரும்ப பெற வேண்டும்!

**தமிழ்நாடு முற்போக்கு பேரவை கருத்தரங்கில் வலியுறுத்தல் !**

தஞ்சை மாவட்ட தமிழ்நாடு முற்போக்கு பேரவை சார்பில் ஒன்றிய , மாநில உறவுகள் குறித்து கருத்தரங்கம் தஞ்சாவூர் பெசன்ட் அரங்கத்தில் நடைபெற்றது. தஞ்சை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் கோ. பாஸ்கர் கருத்தரங்கிற்கு தலைமை வகித்தார். தஞ்சை கல்வி இயக்கத்தின் நிர்வாகி முனைவர் மா. சுந்தரமூர்த்தி வரவேற்புரை நிகழ்த்தினார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் முத்து உத்திராபதி, தமிழ்நாடு முற்போக்கு பேரவை நிர்வாகிகள் சி.பாஸ்கரன், ஏ. பன்னீர்செல்வம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சென்னை பல்கலைக்கழகம் வேளாண் பொருளாதார ஆய்வு மைய பேராசிரியர் க.ஜோதிசிவஞானம் கருத்தரங்கின் நோக்கம் குறித்து கருத்துரை வழங்கினார். அனைத்திந்திய முற்போக்கு பேரவையின் மாநில பொதுச் செயலாளர் மருத்துவர் ஜி.ஆர். இரவீந்திரநாத் மத்திய, மாநில உறவுகள் குறித்து பேசினார். முடிவில் தமிழ்நாடு கல்வி இயக்கத்தின் தஞ்சை மாநகரக் கிளை செயலாளர் மா.சுந்தரமூர்த்தி நன்றி கூறினார்.

கருத்தரங்கில் மாநில உரிமைகளுக்கும், கூட்டாட்சி கோட்பாட்டிற்கும் எதிராக உள்ள, இந்தியாவின் பன்முகத்தன்மைக்கு எதிரான, கல்வியை கார்ப்பரேட் காவிமயமாக்கும், குலக்கல்வி முறையை, சாதி அடிப்படையிலான குலத்தொழிலை மறைமுகமாக திணிக்கும் தேசியக் கல்விக் கொள்கை 2020ஐ ஒன்றிய அரசு திரும்பப் பெற வேண்டும்,

பட்டியல் சாதியினர், பட்டியல் பழங் குடியினர் பிரிவு மாணவர்களுக்கான போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகையை ஒன்றிய அரசு அதிகப்படுத்துவதோடு, அதை முறையாக, உரிய நேரத்தில் மாநில அரசுகள் மூலம் வழங்கிட வேண்டும் என ஒன்றிய அரசை வலியுறுத்தி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## பெருமழையால் கடுமையாக சேதமடைந்த சம்பா பயிர்கள்

**இழப்பீடு வழங்க இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கோரிக்கை**

நடப்பு வேளாண் பருவத்தில் மேட்டூர் அணை முன் கூட்டியே பாசனத்திற்கு திறக்கப்பட்டதாலும், இயற்கை ஒத்துழைத்ததாலும் சம்பா பருவ சாகுபடி நல்ல விளைச்சல் தந்தது. இதில் கதிர்கள் முற்றி அறுவடை தொடங்கியுள்ள நேரத்தில், பிப்.01 அன்று இரவு பெய்த பெருமழையால் விளைந்து நின்ற சம்பா பயிர்கள் கடுமையாக சேதமாகியுள்ளன. அறுவடைக்கு தயாராக இருந்த 50 ஆயித்துக்கும் அதிகமான பரப்பளவு சாகுபடி பயிர்கள் சேதமடைந்துள்ளன.

கடந்த ஒரு மாதமாக இருந்த கடுமையான பனிப் பொழிவில் நெல்லின் ஈரப்பதம் அதிகரித்துள்ளது. அத்துடன் தற்போது மழையும் சேர்ந்து கொண்டது பெரும் சேதத்துக்கு காரணமாகிவிட்டது.

நெல் வயல்களில் மழைநீர் தேங்கி நிற்பதால் இன்னும் சில நாட்களுக்கு அறுவடைக்கு தொழிலாளர்கள் இறங்குவதோ, இயந்திரங்கள் இறக்கப்படுவதோ இயலாது.

சம்பா அறுவடை முடிந்ததும் ஊடுபயிராக உளுந்து சாகுபடி செய்வது வழக்கமாகும். அதற்கும் தற்போதும் வாய்ப்பில்லை என்பதால் நடப்பாண்டில் நன்கு விளைச்சல் இருந்தும் அதன் பயனை பெற முடியாமல், பருவம் தவறிய மழையால் “கைக்கு எட்டியது, வாய்க்கு எட்டவில்லை” என்ற துயர நிலை ஏற்பட்டுள்ளது.

காவிரிப் பாசன விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கும் சேதாரத்தை தமிழ்நாடு அரசு உடனடியாக மதிப்பீடு செய்து, விவசாயிகளுக்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டும். பயிர் காப்பீடு செய்துள்ள விவசாயிகள் அனைவருக்கும் முழுமையான அளவில் இழப்பீடு கிடைப்பதையும் அரசு உறுதி செய்ய வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு தமிழ்நாடு அரசைக் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மாநிலக்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறக்கையில் கூறியுள்ளார்.

## ஆட்டோ ஓட்டுனர் சங்க நிர்வாகிகள் தேர்வு

ஏ.ஐ.டி.யூ.சி. ஆட்டோ ஓட்டுனர் சங்கத்தின் செங்கல்பட்டு மாவட்டம் கூடுவாஞ்சேரி கிளை பேரவை கூட்டம் கே.ஏ.காளீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. இதில் சங்கத்தின் மாநில செயலாளர் பி.மாரியப்பன், ஏஐடியூசி மாநில துணைத்தலைவர் எம்.ஜஹாங்கீர், மாவட்ட செயலாளர் க.ஜெகதீசன், ஏஐடியூசி மாவட்டத் துணைத் தலைவர் ஆர்.தேவராஜ், ஊரக உள்ளாட்சி மாவட்ட செயலாளர் கே.வரதன் பி.எஸ்.என்.எல். ஹாருன் பாஷா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தலைவராக இ.அன்பரசு, செயலாளராக இரா.சுப்பிரமணியன், பொருளாளராக இ.ராஜரத்தினம், துணைத் தலைவராக கே.அப்துல் ரஷீத், துணை செயலாளராக டி.யுவராஜ் உள்ளிட்ட நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர்.

## கலை பண்பாட்டுத்துறை சார்பாக வழங்கப்படும் விருதுகளுக்கு கையூட்டு

**தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றம் ஆர்ப்பாட்டம்**

மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் உள்ள திருவள்ளுவர் சிலை முன்பு, தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றம் புறநகர் மாவட்டக் குழு சார்பில், கலை பண்பாட்டுத்துறை சார்பாக வழங்கப்படும் விருதுகளுக்கு கையூட்டு பெறாமல் நியாயமான கலைஞர்களுக்கு வழங்கிட வேண்டும் என்று மாவட்ட கலை பண்பாட்டுத்துறையை கண்டித்து “கவன ஈர்ப்பு இசை முழக்க ஆர்ப்பாட்டம்” மாவட்ட பொறுப்பாளர் ஜெயக்குமார் தலைமையில், வாடிப்பட்டி கலைஞர் சேகர் முன்னிலையில் நடைபெற்றது. இதில் கலை இலக்கிய பெருமன்ற மாவட்ட பொறுப்பாளர் நாகஜோதி, மாவட்ட குழு உறுப்பினர் பூமிநாதன், ஏ.ஐ.டி.யு.சி மாவட்ட பொதுச் செயலாளர் சேது, சி.பி.ஐ புறநகர் மாவட்ட செயலாளர் முத்துவேல் ஆகியோர் பேசினர். சிபிஐ மாநில கட்டுப்பாட்டுக் குழு உறுப்பினர் பி.காளிதாஸ் உள்ளிட்டோர் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

## முக்கிய அறிவிப்பு

ஜனசக்திக்கு கட்டுரை எழுதுவோர் படம் உள்ளிட்டு முக்கால் பக்கத்திற்குள் எழுத வேண்டுகிறோம், டைப்பிங் செய்து word fileலில் unicode fontல் அனுப்பவும்.

வாட்ஸ் அப்பில் செய்திகள், படங்கள் அனுப்பக் கூடாது. புகைப்படங்கள் தெளிவாக இருக்க வேண்டும். ஜனசக்தி இ.மெயிலில் மட்டும் அனுப்ப வேண்டும். நோட்டீஸ், மனுக்களை அப்படியே அனுப்பக் கூடாது. சுருக்கி செய்தியாக்கி அனுப்ப வேண்டும்.

ஜனசக்தி உள்ளடக்கம் சம்பந்தமாகத் தொடர்பு கொள்ள வேண்டிய கைபேசி:

**டி.எம்.மூர்த்தி - 9444360869,**
**த.லெனின் - 94444 81703**

இயக்கச் செய்திகள் சம்பந்தமாகத் தொடர்பு கொள்ள வேண்டிய கைபேசி:

**ஜெ.முருகேசன் - 78456 93142**

ஜனசக்தி விநியோகம் சம்பந்தமாக தொடர்பு கொள்ள வேண்டிய கைபேசி:

**கே.கணேசன் - 9444331138**

ஜனசக்தி வரவு கணக்குச் சம்பந்தமாகத் தொடர்பு கொள்ள வேண்டிய கைபேசி:

**இளசை கணேசன்**
**8220468816**

ஆசிரியர் குழு,
ஜனசக்தி

# கூலி உயர்வு கேட்டு விசைத்தறி தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்



விருதுநகர் மாவட்டம் இராஜபாளையம் பகுதியில் ஏராளமான விசைத்தறி கூடங்கள் உள்ளன. இதில் பணிபுரியும் தொழிலாளர்கள் கூலி உயர்வு கேட்டு வேலைநிறுத்தம் செய்து வருகிறார்கள் . முத்துசாமிபுரத்திலிருந்து 300க்கும் மேற்பட்ட ஆண், பெண் தொழிலாளர்கள் ஊர்வலமாக சென்று விசைத்தறி உரிமையாளர்கள் சங்க அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஏஐடியுசி அய்யனார், சிஐடியு ராசு ஆகியோர் தலைமை வகித்தார்கள் . சிபிஐ ஒன்றிய செயலாளர்கள் கணேசமூர்த்தி, இராமச்சந்திரன் துணை செயலாளர் வழக்கறிஞர் பகத்சிங், விதொச வரதராஜ் , கூட்டுறவு சங்க ராஜகுரு ஆகியோர் பேசினார்கள்.

# பாலன் வாழ்க்கை வரலாறு நூல் அறிமுகம்

சாத்தூர் தனுஷ்கோடி அரங்கில், தகஇபெ சார்பில் "தோழர் கே.பாலதண்டாயுதம் வாழ்க்கை வரலாறு" நூல் அறிமுக கூட்டம் நடைபெற்றது. ஆர்.பாலசந்திரன் தலைமை வகித்தார். க.நித்யா முன்னிலை வகித்தார். நவநீதகிருஷ்ணன் வரவேற்றார். மார்க்சீய அறிஞர் கோவை எஸ்.பாலசந்திரன், ஈரோடு ஓடை.துரையரசன், தகஇபெ மாநில பொதுச்செயலாளர் மருத்துவர் த.அறம், இளையபாரதி, பயணம் சுந்தர்ராஜ், ஜெயா ஜனார்த்தனன் ஆகியோர் அறிமுக உரை நிகழ்த்தினார்கள். நூலாசிரியர்கள் பொன்னீலன், வழக்கறிஞர் கணபதிசுப்பிரமணியன் ஆகியோர் ஏற்புரை நிகழ்த்தினர். முன்னதாக அறந்தை பாவா, கவிஞர்கள் சுவாமிநாதன், கு.கணேசன் ஆகியோர் பாடல்கள் பாடினார்கள்.

# கட்டிடத் தொழிலாளர் சங்க கோவை மாவட்ட நிர்வாகிகள் தேர்வு

தமிழ்நாடு ஏஐடியூசி கட்டிட தொழிலாளர் சங்கத்தின் கோவை மாவட்ட பொதுச் செயலாளராக எல்.செல்வம் தேர்வு செய்யப்பட்டார்.

தமிழ்நாடு ஏஐடியுசி கட்டடத் தொழிலாளர் சங்கத்தின் மாவட்ட நிர்வாக குழு கூட்டம் கோவை பாப்பநாயக்கன்பாளையத்தில் உள்ள சங்க அலுவலகத்தில் தலைவர் எஸ்.பி. தியாகராஜன் தலைமையில் நடைபெற்றது. மாநிலத் தலைவர் கே. ரவி கலந்து கொண்டு சங்க நடவடிக்கைகள் குறித்து விளக்கி பேசினார்.

கௌரவ தலைவராக காளப்பட்டி கே. செல்வராஜ், மாவட்டத் தலைவராக என். செல்வராஜ், துணைத் தலைவர்களாக ஆர் பாலகிருஷ்ணன், மணிஷ் பழனிசாமி, ஜெ.கலா. ஏ.ராமசுலோசனா, மேட்டுப்பாளையம் பி.மோகன் ஆகியோரும்,

மாவட்ட பொதுச்செயலாளராக மேட்டுப்பாளையம் எல்.செல்வம், துணைப் பொதுச்செயலாளராக கோட்டை நாராயணன், முதன்மை செயலாளராக எஸ்.பி.தியாகராஜன், செயலாளர்களாக சி. நந்தினி, ஏ.டி..கே.தனபாண்டியன், பணப்பட்டி மருதாசலம் ஆகியோரும், பொருளாளராக என்.சோமசுந்தரம் ஆகியோரும் தேர்வு செய்யப்பட்டனர்.

# தியாகி ஆர்.பச்சாகவுண்டர் நினைவு தின நிகழ்ச்சி

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நல்லம்பள்ளி வட்டாரக்குழு சார்பில் சுதந்திர போராட்ட தியாகியும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் தர்மபுரி மாவட்ட வளர்ச்சியில் பங்கு பெற்ற இலளிகம் ஆர்.பச்சாகவுண்டர் 29ம் ஆண்டு நினைவு தின நிகழ்ச்சி இலளிகம் பஸ் நிலையத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் பச்சாகவுண்டர் உருவ படத்திற்கு நல்லம்பள்ளி வட்டார துணை செயலாளர் எல்.வி.பொன்னியப்பன் மாலை அணிவித்து, மலர்தூவி மரியாதை செய்தார்.

மாவட்டக்குழு உறுப்பினர்கள் எல்.ஆர்.கிருஷ்ணராஜ், மாதம்மாள், வட்டாரக்குழு உறுப்பினர்கள் எல்.வி.சின்னசாமி, சிவன், நார்த்தம்பட்டி கிளை செயலாளர் ராஜி ஆகியோர் மலர்தூவி மரியாதை செய்தனர்.

### நினைவு படிப்பகம் திறப்பு

தியாகி ஆர்.பச்சாகவுண்டர் நினைவு படிப்பக திறப்பு நிகழ்ச்சி, படிப்பக நிர்வாகியும் இலளிகம் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவருமான ஜெ.பிரதாபன் தலைமையில் நடைபெற்றது.

தியாகி ஆர்.பச்சாகவுண்டர், எல். வி.நடராசன் ஆகிய தியாகிகளின் படத்திற்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. இலளிகம் கிராம தலைவர் இல.கி.இளங்கோவன் புதுப்பிக்கப்பட்ட தியாகி ஆர்.பச்சாகவுண்டர் நினைவு படிப்பகத்தை திறந்து வைத்தார். எல்.கே. அருள், எல்.எம்.தங்கவேல், எல்.கே. சின்னராஜ், எல்.எம்.சுந்தரம், எல்.எஸ்.ஜீவானந்தம், வி.தொ.ச. மாவட்ட துணைத்தலைவர் ஜி.ராஜகோபால், மாவட்ட துணைச் செயலாளர் ஜி.பச்சாகவுண்டர் ஆகியோர் மறைந்த தியாகிகளுக்கு புகழஞ்சலி செலுத்தினர்.

## கனமழையால் பயிர்கள் பாதிப்பு:

# நிவாரணம் கேட்டு விவசாயிகள் ஆர்ப்பாட்டம்



டெல்டா மாவட்டங்களில் பருவம் தவறி பெய்த கன மழையால் சம்பா, தாளடி, உளுந்து, பயர்களும் தொடர்மழையின் காரணமாக வயல்களில் தேங்கிய நீரினால் முற்றிலும் அழிந்துபோனது. அறுவடைக்கு தயாராக இருந்த நெற்கதிர்கள் நீரில் மூழ்கியது. இதனை பார்வையிட்ட அமைச்சர் உள்ளிட்ட அதிகாரிகள், இதனை பெரிய இழப்பாக கருதாமல் கண்துடைப்பாக 33 சதம் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு மட்டும் இழப்பீடு வழங்கப்படும் என்று அறிவித்தது. இதனை கண்டித்து தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் திருத்துறைப்பூண்டி ஒன்றிய, நகர குழுக்களின் சார்பில் பருவம் தவறி பெய்த மழையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு முழுபயிர்க்காப்பீட்டுடன் முதலமைச்சர் பேரிடர் நிவாரண நிதியும் சேர்த்து ஏக்கருக்கு ரூ.35 ஆயிரம் இழப்பீடு வழங்கிட கோரியும், ஈரப்பதம் 22 சதம் வரை நெல்லை கொள்முதல் செய்திடகோரியும், உளுந்து, பயிருக்கு போதுமான நிவாரணம் வழங்கிட கோரியும் கோரிக்கை முழக்க ஆர்ப்பாட்டம் சங்கத்தின் மாவட்ட துணை தலைவர் கே.உலகநாதன் முன். எம்.எல்.ஏ, தலைமையிலும், திருத்துறைப்பூண்டி ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் அ.பாஸ்கர் மற்றும் சங்க மாவட்ட துணைச்செயலாளர் கே.ஆர்.ஜோசப் முன்னிலையிலும் நடைபெற்றது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் பி.வி.சந்திரராமன், கட்சியின் ஒன்றிய செயலாளர் வி.ஜவகர், விவசாய சங்க ஒன்றிய செயலாளர் கோ.ஜெயபால், ஒன்றிய தலைவர் கே.பாலு, நகர செயலாளர் டி.பி.சுந்தர், சங்கத்தின் நகர தலைவர் பி.எம்.பக்கிரிசாமி ஆகியோர் கோரிக்கையை முன்வைத்து பேசினர்.

**மயிலாடுதுறை:** மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி புதிய பேருந்து நிலையம் எதிரே தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தினர் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# தமிழ்நாடு அரசு மயக்கவியல் நுட்புநர்கள் நலச் சங்க துவக்க விழா

தமிழ்நாடு அரசு மயக்கவியல் நுட்புநர்கள் நலச் சங்கத்தின் துவக்க விழா சங்கத் தலைவர் ஜி.லெனின் பிரைட் தலைமையில் திருச்சியில் நடைபெற்றது. ஜி.அம்பிகா வரவேற்புரை நிகழ்த்தினார்.

சங்கத்தின் நோக்கத்தை பொதுசெயலாளர் வி.செல்வராஜ் விளக்கினார். டி.சாந்தக்குமார், மாநிலப் பொருளாளர் ப.மஹாலெட்சுமி முன்னிலை வகித்தனர்.

சமூக சமத்துவத்திற்கான டாக்டர் சங்கத்தின் பொதுச்செயலாளர் டாக்டர் ஜி.ஆர்.இரவீந்திரநாத் சங்கத்தை துவக்கி வைத்து சிறப்புரை ஆற்றினார்.

தற்பொழுது வழங்கப்படும் அடிப்படை ஊதியம் ரூ.1650 என்பதை, ரூ.2400 ஆக உயர்த்தி வழங்க வேண்டும். பணியில் சேர்ந்த 5 ஆண்டு நிறைவில் கிரேடு 1 என்ற பதவி உயர்வை வழங்கிட வேண்டும்.கிரேடு 1 பதவிகளை அதிகப்படுத்த வேண்டும். மயக்கவியல் நுட்புநர்களுக்கான காலிப்பணியிடங்களை உடனடியாக நிரப்பிட வேண்டும்.

அறுவை அரங்கம் உள்ள மருத்துவக் கல்லூரிகள், மாவட்ட மருத்துவமனைகள், தாலுக்கா மருத்துவமனைகள் உட்பட அனைத்து மருத்துவமனைகளிலும் புதிய பணியிடங்களை ஏற்படுத்தி வேலைவாய்ப்பின்றி உள்ள மயக்கவியல் நுட்புநர்களுக்கு வேலை வழங்கிட வேண்டும்.

12 மணிநேர வேலை என்பதை 8 மணிநேர வேலையாக குறைக்க வேண்டும். இட மாறுதல் கவுன்சிலிங் நடத்திட வேண்டும். மயக்கவியல் நுட்புனர்களுக்கான பணி என்ன என்ன என்பதை தமிழ்நாடு அரசு வரையறுத்து அரசாணை வெளியிட வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஏ.ரேவதி மாநில துணைப் பொருளாளர் நன்றி நவின்றார்.

# ஏஐடியுசி கொடிமரத்தை புல்டோசர் கொண்டு அகற்றுவதா?

## கோவையில் கண்டன ஆர்ப்பாட்டம்




கிணத்துக்கடவை அடுத்த கோவில் பாளையத்தில் ரூல்ஸ் கம்பெனிக்கு சொந்தமான நிறுவனம் ஒன்று உள்ளது. அந்த நிறுவனத்தில் நிரந்தர மற்றும் தற்காலிக தொழிலாளர்கள் என சுமார் 1000 தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள்.

சமீபத்தில் அந்த நிறுவனத்தில் வேலை செய்யும் தொழிலாளர்கள் ஏ.ஐ.டி.யூ.சி. சங்கத்தில் இணைந்து, சங்கப் பெயர் பலகை மற்றும் கொடி மரங்களை தொழிற்சாலை வாயில் அருகில் வைத்தனர்.

இதில் ஆத்திரமடைந்த நிர்வாகத்தின் தூண்டுதலின் பேரில் எவ்வித முன்னறிவிப்பும் செய்யாமல் நெடுஞ்சாலைத்துறை உதவி பொறியாளர், கிணத்துக்கடவு வட்டாட்சியர், கோவில்பாளையம் ஆய்வாளர், கிராம நிர்வாக அலுவலர் ஆகியோரின் பாதுகாப்புடன் புல்டோசர் வைத்து கொடி மரம் மற்றும் பெயர் பலகை அப்புறப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் தொழிற்சாலை நிர்வாகம் சங்கத்தில் சேர்ந்த தொழிலாளர்களை பழி வாங்கும் நோக்கில் 9 பேரை தொலை தூரங்களுக்கு பணியிடம் மாற்றம் செய்துள்ளது.

எனவே, ஏ.ஐ.டி.யூ.சி. தொழிற்சங்கத்தினர் கோவை தெற்கு வட்டாட்சியர் அலுவலகம் அருகில் பெயர் பலகை மற்றும் கொடி மரத்தை அப்புறப்படுத்திய அதிகாரிகளை கண்டித்தும், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க கோரியும், பழிவாங்கும் நோக்கத்தோடு தொழிலாளர்களை மாநிலம் விட்டு மாநிலம் தொலைதூரங்களுக்கு பணியிட மாற்றம் செய்திருப்பதை கண்டித்தும், பணியிட மாற்றத்தை திரும்ப பெற வலியுறுத்தியும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு ஏ.ஐ.டி.யூ.சி. மாநில செயலாளர் எம். ஆறுமுகம் தலைமை தாங்கினார்.

கோவை மாவட்ட பொறியியல் பொது தொழிலாளர் சங்கத்தின் பொது செயலாளர் கே.எம். செல்வராஜ், கௌரவ தலைவர் வழக்கறிஞர் கே. சுப்பிரமணியன், துணைத் தலைவர் வழக்கறிஞர் எஸ். ராதாகிருஷ்ணன், பொருளாளர் ஏ. சுப்பிரமணியம், என். ரமேஷ்குமார் மற்றும் சி.சிவசாமி, எல்.செல்வம், சோமசுந்தரம், ஆர்.பாலகிருஷ்ணன், கே. ரவீந்திரன், கே.ஆர். தங்கராஜ், சக்திவேல் மாமன்ற உறுப்பினர்கள் பிரபாரவீந்திரன், சாந்திசந்திரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# சமாதான ஒருமைப்பாட்டு கழக மாவட்ட மாநாடுகள்




**திருச்சி:** அகில இந்திய சமாதான ஒருமைப்பாட்டுக் கழகத்தின் திருச்சி மாவட்ட மாநாடு பேராசிரியர் எஸ்.அய்யம்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. இம்மாநாட்டில் டாக்டர் ஜி.ஆர்.ரவீந்திரநாத் சிறப்புரையாற்றினார்.

திருச்சி மாவட்ட வங்கி ஊழியர் சங்க அரங்கில் நடைபெற்ற இம் மாநாட்டில், தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின், மாநில செயற்குழு உறுப்பினர் எம்.செல்வராஜ், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் திருச்சி மாநகர, மாவட்டச் செயலாளர் எஸ். சிவா மற்றும் மாநாட்டு ஒருங்கிணைப்பாளர் ஆர். மணிமோகன் ஆகியோர் உரையாற்றினர்.

மாநாட்டில், அகில இந்திய சமாதான ஒருமைப்பாட்டு கழகத்தின் மாவட்ட தலைவராக பேராசிரியர் எஸ். அய்யம்பிள்ளை, செயலாளராக ஆர். மணிமோகன் மற்றும் பொருளாளராக வே. நடராஜா ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

**மதுரை:** அகில இந்திய சமாதான ஒருமைப்பாடு கழக மதுரை மாவட்ட மாநாடு, மூட்டா அரங்கில் ந.ஜீவானந்தம் தலைமையில் நடைபெற்றது.

மாநில துணை செயலாளர் பா.செந்தில்குமார் மாநாட்டு துவக்க உரையாற்றி மாநாட்டைத் தொடங்கி வைத்தார். ஜி.சி.மனோகரன் வரவேற்புரை வழங்க, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக்குழு உறுப்பினர் ஆர்.ராஜேஸ்வரி முன்னிலை வகிக்க, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் எம்.எஸ்.முருகன், திராவிட கழக பெரியார் நெறியாளர் பி.வதராசன், காங்கிரஸ் டி.மகேஸ்வரன், ஃபார் வேர்டு பிளாக் வி.எஸ்.நவமணி, மதிமுக எஸ்.மகபூப்ஜான், இந்திய கலாச்சார நட்புறவு கழக மாநில செயலாளர் ஆர்.ஜெயராமன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ம.கணேசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

பேராசிரியர் பி.கே.பெரியசாமி ராஜா சிறப்புரையாற்றினார். பி.வீரணசிங்கம் நன்றி கூறினார்.


தலைமைக் குழுவாக வி.எஸ்.நவமணி அகில இந்திய ஃபார்வேர்டு பிளாக், எஸ்.மகபூப்ஜான் மதிமுக, டி.மகேஷ்வரன் இந்திய தேசிய காங்கிரஸ், பி.வரதராசன் பெரியார் நெறியாளர், திராவிட கழகம், என்.பாலசுப்பிரமணியன் சமூக ஆர்வலர், வி.ராஜலட்சுமி இந்திய தேசிய மாதர் சம்மேளனம் ஆகியோரும்

தலைவராக வி.விருமாண்டி, துணை தலைவர்களாக பெ.சுப்புராஜ், எம்.காசிமாயன், பொது செயலாளர்களாக ந.ஜீவானந்தம், பெ.விஜயகுமார், துணை செயலாளர்களாக ஏ.பி.பழனிச்சாமி, பி.வீரணசிங்கம், பொருளாளராக எஸ்.திருப்பதி ஆகியோரும் தேர்வு செய்யப்பட்டனர்.

**விருதுநகர்:** அகில இந்திய சமாதான ஒருமைப்பாட்டு கழகத்தின் விருதுநகர் மாவட்ட மாநாடு சாத்தூரில் வி.கே.சுப்ரமணியம் தலைமையில் நடைபெற்றது. சாகித்திய அகாதமி விருது பெற்ற எழுத்தாளர் பொன்னீலன் மாநாட்டை துவக்கி வைத்தார்.

கன்னியாகுமரி முதல் சென்னை வரை இவ்வமைப்பு நடத்திய பாதயாத்திரை யையும் பல்வேறு இயக்கங்களையும் பெருமையோடு விளக்கினார். we shall overcome பாடலை சமாதான அமைப்பு பாடி எழுச்சியூட்டியதை கூறினார்.ராஜபாளையம் வி.கே.சுப்ரமணியம் பழைய ராமநாதபுரம் மாவட்டத்தில் சமாதான ஒருமைப்பாட்டு கழகத்தின் செயல்பாடுகளின் பசுமையான நினைவுகளை எடுத்துரைத்தார்.டாக்டர் அறம் பாரதிதாசனின் கெட்ட போரிடும் உலகைவேரோடு வீழ்த்துவோம் என்ற பாடலைப் பாடி சமாதான இயக்கத்தின் தேவையை வலியுறுத்தினார். மாவட்டச் செயலாளர் பாலசந்தரன் வேலை அறிக்கை மற்றும் வரவு செலவு கணக்கு வாசித்தார். மாநில மையத் திலிருந்து க.முத்தியாலுவும், சைதைஜெ சமாதான இயக்கத்தின் நோக்கங்கள், சர்வதேச அளவில் சமாதான இயக்கத்தின் பணிகள், ஐ நா சபையால் அங்கீகரிக்கப்பட்டதையும் விவரித்து சமாதான ஒருமைப்பாட்டு கழகத்தின் செயல்பாட்டால் போரற்ற உலகை உருவாக்கி மனித குலத்தின் வாழ்வை மேம்படுத்தலாம் மனித நேரத்தை உயர்த்திப் பிடிக்கலாம் என்று சிறப்பான கருத்துரையாற்றினர். பழனி குமார், போஸ்பாண்டியன் தலைவர்களாகவும், ஜான் ஜவஹர் மற்றும் பகத் சிங் பொதுச்செயலாளர்களாகவும், சுந்தர்ராஜன் பொருளாளராகவும் மற்றும் பலர் நிர்வாகிகளாக தேர்வு செய்யப்பட்டனர். ஜான் ஜவஹர் தொகுப்பாளராக செயல்பட்டார்.

# வி.தொ.ச. ஒன்றிய மாநாடுகள்



**தருமபுரி:** தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்க தருமபுரி ஒன்றிய 6வது மாநாடு சங்க ஒன்றிய தலைவர் ஜி.ராஜகோபால், லட்சுமி, மல்லிகா ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. மாநாட்டுக் கொடியை ஒன்றிய தலைவர் ஜி.ராஜகோபால்ஏற்றி வைத்தார். மாவட்ட தலைவர் ஜி.மாதையன் மாநாட்டை துவக்கி வைத்து பேசினார். மாநாட்டை வாழ்த்தி மாவட்ட துணைத்தலைவர் என்.முருகேசன், மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள் வெ.பை. மாதையன், எல்.சி.கிருஷ்ணன் ஆகியோர் பேசினர். வத்தல்மலை ஜி.ராஜகோபால் தலைவராகவும், சின்னகாம்பட்டி ஜி.பச்சாகவுண்டர் செயலாளராகவும், இராமதாஸ் தண்டா எம் முண்னு பொருளாளராகவும், ஒன்றிய துணைத்தலைவராக கே.ராஜமாணிக்கம், துணைச் செயலாளராக பி.கோவிந்தசாமி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

தருமபுரியில் இருந்து வத்தல் மலைக்கு கூடுதலாக இன்னொரு பேருந்து இயக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**கடத்தூர்:** தமிழ்மாநில விவசாய தொழிலாளர் சங்க கடத்தூர் ஒன்றிய 2 வது மாநாடு சுங்கர அள்ளியில் நடைபெற்றது. ஒன்றிய தலைவர் ராமசந்திரன், ஒன்றிய பொருளாளர் முத்தமிழ்செல்வி, பால்சிலம்பு ராணி ஆகியோர் தலைமை தாங்கினர். மு.குப்புசாமி வரவேற்புரையாற்றினார்.

ஒன்றிய மாநாட்டை சங்க மாவட்ட தலைவர் ஜி.மாதையன் துவக்கி வைத்து பேசினார். மாநாட்டை வாழ்த்தி சங்க மாவட்ட துணைத்தலைவர்கள் ஜி.ராஜகோபால், என். முருகேசன், மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் வெ.பை.மாதையன் பேசினர். ஒன்றிய தலைவராக குண்டல் மடுவு ஆர்.இராமசந்திரன், ஒன்றிய செயலாளராக சில்லார அள்ளி எம்.சரவணன், பொருளாளராக முத்தமிழ்செல்வி, துணைத்தலைவராக பால்சிலம்பு தங்கராஜ், அழகுதுரை, துணை செயலாளராக டி.சந்திரன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

சுங்கர அள்ளி கிராம ஊராட்சியில் இருக்கும் ஆதிதிராவிடர் குடியிருப்பில் பழைய தொகுப்பு வீடுகள் அனைத்தும் பழுதடைந்துள்ளது இதனை பராமரிப்பு செய்ய வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**நல்லம்பள்ளி:** தமிழ்மாநிலவிவசாய தொழிலாளர் சங்க நல்லம்பள்ளி ஒன்றிய 4வது மாநாடு சங்க ஒன்றிய தலைவர் எல்.சி.கிருஷ்ணன், வி.செல்வம், அலமேலு எத்துராஜ், கமலாமாது, பார்வதிரவி ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

மாநாட்டு சங்க கொடியை ஒன்றிய தலைவர் எல்.சி.கிருஷ்ணன் ஏற்றினார். அஞ்சலி தீர்மானத்தை மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் வெ.பை.மாதையன் வாசித்தார். மாவட்டக்குழு உறுப்பினர் ஜி.சம்பத் வரவேற்புரையாற்றினார். சங்க மாவட்ட தலைவர் ஜி.மாதையன் துவக்கி வைத்து பேசினார். மாவட்ட துணைச்செயலாளர் ஜி. பச்சாகவுண்டர் வாழ்த்தி பேசினார்.

### இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஆண்டிபட்டி ஒன்றியகுழு

# அலுவலக அடிக்கல் நாட்டு விழா



இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஆண்டிபட்டி ஒன்றியகுழு அலுவலகம் (தா.பா.நினைவு இல்லம்) கட்டுவதற்கு கட்சியின் மாநில செயலாளர் இரா.முத்தரசன் அடிக்கல் நாட்டினார்

நிகழ்ச்சியில் தேசிய நிர்வாகக்குழு உறுப்பினர் டி.எம். மூர்த்தி, மாவட்ட செயலாளர் கி.பெருமாள், மாவட்டதுணை செயலாளர் வே.பரமேஸ்வரன், ஒன்றிய செயலாளர் பா.பிச்சைமணி, நகர செயலாளர் க.முனீஸ்வரன், 10 வது வார்டு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கவுன்சிலர் மீனாட்சி, திமுக கிழக்கு ஒன்றிய செயலாளர் பெ.ராஜாராம், திமுக நகர செயலாளர் பூஞ்சோலை சரவணன், திமுக 14 வது வார்டு கவுன்சிலர் பி.சரவணன் 16 வது சிபிஎம் கவுன்சிலர் சின்னன் ஆண்டிபட்டி ஒன்றிய துணை சேர்மன் டி.ஆர்.என். வரதன் மற்றும் தி.க மாவட்ட துணை தலைவர் ஸ்டார் நாகராஜ் மற்றும் கூட்டணி கட்சி தலைவர்கள் நண்பர்கள் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

# விசைத்தறி தொழிலாளர் கஞ்சிதொட்டி திறக்கும் போராட்டம்

விருதுநகர் மாவட்டம் இராஜபாளையம் அருகிலுள்ள தளவாய்புரத்தில் 600 விசைத்தறிகள் உள்ளன. இதில் 1000க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணியாற்றி வருகிறார்கள். 3ஆண்டுகளுக்கு ஒருமுறை கூலி உயர்வு ஒப்பந்தம் போடப்படும். இவ்வாண்டு பேச்சு வார்த்தையை நடைபெறவில்லை. உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும் மாவட்ட நிர்வாகத்திடம் மனு அறிந்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனவே ஒருவார காலமாக வேலைநிறுத்தம் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் ஏஐடியுசி மற்றும் சிஐடியு சங்கங்கள் சார்பில் தளவாய்புரம் செட்டியார்பட்டி கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம் முன்பு கஞ்சிதொட்டி திறக்கும் போராட்டம் நடைபெற்றது. ஏஐடியுசி மாவட்ட செயலாளர் முத்துமாரி, சிபிஐ இடைக்கமிட்டி செயலாளர்கள் கணேசமூர்த்தி, இராமச்சந்திரன் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டார்கள்.

# சூளை என்ற பெயரில் மண்வளம் சூறை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஆர்ப்பாட்டம்

தென்காசி மாவட்டம் வருவாய் துறையை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. நகர செயலாளர் பாலசுப்பிரமணியன் தலைமை தாங்கினார். கோவிந்தன், லெட்சுமனன் முன்னிலை வகித்தனர். மாவட்ட செயலாளர் டி.இசக்கித்துரை கண்டன உரையாற்றினார். செங்கல் சூளை என்ற பெயரில் மண்வளத்தை கொள்ளை அடிப்பதை தடுக்காத வட்டாட்சியரை கண்டித்தும், விளைச்சல் பயிர்களை காட்டு பன்றிகள் சேதப்படுத்துவதால் வனவிலங்கு பட்டியலில் இருந்து காட்டுப் பன்றியை அகற்றிட வேண்டும் என வலியுறுத்தியும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

# இந்திய கம்யூனிஸ்டு கட்சி புதிய கிளை துவக்கம்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி புதிய கிளை அமைப்பு கூட்டம் மதுராந்தகம் ஒன்றியம் இந்திராநகரில் பா.மணிகண்டன் தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட செயலாளர் ஏ.ராஜ் குமார், மாவட்ட துணை செயலாளர் வி.வீராசாமி, மாவட்ட குழு உறுப்பினர் கே.வி.சேகுவேராதாஸ், மெய்யூர் கிளை செயலாளர் செ.இன்பராஜ், இளைஞர் பெருமன்றம் தொகுதி செயலாளர் எம்.நாகராஜ் ஆகியோர் பங்கேற்றனர். கிளையின் புதிய செயலாளராக கி.கதிர்வேல் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டார். இதில் ஜனசக்தி சந்தா வழங்கப்பட்டது.

## இந்த வார தம்பிக்குறள்

### 106. அடுத்தடுத் தோதுதல்

**ஓதுதல் ஒன்றும் உபாயமில்லை ஓர்ந்துதைந்தால்**
**ஆகா ததூஉம் இல.**


படிப்பதற்கு, தந்திரமோ உத்திகளோ தேவை இல்லை. நன்றாகப் புரிந்து கொண்டு, அடிக்கடி முயற்சித்துப் படித்தால் கற்க இயலாதது எதுவும் இல்லை.

**அடுத்தடுத் தோதினால் அண்டாத தண்டும்**
**எடுத்துமே காப்ப தறிவு**

மீண்டும் மீண்டும் கற்றால், இதுவரை கற்க 'இயலாது' என எண்ணியவையும் புரியும். கற்க இயலும். அவற்றை மனதில் பதிவு செய்து காக்க வேண்டியது அவசியம். அதுவே அறிவு.

## நூல் நயம்

## கம்யூனிஸ்ட் அகிலம் வரலாற்று சுருக்கம்




சாவியத் வெற்றியின் வெளிச்சத்தில் உருவாகியது மூன்றாவது கம்யூனிஸ்ட் அகிலம். அதன் வரலாற்று சுருக்கமே, அ.சோபலெவ், கி. ஷிரினியா, ஃபி ஃபீர்சவ் ஆகியோர் எழுதிய கம்யூனிஸ்ட் அகிலம் என்கிற இந்நூல்.

இந்த நூல் கம்யூனிஸ்ட் அகிலம் அல்லது மூன்றாம் அகிலம் அல்லது காமிர்ன்டான் என்று அழைக்கப்பட்ட உலக பொதுவுடமை இயக்கங்களுடைய கூட்டமைப்பின் சுருக்கமான வரலாறு ஆகும்.இதனை எழுதியோர் சோவியத் ஒன்றிய கம்யூனிஸ்ட் கட்சியின் மைய குழுவில் செயல்பட்ட மார்க்சிய, லெனினிய ஆய்வு நிறுவனத்தைச் சேர்ந்த அறிஞர்கள் ஆவர்.

மூன்றாவது கம்யூனிஸ்ட் அகிலம் 1919 முதல் 1943 வரை செயல்பட்டது. இந்த காலத்தில் உலக புரட்சி இயக்கங்கள் முகம் கொடுத்த சிக்கல்கள் இவ்அகிலத்தில் விவாதிக்கப்பட்டன, தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. அதன் மூலம் புரட்சி இயக்கங்கள் வரலாற்றின் சக்கரத்தை முன் நகர்த்தி சென்றன. மூன்றாவது கம்யூனிஸ்ட் அகிலம் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர கட்சிகளை தோற்றுவித்தது. இந்த கட்சிகள் புது வகையானவை .சித்தாந்த வழியிலும், அரசியல் வழியிலும் போதனைப் பெற்று பயிற்றுவிக்கப்பட்டவை,நிறுவன வழியில் ஐக்கியம் அடைந்தவை, மிகவும் சிக்கலான வரலாற்று நிலைமைகளில் மக்கள் பெருந்திரளருக்கு அவர்களது வர்க்கப் போராட்டத்தில் வழிகாட்டும் வல்லமை வாய்ந்தவை.

மூன்றாவது கம்யூனிஸ்ட் அகிலம் மார்க்ஸ், ஏங்கல்சின் மரபுகளை, போல்ஷிவிசத்தின் மரபுகளை விட்டு விலகாது தொடர்ந்து அனுசரித்து மார்க்சிய லெனினியத்தைச் சர்வதேச தொழிலாளி வர்க்க இயக்கத்துடன் ஒருசேர இணைத்து விட்டது. ஒரு புதிய புரட்சிகரமான அகிலத்தை நிறுவ வேண்டும் என்ற கருத்தை முதல் உலகப்போரின் தொடக்கத்திலேயே இரண்டாவது ஆங்கிலத்தின் தகர்வைக் தொடர்ந்து லெனினும், போல்ஷிவிக்குகளும் முன் வைத்தனர்.

உலக பாட்டாளி வர்க்க இயக்கம் இரண்டில் ஒரு வழியை தேர்வு செய்து கொள்ள வேண்டியதாயிற்று, ஒன்று வரலாற்று வழியில் அவசியமான அதன் புரட்சி நோக்கங்களை துறந்துவிட்டு முதலாளித்துவ வர்க்கத்துடன் சமரசம் செய்து கொள்ளுதல், இல்லையேல் சமூக தேசிய வெறியிடமிருந்து உறுதியாக முறித்துக் கொண்டு பாட்டாளி வர்க்கத்தின் நலன்களை பாதுகாக்க கூடியதான தொழிலாளி வர்க்கத்தின் மாபெரும் போதனை ஆசிரியர்கள் மார்க்சும், ஏங்கல்சும் துவக்கி வைத்த சர்வதேசிய மரபுகளைத் தொடர்ந்து பற்றி ஒழுகக் கூடியதான ஒரு புதிய சர்வதேசப் புரட்சி நிறுவனத்தை தோற்றுவித்தல் என்னும் அடிப்படையில் மூன்றாவது கம்யூனிஸ்ட் அகிலம் தோற்றுவிக்கப்பட்டது. இதன் வரலாற்றுச் சுருக்கமே இந்நூல், இந்நூலை அனைவரும் வாங்கிப் படிக்கவும்.

– இன்சுவை பாரதி

| | | |
|---|---|---|
| நூலாசிரியர்கள் | : | அ.சோபலெவ், கி.ஷிரினியா, ஃபி ஃபீர்சவ் தமிழில், ரா.கிருஷ்ணய்யா |
| பக்கம் | : | 104 விலை : 100 |
| வெளியீடு | : | நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41 பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை–50 |

## புறநானூறும் பொருளியல் வாழ்வும்




இலக்கியங்கள் மனிதனை உயர்நிலைக்கு இட்டுச் செல்லும் இலக்கினை கொண்டவை. மனிதனின் வாழ்க்கையில் உள்ளதை உள்ளபடியே கூறும் கால கண்ணாடியாக மட்டுமல்லாமல், எப்படி வாழ வேண்டும் என்பதை எடுத்து இயம்பும் வழிகாட்டியாகவும் விளங்குகின்றன. அந்த வகையில் புறநானூறும் பொருளியல் வாழ்வும் என்கிற தலைப்பில் மலர்விழி அவர்களின் முனைவர் பட்ட ஆய்வு ஏடு ஆகும் இந்நூல்.

தமிழ் இலக்கியங்களில் மிகவும் தொன்மையானவை சங்க இலக்கியங்கள் ஆகும்.இன்று பேச்சு வழக்கில் உள்ள இந்திய மொழிகளின் இலக்கியங்களில் மிகப் பழமையானது சங்க இலக்கியமே என்பது ஆராய்ச்சியாளர்கள் கண்ட முடிவு. சங்க இலக்கியம் அகம், புறம் என்னும் இரு பெரும் பகுப்பு உடையதாகும். பண்டைத் தமிழரின் காதல், வீரம் என்னும் பேர் உணர்வுகளின் அடிப்படையில் இப்ப பாகுபாடுகள் அமைந்துள்ளன. சங்க இலக்கியங்கள் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என பகுக்கப்பட்டுள்ளன. எட்டுத்தொகை நூல்களுள் நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, கலித்தொகை, ஐங்குறுநூறு ஆகியவை அகப்பொருள் பற்றிய பாடல்களைக் கொண்டவை. பதிற்றுப்பத்தும், புறநானூறும் புறப்பொருள் சார்ந்தவை. பரிபாடலில் அகமும் புறமும் கலந்த பாடல்கள் உள்ளன.

நுகர்தலில், தன்னல நுகர்வு, பொது நல நுகர்வு என இரு நிலைகள் காணப்படுகின்றன. தன் பெண்டு, தன் பிள்ளை, தான் என்று உண்டு களிப்போர் தன்னல நுகர்வுகாரர்கள். சங்கப் புலவர் பெருஞ்சித்திரனாரை போல் ஊரோடும் உறவோடு பகிர்ந்து நுகர்தல் பொது நல நுகர்வு.பசியும் பஞ்சமும் மிகுந்த வீடு பெருஞ்சித்திரனார் வீடு, பால் குடிக்க மார்பை தேடி ஏமாந்த பிள்ளை, அன்னைமுகம் நோக்க, புலவர் முகம் நோக்கி மனைவி அழ, வள்ளல் குமரன் முகம் நோக்கி புலவர் ஓடிச் சென்றார். வீட்டில் குவிந்த பெரும் பொருளை மனைவியிடம் காட்டி, நாளைக்கு வேண்டுமென வைக்காமல் ஊருக்கும், உறவுக்கும் அல்லி கொடு என்று பொதுநல நுகர்வு மனப்பான்மையோடு

இன்னோர்க் கென்னாது, என்னோடு சூழாது,

வல்லாங்கு வாழ்தும் என்னாது நீயும், எல்லோருக்கும் கொடு என பெருஞ்சித்திரனார் பாடியுள்ளார். புறநானூற்றுப் பாடல்கள் சங்ககாலத் தமிழ் மக்களின் வாழ்வியலை பொருளியலோடு இணைத்து பேசுகிறது. இதை கோட்பாட்டு ரீதியில் ஆசிரியர் நுட்பமாக விளக்கி இருக்கிறார். இந்நூலை அனைவரும் வாங்கிப் படிக்க வேண்டுகிறோம்

–சமரன்

| | | |
|---|---|---|
| நூலாசிரியர் | : | பி. மலர்விழி |
| பக்கம் | : | 200 விலை: 450 |
| வெளியீடு | : | பாவை பப்ளிகேஷன்ஸ், 16 , ஜானி ஜான் கான் சாலை, ராயப்பேட்டை, சென்னை – 14 |

சுழலும் உலகம்

## பிரான்ஸ் நாட்டை கதிகலங்க வைத்த மக்கள் எழுச்சி



பிரான்ஸ் நாட்டில் ஓய்வூதிய சீர்திருத்தங்களுக்கு எதிரான பொது வேலை நிறுத்தத்தில், 50 லட்சத்துக்கு மேற்பட்டோர் பங்கேற்றனர். இதனால் நாடு முழுவதும் இயல்பு வாழ்க்கை முடங்கியது.

பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மேக்ரோன் ஓய்வூதிய சீர்திருத்தங்களை அறிவித்துள்ளார். இதன்படி தொழிலாளர்கள், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், ஓய்வு பெறும் வயது 64 ஆக அதிகரிக்கிறது. ஓய்வூதியம் பெறுவதற்கு 43 ஆண்டுகள் பணியாற்ற வேண்டும் என்பது கட்டாயமாக உள்ளது. இந்த ஓய்வூதிய சீர்திருத்தத்திற்கு பிரான்ஸ் நாட்டில் கடும் எதிர்ப்பு எழுந்துள்ளது. இந்தச் சீர்திருத்தங்களை 80 விழுக்காடு மக்கள் ஏற்கவில்லை என கருத்துக் கணிப்புகள் தெரிவித்துள்ளன.

எட்டு தொழிற்சங்கங்கள் கூட்டாக அழைப்பு விடுத்த பொது வேலை நிறுத்தம் ஜனவரி 19 ஆம் தேதி நடைபெற்றது. இந்த வேலைநிறுத்தத்தில் ரயில் மற்றும் பேருந்துப் போக்குவரத்து, எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் ஈடுபட்டனர் இவர்களுடன் ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள், வங்கிப் பணியாளர்கள், வாடகை ஊர்தி ஓட்டுநர்கள் கலந்துகொண்டனர். இந்தப் பொதுவேலை நிறுத்தத்திற்கு எதிர்க்கட்சிகளும் ஆதரவு தெரிவித்தன.

ஓய்வூதிய சீர்திருத்தத்தை அதிபர் இமானுவேல் மேக்ரோன் கைவிட வேண்டும் என்ற கோரிக்கையுடன், பணவீக்கம் அதிகரிப்பு, உக்ரைன் போரால் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு போன்றவையும் மக்களின் கோபத்தை கிளர்ந்து எழச் செய்துள்ளன.

தலைநகர் பாரிஸில் மட்டும் வரலாறு காணாத அளவுக்கு 4 லட்சம் பேர் பங்கேற்ற பிரம்மாண்ட பேரணி நடைபெற்றது. மார்செய்ல்ஸ், டூலூய்ஸ் (Toulouse) நகரங்களில் ஒன்றை லட்சத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்ற மாபெரும் ஊர்வலம் நடைபெற்றது. இதேபோன்று 200 நகரங்களில் தலா 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்ற பேரணிகள் நடைபெற்றன.

பொது வேலைநிறுத்தமும் பேரணியும் துளி வன்முறைக்கும் இடமின்றி அமைதியாக நடைபெற்றன. காவல்துறையும் கண்ணீர் புகைக் குண்டுகளை வீசவோ, தடியடி நடத்தவோ இல்லை. பொதுப் போக்குவரத்து முற்றாக முடங்கியது. விமானங்கள் ரத்து செய்யப்பட்டன. 70 விழுக்காட்டுக்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் பணிக்குச் செல்லவில்லை.

பிரான்ஸ் நாட்டைக் கதிகலங்க வைத்த இந்த பொது வேலைநிறுத்தம், ஜனவரி 19 மற்றும் ஜனவரி 31 ஆம் தேதி நடைபெற்றது. வரலாற்றில் பெரும் சாதனை படைத்துள்ள பிரெஞ்சு பாட்டாளி வர்க்கம், மீண்டும் போராட்ட களத்தில் இறங்கியுள்ளது. பல மில்லியன் தொழிலாளர்கள் பங்கேற்ற பேரணிகள், பிரான்ஸ் நாட்டை மட்டுமல்ல, ஐரோப்பிய நாடுகளையும் அலற வைத்துள்ளன.

(ஜனசக்தி முகநூல் மற்றும் யூட்யூப்பில் காணொலிகளைப் பார்க்கலாம்)

Janasakthi Tholaikatchi

– மணிமாறன், பத்திரிகையாளர்

### தொடர் மழையால் பாதிக்கப்பட்ட
## விவசாயிகளுக்கு முழு இழப்பீடு வழங்குக!

### தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தினர் அமைச்சர் அர.சக்கரபாணியிடம் கோரிக்கை



தஞ்சாவூர் மாவட்டம் காவிரிபாசன பகுதியில் சம்பா தாளடி நெல் சாகுபடி பணிகள் முழுமையாக முடிந்து நெல் அறுவடை தொடங்கிய நிலையில், எதிர்பாராத பருவம் தவறிய தொடர் பெரு மழையால் சாகுபடி பயிர்கள் கடும் சேதம் அடைந்துள்ளன அறுவடை முடிந்தும் வரப்புகளிலும், நெல் தரிசுநிலத்திலும் ஊடு பயிராக வளர்ந்த உளுந்து, பாசிப்பயிர், நிலக்கடலை மற்றும் புஞ்சை தானிய பயிர்களும் சேதமடைந்துள்ளன.

விவசாயிகள் அறுவடை செய்து அரசின் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் தானிய சேமிப்பு இடங்களில் வைத்திருந்த நூற்றுக்கணக்கான நெல் மூட்டைகள் முளைத்துவிட்டன. இதனால் பெரும் பாதிப்புகளுக்கு ஆளாகி உள்ள விவசாயிகளுக்கு பயிர் காப்பீட்டு திட்டத்தின் மூலம் முழு இழப்பீட்டு தொகை கிடைப்பதை உறுதி செய்து தமிழ்நாடு அரசின் நிவாரண நிதியும் சேர்த்து ஏக்கர் ஒன்றுக்கு ரூ.35 ஆயிரம் வழங்கிட வேண்டும்.


தொடர்ந்து பனிப்பொழிவு மற்றும் பெரும் மழையின் காரணமாக காற்றில் ஈரம் அதிகரித்துள்ள நிலையில் அரசுநேரடி நெல் கொள்ளுதல் நிலையங்களில் 22 சதவீதம் வரையிலான ஈரப்பதம் உள்ள நெல்லை கொள்முதல் செய்வதற்கு உத்தரவிட வேண்டும் என்ற கோரிக்கை மனுவை தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் சார்பாக மாவட்டச் செயலாளர் சாமு.தர்மராஜன் அமைச்சரிடம் வழங்கினார். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட துணைச் செயலாளர் ஆர்.செந்தில்குமார், ஒன்றிய செயலாளர் எம்.வெங்கடேசன், நகரச் செயலாளர் கே. ராஜாராமன் உள்ளிட்ட ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

# மாணவர் பெருமன்ற மாநாட்டு புகைப்படங்கள்










எஸ்.எப்.ஐ. மாநிலத் துணைத் தலைவர் சம்சீர் அகமது



ஏ.ஐ.எஸ்.எப். தேசிய நிர்வாகக் குழு உறுப்பினர் பூர்ணிமா.




16ம் பக்க தொடர்ச்சி

முறையில் சூறையாடுகிறது என்பதும், பிரதமர் மற்றும் அரசைச் சார்ந்து நிற்கும் நண்பர்களுக்கு நாட்டின் இயற்கை வளங்களும், நிதி ஆதாரங்களும் எந்தக் கட்டுப்பாடும் இன்றி திறந்து விடப்பட்டுள்ளன என்பதும் நிரூபணம் ஆகி உள்ளது.

பங்குச் சந்தை மற்றும் பொருளாதாரத்தை கடுமையாகப் பாதிக்கும் இத்தகைய பெரும் மோசடி மற்றும் சூழ்ச்சிகள் பற்றிய அறிக்கையை புறக்கணிக்க முடியாது.

வீழ்ச்சியடைந்து வரும் அதானி பங்குகளின் விலையை உயர்த்த மறுபடியும் பொதுத்துறை நிறுவனங்களை முதலீடு செய்ய வைக்க தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக தெரிகிறது.

இந்திய பொருளாதாரத்தையே ஒரு வணிகக் குழுமம் தன் விருப்பப்படி ஆட்டிப்படைத்துள்ள இந்த மோசமான நிகழ்வு குறித்த பிரச்சனையை விவாதிக்க வேண்டும் என நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் கோரினாலும், அரசு அதற்கு செவி சாய்க்காமல் கடந்து செல்ல முயற்சிப்பது வெட்ககரமானதாகும்.

உடனடியாக நாடாளுமன்ற கூட்டுக்குழு அமைத்து முழுமையாக விசாரணை நடத்த வேண்டும் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில நிர்வாக குழு கூட்டம் ஒன்றிய அரசை வலியுறுத்துகிறது.

## 2024 ல் நடைபெற உள்ள நாடாளுமன்ற தேர்தலை கருத்தில் கொண்டு, ஜாலங்கள் நிறைந்த நிதிநிலை அறிக்கைக்கு கண்டனம்

மாத வருவாய் பெறுவோரின் வருமானவரி வரம்பை உயர்த்தியுள்ளது போல தோற்றத்தை ஏற்படுத்தி, உண்மையில் அவர்களுக்கு எந்த நலனும் கிடைத்திடாத வகையில் வஞ்சக வலை விரிக்கப்பட்டுள்ளது. நாட்டின் பொருளாதாரத்தில் முதுகெலும்பாகவும், சுயசார்ப்புக்கு அடித்தளமாகவும் விளங்கி வரும் சிறு, குறு நடுத்தரத் தொழில் துறைக்கு ரூ. 9 ஆயிரம் கோடி என்பது கடலில் கரைத்து விட்ட பெருங்காயமாகும்.

விவசாயிகள் விளை பொருட்களுக்கு குறைந்த பட்ச ஆதரவு விலை நிர்ணயிக்க சட்டபூர்வு ஏற்பாடுகள் செய்வதில் நிதிநிலை அறிக்கை கவனம் செலுத்தவில்லை. ரூ.20 லட்சம் கோடி கடன் என்பது அவர்களின் கைகளுக்குக் கிட்டாத வெறும் கானல் நீராகும்.

கட்டுமானத் துறைக்கு உதவிக் கரம் நீட்டாத நிதிநிலை அறிக்கை, கட்டுமானத் தொழிலாளர்கள் உள்ளிட்ட 93 சதவீத அமைப்புசாராத் தொழிலாளர்கள், புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் நலனும் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது.

கர்நாடக மாநிலத்திற்கு சிறப்பு நிதியாக ரூ.5 ஆயிரம் கோடிக்கும் அதிகமான நிதி வழங்கும் நிதிநிலை அறிக்கை, தமிழ்நாடு அரசு வலியுறுத்தி ஜிஎஸ்டி இழப்பீடு உட்பட மாநிலத்திற்கு வழங்க வேண்டிய தொகையை வழங்க மறந்து விட்டது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தில் ஆண்டுக்கு 200 நாள் வேலை வழங்க வேண்டும். தினசரி வழங்கும் குறைந்தபட்ச ஊதியத்தை ரூ.600/ ஆக நிர்ணயித்து வழங்க வேண்டும் என வலியுறுத்தி வரும் நிலையில், அத்திட்டத்துக்காக வழங்கப்படும் நிதியில் மூன்றில் ஒரு பங்கு குறைத்து, 25 கோடி கிராமத் தொழிலாளர்களை வஞ்சித்துள்ளது.

நாட்டின் இருபுறமும் நீண்ட கடற்கரையும், லட்சக்கணக்கான மீனவ குடும்பங்களும், பாரம்பரியமான மீன்பிடித் தொழிலும் நடந்து வருவதை கருத்தில் கொள்ளாமல் மரபணு மாற்ற மீன் உற்பத்திக்கு மட்டுமே நிதிநிலை அறிக்கை கவனம் செலுத்தியிருப்பது மீனவர் சமூகத்திற்கு இழைக்கப்பட்ட அநீதியாகும்.

மொத்தத்தில் வாக்களித்து அதிகாரம் வழங்கிய வாக்காளர்களையும், நாட்டின் குடிமக்களையும் வழக்கம் போல ஏமாற்றியுள்ள நிதிநிலை அறிக்கை, அதிகார மையத்தில் அழுத்தம் தரும் பன்னாட்டு நிதி மூலதன சக்திகளின் கார்ப்பரேட் குழும நிறுவனங்களுக்கு ஆதரவாக பச்சை கொடி காட்டியுள்ளது.

மக்களுக்கும், தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக்கும், நாட்டுக்கும் எதிரான ஒன்றிய அரசின் நிதி நிலை அறிக்கையை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில நிர்வாக குழு கண்டிக்கிறது.

## பெருமழையால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு காப்பீடு நிவாரணம் வழங்குக!

தமிழ்நாட்டில் காவிரி படுகை மாவட்டங்களில், இந்த ஆண்டு நெற் பயிர் நல்ல விளைச்சல் கண்டுள்ளது. ஆனால் பருவம் தவறி பெய்து வருகிற பெருமழை காரணமாக ஒன்றரை லட்சம் ஏக்கருக்கும் அதிகமான விளை நிலங்களில் அறுவடை மேற்கொள்ள முடியவில்லை. அறுவடைக்கு காத்திருந்த பயிர்கள் தண்ணீரில் மூழ்கி நாசமாகி உள்ளன.

உடனடியாக சேதம் இருந்த பயிர்களை சரியான முறையில் கணக்கிட்டு காலதாமதம் இன்றி பயிர் காப்பீடு நிவாரணம் வழங்க வேண்டும் என தமிழ்நாடு அரசை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில நிர்வாக குழு ஏற்றுக் கொள்கிறது.

மேலும் நெல்லை முழுமையாக காய வைப்பதற்கான வானிலை இல்லாததால், ஈரப்பத கட்டுப்பாடுகளைத் தளர்த்தி நேரடி கொள்முதல் நிலையங்கள் வழியாக நெல் கொள்முதல் செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறது.

JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
**Posted on 11.02.2023 at Egmore RMS 1 / Patrika Channel.**
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57

# அதானி முறைகேடு, மக்கள் விரோத பட்ஜெட்டைக் கண்டித்து பிப்.13ல் மாவட்ட தலைநகர்களில் ஆர்ப்பாட்டம்

**ஒன்றிய அரசின் கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு ஆதரவான ஏழை, எளிய மக்களுக்கு எதிரான நிதிநிலை அறிக்கையை கண்டித்தும், வலியுறுத்தியும் வரும் 13.02.2023ல் நாடு முழுவதும் இயக்கம் நடத்துவது என்று தேசியக்குழுவின் அறைகூவலை ஏற்று தமிழ்நாட்டில் மாவட்ட தலைநகரங்களில் ஆர்ப்பாட்டம் நடத்துவது என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில நிர்வாக குழு கூட்டம் முடிவு செய்துள்ளது.**

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில நிர்வாகக்குழு தீர்மானம்

### அதானி குழுமத்தின் மோசடிகளை நாடாளுமன்ற குழு அமைத்து விசாரணை செய்க!

அதானி குழுமம் பங்கு கையாளுதல் மற்றும் கணக்கியல் மோசடி திட்டத்தில் பல்லாண்டு காலமாக ஈடுபட்டு வருவதாக, ஹிண்டன்பர்க் ஆராய்ச்சி நிறுவனம் ஒரு ஆய்வு அறிக்கையை வலுவான ஆதாரங்களுடன் வெளியிட்டுள்ளது.

அதானியின் நெருங்கிய உறவினர்களின் பெயரில் 1500க்கும் மேற்பட்ட கடல்சார் நிறுவனங்கள் மற்றும் போலியாக உருவாக்கப்பட்ட நிறுவனங்களைப் பயன்படுத்தி, வெளிநாட்டு நேரடி முதலீடுகளைப் பெற்றது போல செயற்கையான தோற்றம் உருவாக்கப்பட்டதாக அறிக்கை கூறுகிறது.

இந்தியாவின் மூலதனச் சந்தை கட்டுப்பாட்டாளரான இந்தியப் பங்குகள் மற்றும் பரிவர்த்தனை வாரியம் (செபி) மற்றும் மத்திய ஒழுங்குமுறை அமைப்பான இந்திய ரிசர்வ் வங்கி ஆகியவையும் இந்த முறைகேட்டுக்கு ஒத்துழைத்துள்ளதாக அறிக்கை கூறுகிறது.

ஐயத்துக்குரிய முறையில் பொதுத்துறை நிறுவனமான எல்ஐசி ரூ.78,000 கோடியை முதலீடு செய்துள்ளது மட்டுமின்றி, ஸ்டேட் வங்கி உள்ளிட்ட இந்தியாவின் பல பொதுத்துறை வங்கிகளும் பல்லாயிரம் கோடி ரூபாய்களை கடனாக வழங்கி உள்ளன.

2021–22ஆம் ஆண்டில் இந்தியப் பொருளாதாரம் மந்த நிலையில் இருந்தபோதும், கௌதம் அதானி திட்டமிட்ட மோசடிகளின் விளைவாகவே இரண்டாவது பெரிய பணக்காரராக உயர்ந்திருக்கிறார் என்பது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

சலுகை சார்ந்த முதலாளித்துவம் நாட்டின் பொருளாதாரத்தை அபத்தமான

தொடர்ச்சி 15ம் பக்கம்

# ஜனசக்தி சந்தா வசூல் இயக்கம்

**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில நிர்வாகக் குழுக் கூட்டம் 03.02.2023 மற்றும் 04.02.2023 தேதிகளில் (வெள்ளி, சனி) தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் மாநகரில் மு.அ.பாரதி தலைமையில் நடைபெற்றது.**

**அரசியல் நிகழ்ச்சிப் போக்கு, அரசியல் குறிப்பு பற்றிய அறிக்கையை மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் அறிமுகம் செய்தார்.**

**அரசியல் குறிப்பின் மீது விரிவாக விவாதிக்கப்பட்டது.**




ஒன்றிய அரசின் அதிகாரக் குவிப்பு நடவடிக்கைகளையும், பாஜகவின் வகுப்புவாத வெறுப்பு அரசியலை எதிர்ப்பதிலும், மாநில உரிமைகளை நிலைநாட்டி பாதுகாப்பதிலும் தி.மு.கழகம், உறுதியுடன் செயல்பட்டு வருகிறது.

அதே சமயம் சட்டமன்றத் தேர்தலில் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதிலும், தொழிலாளர் நலன் தொடர்பான கோரிக்கைகளை அணுகுவதிலும் பலவீனம் ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலையில் மக்கள் நலன் சார்ந்த கோரிக்கைகள் மீது வர்க்க, வெகுமக்கள் அமைப்புக்கள் தொடர் இயக்கங்களை மேற்கொள்ள வேண்டும்.

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியை மேலும் வலுப்படுத்துவது அவசியம் என்று முடிவு செய்யப்பட்டது.

### ஈரோடு (கிழக்கு) சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல்

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் போட்டியிட்டு வென்ற காங்கிரஸ் கட்சி சட்டமன்ற உறுப்பினர் திருமகன் ஈ.வே.ரா. மறைவின் காரணமாக 27.02.2023 ஆம் தேதி இடைத் தேர்தல் நடைபெறுகிறது.

இத்தேர்தலில் போட்டியிடும் காங்கிரஸ் கட்சி வேட்பாளர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவனை ஆதரித்து தேர்தல் பணியாற்றுவது என்றும், கே.சுப்பராயன் எம்.பி., நா.பெரியசாமி, எம். ஆறுமுகம், எம்.ரவி, ஆ.மோகன், த.பிரபாகரன் ஆகியோர் கொண்ட குழு, ஈரோடு தெற்கு, வடக்கு மாவட்டங்கள் ஒருங்கிணைந்து அமைத்துள்ள பணிக்குழு மூலம் தேர்தல் பணிகளை மேற்கொள்வது என்றும், இதன் ஒருங்கிணைப்பாளராக நா.பெரியசாமி செயல்படுவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

### கட்சி வளர்ச்சி நிதி:

கட்சி உறுப்பினர்கள் புதுப்பித்தல், சேர்த்தல் பணி முடிந்ததும், கட்சி வளர்ச்சி நிதி வலிக்கும் முறையை பின்பற்ற வேண்டும் என சிவகங்கை அமைப்பு நிலை மாநாடு வலியுறுத்தியுள்ளது. இதனை 2023 முதல் தொடங்குவது என நிர்வாகக் குழு முடிவு செய்தது.

கட்சியின் மாநிலக் குழு உறுப்பினர்கள் குறைந்தபட்சம் ரூ.1000/ மாவட்டக் குழு உறுப்பினர்கள் குறைந்தபட்சம் ரூ.500/ இடைக்குழு உறுப்பினர்கள் குறைந்தபட்சம் ரூ.200/ கட்சி உறுப்பினர்கள் தலா ரூ.100/ வீதம், குறைந்தபட்சம் கட்சி வளர்ச்சி நிதி வழங்குவது என்றும், அதிகபட்சம் அவரவர் உணர்வுக்கும், வசதிக்கும் தக்கபடி வழங்க வேண்டும் என முடிவு செய்யப்பட்டது. மேலும் பொதுமக்களிடத்தில் ஒவ்வொரு கிளையும் குறைந்தபட்சம் ரூ.5000/வசூல் செய்திட இடைக்கமிட்டி கூட்டத்தில் கிளை வாரியாக திட்டமிடல் வேண்டும். இந்த நிதி வசூலை முடித்து தனிநபர் வசூல் செய்திட பட்டியல் தயாரித்து வசூல் செய்திட வேண்டும். கட்சி வளர்ச்சி நிதி வசூலை பிப்ரவரி 15 ஆம் தேதி தொடங்கி, மார்ச் 31 ஆம் தேதியுடன் முடிப்பது என முடிவு செய்யப்பட்டது.

### ஜனசக்தி மற்றும் தாமரை இதழ் சந்தா சேர்ப்பு இயக்கம்

ஜனசக்தி வார இதழ், தாமரை மாத இதழ் சந்தா சேர்ப்பு எண்ணிக்கையை உயர்த்துவது குறித்து மதுரை, ஈரோடு, சென்னை, வேலூர் மற்றும் தஞ்சாவூர் ஆகிய மையங்களில் மண்டல அளவிலான ஆலோசனைக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. இதில் கட்சி மாவட்டச் செயலாளர்கள், ஜனசக்தி பொறுப்பாளர்கள், அந்தந்தப் பகுதிகளில் உள்ள மாநில நிர்வாகக் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இந்தக் கூட்டங்களில் எடுக்கப்பட்ட முடிவுகளை கட்சி மாவட்டக் குழுக்கள் திட்டமிட்டு அதற்கென நிர்ணயிக்கப்பட்ட கால எல்லைக்குள் நிறைவேற்ற வேண்டும் என திர்வாகக் குழு முடிவு செய்தது.

'ஜனசக்தி' யை நாளிதழாக்குவதற்கு தேவையான நிதி திரட்டுவது அவசியம். ஆயுள் சந்தாக்களை பெரும் எண்ணிக்கையில் சேர்ப்பது அதற்கான முதல் படி ஆகும். அதன் அடிப்படையில் மாவட்டத்திற்கு குறைந்த பட்சம் 100 ஆயுள் சந்தா சேர்த்திட வேண்டும்.

மேலும் மாவட்டத்தில் பரவலாக முகவர்களை நியமனம் செய்து அவர்கள் மூலமாக 'ஜனசக்தி' வினியோகத்தை அதிகரித்தல் வேண்டும். மேலும் மாவட்ட சிறப்பு மலர் வெளியிடுவது என்றும், மாவட்ட குழுக்கள் முழுமையாக ஒத்துழைக்க வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

இவைகள் அனைத்தும் முறையாக செயல்படுத்திட மாவட்ட அளவில் பொருத்தமான மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் ஒருவருக்கு பொறுப்பளிக்கப்பட்டு, அவருக்கு வேறு பொறுப்புகள் எதுவும் வழங்கிடாமல், முழு அளவிற்கு ஜனசக்தி, தாமரை, மற்றும் பிரசுரங்கள் விற்பனையில் கவனம் செலுத்திட செய்திடல் வேண்டும்.

**ஜனசக்திக்கு காலண்டர், சிறப்பிதழ், சந்தா, விளம்பரம் மற்றும் ஏஜென்சி ஆகிய பாக்கி தொகைகள் அனைத்தும் கட்சி மாவட்ட குழுக்கள் பொறுப்பேற்று பிப்ரவரி 20ம் தேதிக்குள் செலுத்தி முடிக்க வேண்டும்.**

2023 பிப்ரவரி மாதம் முழுமையும் ஜனசக்தி சந்தா வசூல் இயக்கம் நடத்தப்பட வேண்டும். மாவட்டங்கள் வசூலிக்க வேண்டிய சந்தா இலக்கையும் கூட்டம் முடிவு செய்தது.

Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **K.Subbarayan .,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.